CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உன்னதபுரீச்வர மாஹாத்மியம்

(மிலட்டூர் ஸ்தலபுராணம்)

வெளியீடு :

மிலட்டூர் ஸ்ரீ ஸத்சங்க சேவா கம்யூனிட்டி டிரஸ்ட், (Regd)

மிலட்டூர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உன்னதபுரீச்வரமாஹாத்மியம்

(மிலட்டூர் ஸ்தலபுராணம்)

பாகம் 1

பதிப்பு மற்றும் மொழிபெயர்ப்பு

சைவசித்தாந்தபிரவீண

T. கணேசன்

சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர்

பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிறுவனம்

(FRENCH INSTITUTE)

பாண்டிச்சேரி

வெளியீடு :

மிலட்டூர் ஸ்ரீ ஸத்சங்க

சேவா கம்யூனிட்டி டிரஸ்ட் (Regd)

மிலட்டூர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் விளக்கக் குறிப்பு

நூல் பெயர்	:	உன்னதபுரீச்வரமாஹாத்மியம்
தொகுப்பாசியர்	:	முனைவர். T. கணேசன்
மொழி	:	தமிழ், ஸமஸ்கிருதம்
எழுத்து	:	தமிழ், ஆங்கிலம், ஸமஸ்கிருதம்
எழுத்தளவு	:	13.5
அளவு	:	டெம்மி 1x5
பக்கம்	:	133
முதல் பதிப்பு	:	2011
பிரதிகள்	:	500
அச்சிட்டோர்	:	பாப்புலர் ஆப்செட், திருவையாறு.
வெளியீடு	:	மிலட்டூர் ஸ்ரீ ஸத்சங்க சேவா கம்யூனிட்டி டிரஸ்ட் (Regd) மிலட்டூர்.

நூல் கிடைக்குமிடம் :

Er. P. வேணுகோபாலன்

No5. தெற்குத்தெரு, மிலட்டூர், தஞ்சாவூர் மாவட்டம் – 614 301.

கைப்பேசி எண் : 9361999959

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருளடக்கம்

வ.எண்		பக்கம்
1.	அணிந்துரை	iv
2.	நன்றியுரை	vi
3.	வரலாற்றில் மிலட்டூர்	vii
4.	மிலட்டூர் கல்வெட்டியல் செய்தி	x
5.	முன்னுரை	xi
6.	SUMMARY OF CHAPTERS	xxxi
7.	உன்னதபுரீச்வரமாஹாத்மியம்	1 - 86

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அணிந்துரை

உன்னதபுரீச்வர மாஹாத்மியம் என்ற மிலட்டூர் ஸ்தலபுராணத்தை வடமொழியிலிருந்தும், சுவடி வடிவிலிருந்தும், தமிழ் மொழியில் வடித்துக் கொடுத்த பெருமை முனைவர் தி. கணேசன் அவர்களுக்கே சாரும் தனிப்பெருமையாகும். பாரத நாட்டின் ஆன்மீக வாழ்விற்கு துணை செய்வன கோயில்களும், புண்ணியத் தலங்களும் ஆகும். முனிவர்களால் வழிபாடு பெற்ற பல சிவத்தலங்களின் தலபுராணங்கள் வடமொழியிலேயே அதிகமாக உள்ளன. அவற்றுள் சில நூல்களே தமிழாக்கம் பெற்று பக்தர்களே நல்வழிப்படுத்தி வேண்டுவோற்கு வேண்டிய வரமளிக்கும் திறம்பெற்ற வழிகாட்டி நூலாக அமைந்திருக்கின்றன. அந்த வரிசையில் இந்நூல் பக்தர்களுக்கு ஒரு வரப்ரஸாதமாகும்.

உன்னதபுரீஸ்வரம் என்கிற மிலட்டூரில் உள்ள சிவன்கோவில் மற்றும் பிள்ளையார் ஸன்னிதியில் இவ்வூரைப் பற்றிய நிறைய விஷயங்கள் அடங்கிய கல்வெட்டுகள் இருக்கின்றன. இதன் மூலம் இவ்வூரின் சிறப்பை உணர முடிகிறது மற்றும் தொல்லியல் ஆய்வுத் துறையினர் 1910-ம் ஆண்டு இவ்வூரைப் பற்றிய செய்தியை கெஸட்டில் பதிவு செய்துள்ளனர். இதைவிட சிறப்பான செய்தி ஆந்திர நாட்டிலிருந்து தமிழகம் வந்து, வரகூரில் இருந்து ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி எனும் தரங்க நூலை அருளிய ஸ்ரீ நாராயண தீர்த்தரும் இவ்வூரைப் பற்றி எழுதியிருக்கிறார். மேலும் உலகப்புகழ் வாய்ந்த ஸ்ரீ பாகவதமேளா எனும் நாட்டிய நாடகம் ஆண்டுதோறும் இவ்வூரில் கோலாகலமாக நடந்து வருகிறது. இதில் பங்குபெறும் நடனக் கலைஞர்கள் உலகின் பல பகுதிகளில் பணிபுரிந்தாலும், விழாக்காலத்தில் மிலட்டூர் வந்து, தங்கி நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்கள். வாக்கேயக்காரர்களில் தலை சிறந்த ஒருவரான மிலட்டூர் ஸ்ரீ வீரபத்ரையா இவ்வூரில் வாழ்ந்தவர். அவர் இயற்றிய பல வர்ணங்களும், வர்ணமெட்டுக்களும், இசை ஆர்வலர்களுக்கு ஒரு வரப்ரஸாதமாகும்.

இந்நூலின் ஆசிரியர் முனைவர் தி.கணேசன் அவர்களின் வடமொழி, தமிழ்மொழிப் புலமை எளிய நடையில் விவரங்கள் அளித்தமை, அனைவரும் விரும்பி படிக்கும் தன்மை - இவை யாவும் இதன் சிறப்பு அம்சங்களாகும். பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் முதன்முதலில் பிரம்மா நாரத மகரிக்ஷிக்கு இப்புராணத்தை உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. ஒரு நாடக வடிவில் பாத்திரங்கள் தோன்றி இக்கதை கூறப்படுவது படிப்போருக்கு ஆவலைத் தூண்டுகிறது. சிவபக்தர்கள் மற்றும் பல ரிஷிகளும் வியாஸ பகவானின் தலைசிறந்த சீடரான ஸூதர் வாயிலாக உன்னதபுரீஸ்வரர் கதை விளக்கும்படி கேட்க, அவரும் மிலட்டூர் என்ற இத்தலத்தின் பெருமைகளை விளக்கமாக உபதேசிக்கத் தொடங்குவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. வியாஸ முனிவரின் மஹாபாரதக் கதையின் ஸ்வாரஸ்யம் அவர் சீடர் ஸூதரின் கதையினும் இருப்பது குரு சிஷ்ய பரம்பரையின் உன்னத எடுத்துக்காட்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கதையின் தொடக்கத்தில் இப்பூவுலகில் சுவர்க்கத்திற்கு ஒப்பானதும் அதிசயிக்கத்தக்க பல சிறப்புகளும் உள்ள சோழவள நாட்டின் சிறப்பும், அனைத்து பாவங்களையும் போக்க வல்ல காவிரியின் பெருமை பெரிதும் போற்றப்படுகிறது. பல வர்ணாச்ரமதர்மம் கொண்ட மக்கள் அச்சோழவளநாட்டில் தத்தம் கடமைகளை வழுவாது செய்து வாழும் தகைமை நம்மை பெருமைப்பட வைக்கிறது.

தர்மம் வழுவாது ஆண்டு வந்த கல்மாஷபாதன் என்னும் சூரிய வம்சத்தைச் சேர்ந்த அரசனுக்கு புத்ர பாக்யம் இல்லாமை மனக்கவலையை அளிக்கிறது. அவன் ப்ரார்த்தனை கேட்ட சாண்டில்ய முனிவர் அவனுடைய முந்தைய பிறவியில் செய்த ப்ரம்மஹத்தி தோஷம்தான் காரணம் என்றும் மன்னனை தீர்த்தயாத்ரை மேற்கொண்டு, பாவங்கள் நீங்கப் பெற்று சிவனை வழிபடுமாறு கட்டளை இடுகிறார். மன்னனும் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி இப்பூவுலகையே ஒரு முறை வலம்வந்து ஏராளமான முனிவர்களின் ஆசிரமங்ளையெல்லாம் தரிசித்து, முடிவில் அகத்திய முனிவரின் ஆசிரமத்தை அவ்வரசன் வந்தடைகிறான். அகத்தியரிடம் தான் ஏற்ற தீர்த்த யாத்திரையின் நோக்கத்தைக் கூறி சிவபூஜை செய்வதற்கு ஒரு புண்ணிய க்ஷேத்ரத்தை கருணை கூர்ந்து தனக்கு கூறுமாறு பிரார்த்திக்கிறான். முனிவரும் அவன் தாபத்தை உணர்ந்து அத்தகைய தெய்வீகத்தன்மை பொருந்திய லிங்கத்தையுடையதும், எல்லா சித்திகளையும் நல்குவதுமான புண்ணியத்தலமொன்று காவிரியின் தென்கரையில் பார்வதி நாயகனாக பரமேசுவரன் எப்போதும் பரிபூர்ணமாக விரும்பியவற்றை அருளும் ஸ்ரீ உன்னதபுரீசுவரராகிய சிவபெருமானை முறைப்படி வழிபட பணிக்கிறார். மன்னன் மனம் மகிழ்ந்து அந்த க்ஷேத்ர மகிமையை விவரமாக கேட்கிறான். முனிவரும் அவன் பக்தியை மெச்சி அவனுக்கு சிவபெருமானுடைய திருநாமங்கள் அடங்கிய புண்ணிய சிவகதைகளைச் சொல்லத் தொடங்குவதாக இந்நூலின் முதல் அத்தியாயம் நிறைவுறுகிறது.

அனைத்து விருத்தாந்தங்களையும் அகஸ்தியர் வாயிலாகக் கேட்ட மன்னன் உன்னதபுரி செல்கிறான். ஒரு சோதனைக்குள்ளாகி முடிவில் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் தருணத்தில் சிவபெருமானும் சிவப்ரியம்பாளும் அரசனை தடுத்தி நிறுத்தி அவன் விடாமுயற்சியை பாராட்டி தனது ஆலயத்தை நன்கு செப்பனிட்டு பிரகாரம் கோபுரம் ஆகியவற்றுடன் கட்டி முடிக்க கட்டளையிட்டருளுகிறார். அரசனும் அவ்வாறே மிக நேர்த்தியாக செய்து முடித்ததும் உரிய காலத்தில் அரசி கருவுற்று அழகிய ஆண்மகனை ஈன்றாள்.

இத்தகைய சிறப்புமிக்க சிவாலயத்தை செப்பனிட்டு புதுப்பிப்பவர்கள் சிவப்பேறு அடைவார்கள். அவர்களின் பித்ருக்களும் நற்கதி அடைவார்கள். லக்ஷ்மீபதியான விஷ்ணு, ப்ரம்மா, தால்ப்ய முனிவர், கருடன், ஸுபத்ரன் மற்றும் ஸ்ரீராமன், லக்ஷ்மணன் முதலியோர்களால் பக்தியுடன் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ உன்னதபுரீச்வரர் அனைவரையும் காத்தருளி ஸகல ஸௌபாக்யங்களும் அளிப்பார் என்பதில் ஐயமில்லை. இந்நூலை உலகுக்கு வெளிப்படுத்தி எளிய நடையில் மொழி பெயர்த்த முனைவர் கணேசன் அவர்களின் சிவபக்தியும் பணியும் அவரையும் அவரைச் சார்ந்த அவரது உதவி ஆராய்ச்சியாளர் ஸ்ரீ நரேந்திரனையும் என்றும் காக்க வேண்டுவோமாக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நன்றியுரை

உன்னதபுரீச்வர மஹாத்மியம் என்ற ஓலைச்சுவடியில் இருந்து மிலட்டூர் ஸ்தலபுராணத்தை (உன்னத புரீஸ்வரர் என்பது தற்போது மிலட்டூர் என மறுவி இருக்கிறது) மொழி பெயர்த்து புத்தகமாக வெளியிட உதவி செய்த சைவ சித்தாந்த பிரவீண T. கணேசனுக்கும் (சை சித்தாந்த ஆராய்ச்சியாளர், பிரஞ்சு இந்திய ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி) திருகணேசனுக்கு உதவி செய்த பாபு என்கிற நரேந்திரனுக்கும், மேற்படி ஓலைச் சுவடியை பிரதி எடுக்க அனுமதி வழங்கிய தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு. சண்முகம் அவர்களுக்கும், சரஸ்வதி மஹால் திரு. காப்பாட்சியர் Dr. P. பெருமாள் அவர்களுக்கும், ஸம்ஸ்கிருத பண்டிட் Dr. A. வீரராகவன் அவர்களுக்கும், எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் ஆங்கில அரசாணைகளின் நகல்களைக் கொடுத்து உதவிய குடவாயில் திரு பாலசுப்ரமணியம் அவர்களுக்கும் சிவன்கோயில் மற்றும் அதன் உள்ளே உள்ள பிள்ளையார் ஸந்நிதியில் உள்ள கல்வெட்டுகளில் இருந்து படிமம் எடுத்து உதவிய Dr. T. சந்திரகுமார் அவர்களுக்கும், ஓலைச்சுவடியில் இருந்த மிலட்டூர் வீரபத்ரய்யாவின் பாடல்களை நகல் எடுத்துக் கொடுத்து உதவிய திரு. B.M. சுந்தரம் அவர்களுக்கும் சில பாடல்களுக்கு ஸ்வரக் குறிப்புகளுடன் இசை அமைத்துக்கொடுத்த கலை நண்மணி திருமதி. மைதிலி கண்ணன் அவர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவைகளை எல்லாம் ஒருங்கிணைத்துக் கொடுத்த P. வேணுகோபால் அவர்களுக்கும், திரு. R. கண்ணன் அவர்களுக்கும் எங்களது நன்றி. ஓலைச்சுவடியிலிருந்து நகல் எடுக்க அனுமதி அளிக்கும்படி கடிதம் கொடுத்த ப்ரும்மஶ்ரீ. L. வெங்கடேச சாஸ்திரிகள் அவர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

செயலாளர்
மிலட்டூர் ஶ்ரீ ஸத்சங்க
சேவா கம்யூனிட்டி டிரஸ்ட் (Regd)
மிலட்டூர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வரலாற்றில் மிலட்டூர்

மிலட்டூர் என்று அழைக்கப்படும் இக்கிராமத்தைப் பற்றி சில வரலாற்றுச் செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன. முதலாம் இராசராசசோழன் கி.பி.985 முதல் கி.பி.1014 வரை சோழ மண்டலம், தொண்டை மண்டலம், பாண்டிய மண்டலம், கொங்கு மண்டலம், கர்நாடகம், ஆந்திர மாநிலத்தில் பல பகுதிகள் ஸ்ரீலங்கா போன்ற பகுதிகள் இவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது அறியற்பானது. நித்தவினோதன் என்பது இவனது பல பட்ட பெயர்களுள் ஒன்றாகும். இவ்வூர் சோழ மண்டலத்தில் நித்த வினோத வளநாட்டில் கீழார் கூற்றத்தில் அமைந்திருந்தது என்பதை கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பெரு மிலட்டூர் என்று இவ்வூர் குறிப்பிடப்படுகின்றது. இங்கு இயங்கி வந்த ஊர்ச்சபை பல சமூக, தெய்வ காரியங்களை மேற்பார்வையிட்டு வந்தது என்பதை கல்வெட்டுக்கள் மூலமாக அறியலாம்.

இவ்வூரில் கோயில் கொண்டிருக்கிற தெய்வத்தின் பெயர் தற்காலத்தில் உன்னதபுரீசுவரன் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் அக்காலத்தில் சுவாமியை திருஅகத்தீஸ்வரமுடையார் என்றே அழைக்கப்பட்டு வந்தது.

முதலாம் இராசராசன் தான் கட்டிய தஞ்சை பெருவுடையார் கோயிலுக்கு பல நிவந்தங்களை அளித்தான். பொன்னும் பொருளும் அவனால் வழங்கப்பட்டது. அவன் தக்ஷிணமேருவிடங்கர் என்ற தெய்வ பிரதிமையை செய்து அளித்தான். அத்தெய்வ திரு உருவை பிரதிஷ்டை செய்து பல நிவந்தங்களை அளித்தான். அத்துடன் நில்லாமல் தஞ்சை விடங்கர் என்ற பஞ்சலோக விக்கிரகத்தையும் செய்து பிரதிஷ்டை செய்தான். இவ்விரு தெய்வ திருமேனிகளுக்கு தொடர்ந்து பூஜைகள் நிகழ்த்த பல கொடைகளை அளித்தான். உமா, பரமேஸ்வரி என்ற இரு அம்பிகை திருமேனிகளையும் அத்தெய்வங்களின் பார்யாக்களாக கருதி செய்தளித்தான்.

இத்தெய்வ படிமங்களுக்கு முறையே பூஜைகளை கவனித்துக்கொள்ள இராசராசசோழனும், அவனின் அக்காவான குந்தவைபிராட்டியும் தனிகவனம் மேற்கொண்டனர். குந்தவையார் உமா, பரமேஸ்வரிகளுக்கு பல உயர்ந்த ஆபரணங்களையும், தங்கத்தையும், பொருளையும் பெரிய கோயில் பண்டாரத்தில் சேர்ப்பித்தாள். சண்டேஸ்வர நாயனார் இத்தகைய சிவச்சொத்துக்களை காத்து வருபவர் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு.

குந்தவையார் அளித்த பொருட்களினால் எழும் வட்டி, கோயில் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. தஞ்சையைச் சுற்றிலும் அமைந்திருந்த பல கிராமங்கள் பெரிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கோயில் பண்டாரத்திலிருந்து பணத்தைப் பெற்று அதற்குரிய வட்டிகளை தஞ்சை பெரிய கோயிலுக்கு வட்டியாக செலுத்தி வந்தனர்.

ஆண்டுக்கு ஒருமுறை வட்டித்தொகையை பணமாகவோ அல்லது நெல்லாகவோ செலுத்தலாம் என்ற முறை வகுக்கப்பட்டது. இப்படி கடனாக பெறப்படும் பணத்திற்கு காசு ஒன்றுக்கு மூன்று குறுனி நெல் ஆடவல்லான் என்ற மரக்காலால் அளக்கப்பட்டு வழங்கப்பட்டது. மிலட்டூர் கிராமமும் பெரிய கோயில் பண்டாரத்திலிருந்து அக்காலத்தில் 200 காசு பணம் பெற்றது எனவும், அதற்குரிய வட்டியாக காசு ஒன்றுக்கு மூன்று குறுணி நெல் அளிக்கப்பட்டது. அக்காலத்தில் ஒரு காசு என்பது 24 குருணி கொண்டதாக கருதப்பட்டது. வட்டியை பணமாக அளிக்கும்போது 12 1/2 % வட்டி வசூலிக்கப்பட்டது. இப்படி பணமாக செலுத்திய ஊர் ஆவூர் கூற்றத்தில் இருந்த மனுகுல சூளாமணி சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்படும் இரும்புத் தலை என்ற ஊராகும். தொடர்ந்து நித்திய பூஜைகளை நடத்துவதற்கும், திருவிழாக்களை நடத்துவதற்கும் விளக்கெரிக்க நெய் கொடுப்பதற்கும் இப்பணம் செலவிடப்பட்டது. அக்காலத்தில் ஒரு ஆடு 1/3 காசாகும் என்ற நிலை இருந்தது.

இதேபோல, தஞ்சை பெரிய கோயிலுக்கு "கோயில் காப்பவர்கள்" பலர் பல ஊர்களிலிருந்து அனுப்பப்பட்டனர். மிலட்டூர் கிராமத்திலிருந்து திருமெய்க்காப்பு ஒருவர் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டார். நித்த வனோதவள நாட்டு கிழார் கூற்றத்து பெரு மிலட்டூர் ஊரார் இடக் நடவ திரு மெய்காப்பு ஒன்று என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இக்காலத்திலேயே மிலட்டூர் கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதலாம். முதலாம் இராசராசசோழனின் மகனான முதலாம் இராசேந்திரச் சோழன் பெரு வீரனாகத் திகழ்ந்தான். இவனின் மகனான இராசாதிராசன் கி.பி. 1018லிருந்து 1054 வரை தமிழகத்தை ஆண்டான்.

இவனுடைய கல்வெட்டொன்று மிலட்டூர் சிவன் கோயிலில் உள்ள விக்னேஸ்வரர் சன்னதியில் தெற்குச் சுவர்பகுதியில் உள்ளது. இக்கல்வெட்டின் காலம் 1021 ஆகும். இந்த ஆண்டில் கோயில் விளக்கெரிக்க ஆடுகள் பல தானமாக கோயிலுக்கு அளிக்கப்பட்டன என்று தெரிகிறது.

உன்னதபுரீஸ்வரர் ஆலயத்தின் அர்த்த மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ள முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் காலம் 1073 ஆகும். இவ்வூரைச் சார்ந்தவர் ஒருவர் மிலட்டூர் திரு அகத்தீஸ்வர உடைய மஹா தேவருக்கு பல நிலங்களை தானமாக அளித்தச் செய்தி கிடைக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதலாம் குலோத்துங்க சோழனின் மகனான விக்கிரம சோழனின் காலத்தில் இக்கோயிலுக்கு பல கொடைகள் அளிக்கப்பட்டன என்று தெரிகிறது. இவன் 1118-லிருந்து 1135 வரை அரசாண்டான். இம்மன்னனின் 4 ஆம் ஆண்டு கல்வெட்டு, அதாவது 1122-ஐச் சேர்ந்தது கிடைக்கின்றது. திருபுவனச் சக்கரவர்த்தியான பரகேசரி விக்கிரம சோழ தேவர் காலத்தில், கோயில் நெய் விளக்கெரிக்க பல ஆடுகள் வழங்கப்பட்ட செய்தி கிடைக்கின்றது.

இம்மன்னன் தன்பெயரால் ஒரு கோயில் இவ்வூரில் கட்டிய செய்தியும் பெறப்படுகின்றது. விக்கிரம சோழீஸ்வரமுடையார் என்று வழங்கப்படும் தெய்வத்திருமேனிக்கு கோயில் ஒன்றை கட்டினான் என்று கூறுகிறது. இந்த கோயில் செலவுக்கு நிலங்களை பலதானமாக அளித்து திருப்பணிகளை மேற்கொண்டான். இந்த கோயில் தற்காலத்தில் எங்கு உள்ளது என்பது தெரியவில்லை. இக்கோயில் பற்றிய செய்திகள் உன்னதபுரிசுவரர் கருவறையில் அர்த்த மண்டபத்தில் தென்புறச்சுவரில் உள்ள கல்வெட்டிலிருந்து புலப்படுகிறது. இக்கல்வெட்டு ஒருவேளை இரண்டாம் இராசராசசோழனின் (1146 - 1173) கல்வெட்டாக இருக்கக்கூடும் என்று கருத இடமுண்டு. இவன் விக்கிரம சோழனின் பேரனும், இரண்டாம் குலோத்துங்க சோழனின் மகனும் ஆவான். தன்னுடைய தாத்தாவான விக்கிரம சோழனின் பெயரால் இவனே கோயில் ஒன்றையும் எடுப்பித்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

இப்படி சோழர்காலத்தில் மகோன்னதமான இடத்தை வகித்த மிலட்டூர் பிற்காலத்திலும் தமிழக வரலாற்றில் ஓர் சிறப்பிடத்தை பெற்றுத் திகழ ஆரம்பித்தது. அகிர்த்த பலனை அளித்து சோழர்களுக்கு மோட்சத்தை அளித்த ஸ்தலமாகவும் சமய உலகத்தில் திகழ்ந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிலட்டூர் கல்வெட்டியல் செய்தி

சோழர் கல்வெட்டுக்களில் இவ்வூர் சோழ மண்டலத்து நித்தவிநோதவளநாட்டு கிழாற் கூற்றத்து பெருமிலட்டூர் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. இவ்வூரில் உள்ள உன்னதபுரீஸ்வரர் கோயிலில் இருந்து 4 கல்வெட்டுக்களை இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையினர் 1910 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளனர். அவையாவன

1. Annual Report of Epigraphy 1910 No.28

உன்னதபுரீஸ்வரர் கர்ப்பகிருகத்திற்கு முன்பு உள்ள மண்டபத்தின் தென்புற சுவரில் இக்கல்வெட்டு உள்ளது.

பரகேசரிவர்மன் எனக் குறிப்பிடப்பெறும் விக்கிரம சோழதேவரின் நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி. 1122) அக்கோயிலில் ஒரு விளக்கு எரிப்பதற்காக அளிக்கப்பட்ட ஆட்டுப்பண்ணை பற்றி விவரிக்கின்றது.

2. A.R.E. 1910 No.31

உன்னதபுரீஸ்வரர் கோயில் பிரகாரத்தில் உள்ள கணபதியார் கோவிலின் தென்புற சுவரில் இக்கல்வெட்டு உள்ளது.

இரண்டாம் இராஜாதிராஜ சோழ தேவரின் மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி.1168) இத்திருக்கோயிலில் ஒரு விளக்கு எரிப்பதற்காக வழங்கிய ஆடுகள் பற்றி விவரிக்கின்றது.

3. A.R.E. 1910 No.30

உன்னதபுரீஸ்வரர் கோயில் கர்ப்ப கிருஹத்தின் முன் உள்ள மண்டபத்தின் வடபுற சுவரில் இக்கல்வெட்டுள்ளது.

குலோத்துங்க சோழ தேவரின் இரண்டாம் ஆட்சியாண்டில் பெருமிலட்டூரில் உள்ள திருவகத்தீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்காக வழங்கப்பட்ட நிலம்பற்றி குறிப்பிடுகின்றது.

3. A.R.E. 1910 No.29

உன்னதபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபத்து தென்புற சுவரில் இக்கல்வெட்டு உள்ளது.

பெருமிலட்டூரில் உள்ள திருஅகத்தீஸ்வரமுடையார் கோயிலுக்கும், விக்கிரம சோழீஸ்வரமுடையார் கோயிலுக்கும் நிலங்கள் அளிக்கப்பெற்றது பற்றி குறிப்பிடப்பெற்றுள்ளது. இந்நிலக்கொடை திருபுவனசக்கரவர்த்தி ராஜராஜ சோழதேவரின் ஆட்சிக்காலத்தில் வழங்கப்பெற்றதாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

• முன்னுரை

நமது பாரதநாட்டின் ஆணிவேராகத் திகழும் ஆன்மீக வாழ்விற்குத் துணை செய்வன கோயில்களும், புண்ணியத் தலங்களும் புண்ணிய நதிகளுமாம். கணக்கற்ற நதிகளுள் சில நதிகள் மிகப் பண்டைய காலத்திலிருந்தே முனிவர்களாலும், மக்களாலும் பெரிதும் போற்றி வணங்கப்பட்டுவருகின்றன. இப்புண்ணிய நதிகளின் கரைகளில் கணக்கற்ற சிவ க்ஷேத்திரங்கள் அமைந்துள்ளன. முனிவர்களும், தேவர்களும் அத்தலங்களில் சிவலிங்கங்களைத் தாபித்து வழிபட்டு வந்துள்ளனர். பல க்ஷேத்திரங்களில் சிவபெருமான் சுயமாகவே தோன்றி மக்கள் அனைவருக்கும் அருள் பாலித்து வருவதையும் நாம் அறிகிறோம். அப்படிப்பட்ட புண்ணியத் தலங்களின் அரிய பெருமைகளை மக்களுக்கு விளக்குவன ஸ்தலபுராணங்கள். இந்நூல்கள் பெரும்பான்மை மற்றபுராணங்களின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஹாலாஸ்ய மாஹாத்மியம், அருணாசல மாஹாத்மியம், விருத்தாசல மாஹாத்மியம், காசீகண்டம், சுவேதாரண்ய மாஹாத்மியம் முதலிய பல ஸ்தலபுராணங்கள் சிவபுராணம், பிரஹ்மாண்டபுராணம், ஸ்கந்தபுராணம் முதலிய மஹாபுரா ணங்களின் பகுதிகளாக உள்ளன. வடமொழியில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அமைந்துள்ள இந்த ஸ்தலபுராணங்கள் தமிழ் முதலான பிராந்திய மொழிகளிலும் மிகப் பழங்காலந்தொட்டே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

- தலபுராண இலக்கியங்கள்

தமிழ் மொழியில் இவ்வகையான பல தலபுராணங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, மக்களிடையேயும், புலவர்களிடையேயும் நன்கு பயிலப்பட்டு வந்திருக்கின்றன. தல புராணத்தை ஒரு தனி இலக்கியமாகவே அமைத்து வளர்த்த பெருமை தமிழ்நாட்டையே சாரும். தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலான சைவநூல்களுக்கு அடுத்தபடியாக இத்தலபுராணங்கள் சைவமக்களிடையே மிக்க பக்தியுடன் நெடுங்காலமாகப் பெரிதும் போற்றப்பட்டுவருகின்றன. தலபுராணங்ககளுள் அதிக மாகப் போற்றப்படுபவை சிவத்தலங்களே; பெரும்பாலான சிவத்தலங்களுக்கு வடமொழியில் தனித்தனியே ஸ்தல மாஹாத்மியங்கள் உள்ளன. அவற்றுள் சில நூல்களே பதிப்பிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, ஹாலாஸ்ய மாஹாத்மியம், சிதம்பரமாஹாத்மியம், வேதாரண்ய மாஹாத்மியம், ச்யுதபுரி (வழுவூர்) மாஹாத்மியம் முதலியன. எஞ்சியவற்றுள் பல அச்சேற்றப்படாமல் சுவடிகளாகவே உள்ளன, பல அழிந்தும் போயின.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

- தலபுராண ஆசிரியர்கள்

தமிழ் மொழியில் இன்று கிடைத்துள்ளவற்றுள் காலத்தால் பழமையானது நம்பிதிருவிளையாடல் எனப் பெரிதும் போற்றப்படும் திருவிளையாடற் புராணம். இது ஹாலாஸ்யமாஹாத்மியத்தைத் தழுவித் தமிழில் இயற்றப் பட்ட ஒரு மிகச் சிறந்த காப்பியமாகும். 13 ம் நூற்றாண்டில் மதுரையில் வாழ்ந்த பெரும்பற்றப்புலியூர் நம்பி என்னும் சோழியபிராமணரால் இயற்றப்பட்ட இக் காப்பியம் மதுரைச் சொக்கநாதப்பெருமானின் 64 திரு விளையாடல்களை விளக்குகிறது. அடுத்தது, 14 ம் நூற்றாண்டில் சிதம்பரமாஹாத்மியத்தைத் தழுவி தில்லை யில் வாழ்ந்த உமாபதிசிவாசாரியார் இயற்றிய கோயிற் புராணம். பின்னர், 16 ம் நூற்றாண்டில் தில்லையில் வாழ்ந்த மிகப் புகழ்பெற்ற சைவ ஆசாரியரான மறை ஞானசம்பந்தர் இயற்றிய கமலாலயச்சிறப்பு என்னும் திருவாரூர்த் தலபுராணமும், அருணாசலபுராணமுமாகும். அதைத் தொடர்ந்து நிரம்பஅழகியதேசிகர், சைவ எல்லப்பநாவலர், ஞானவரோதயர் போன்றோர் பல தல புராணநூல்களைத் தமிழில் இயற்றியுள்ளனர்.

19 ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் புகழ்வாய்ந்த தமிழ்ப் புலவரும் தமிழ்த் தாத்தா என அன்புடன் அழைக்கப்படும் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் போன்ற

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒப்பற்ற தமிழ்ப் புலவர்களை உருவாக்கியவருமான மஹா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பல சிவத்தலங்களுக்கு அவ்வத்தலங்களின் வடமொழி ஸ்தலபுராணங்களின் கருத்துக்களை நன்கு அறிந்து தமிழில் தலபுராணங்களை இயற்றியுள்ளனர். அவற்றில் பெரும்பான்மை அச்சாகியுள்ளன.

வடமொழியிலமைந்த ஸ்தலபுராணங்களும் அவ்வப்போது புத்தகவடிவில் வெளியாகியுள்ளன. ஆனால் இன்னும் வெளிவராமல் சுவடியிலேயே இருப்பவை பல ஸ்தல புராணங்கள். அந்த வரிசையில் மிலட்டூர் என்று அழைக்கப்படும் இந்த சிவஸ்தலத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் உன்னதபுரீச்வரஸ்தலமாஹாத்மியம் என்னும் இந்த ஸ்தலபுராணம் இது நாள் வரை அச்சேற்றப்படாமல் கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வந்துள்ளது. தற்போது இந்நூலின் முதற்பாகம் (1 முதல் 6 அத்தியாயங்கள்) புத்தகவடிவில் அச்சாகியுள்ளது. இது வரை கிடைத்துள்ள கையெழுத்துப் பிரதிகளில் சொற் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் நிறைந்துள்ளதால் பல இடங்களில் பொருள் விளக்கம் கடினமாக உள்ளது. எனது அறிவுக்கு எட்டியவரை இந்நூலைச் சரிசெய்துள்ளேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மிலட்டூர் ஸ்தலபுராணச் சுருக்கம்

(உன்னதபுரீச்வரஸ்தலமாஹாத்மியம்)

- அத்தியாயம் 1

இந்நூல் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டது. முதன்முதலில் பிரஹ்மா நாரதமஹர்ஷிக்கு இப்புரா ணத்தை உபதேசித்தார். நைமிசாரண்யத்தில் ஸத்ரம் என்னும் மிகப் பெரிய யாகத்தின் முடிவில் கூடியிருந்த காச்யபர், கபிலர், வஸிஷ்டர், வாமதேவர் முதலான சிவபக்தியிற் சிறந்தவர்களும், சிவதியானத்திலேயே வாழ்க்கையைக் கழிப்பவர்களும், திருநீறு, உருத்திராக்ஷம் முதலிய சிவசின்னங்களை எப்போதும் அணிந்திருப்பவர் களுமாகிய பல ரிஷிகளைக் காண வியாஸமுனிவரின் தலைசிறந்த சீடரான ஸூதர் என்னும் மஹர்ஷி வருகிறார். அவரிடம் அம்முனிவர்கள், பிரஹ்மாண்ட புராணமென்னும் மிகப் பெரியதொரு புராணத்தின் ஒரு பகுதியாயுள்ளதும், உன்னதபுரீச்வரஸ்தலத்தின் பெருமை களை விளக்கு வதாயும் உள்ள இப்புராணத்தை ஸூத முனிவர் வாயிலாகத் தாங்கள் கேட்பதற்கு மிகவும் ஆவலாய் இருப்பதைத் தெரிவிக்கின்றார்கள். ஸூதமுனிவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் உன்னதபுரீச் வரம் எனப்படுவதும் தமிழ்மொழியில் மிலட்டூர் என்று அழைக்கப்படுவதுமான இத்தலத்தின் பெருமைகளை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
விளக்கும் புராணத்தை அம்முனிவர்களுக்கு உபதேசிக்கத தொடங்குகிறார்.

பரந்து விரிந்த இப்பாரததேசத்தில் சுவர்க்கத்திற்கு நிகரானதும், காவேரி என்னும் புண்ணியநதி பாய்ந்து வளம் கொழிப்பதும் எல்லாச் செல்வங்களும் நிறைந்த துமான சோழநாடு விளங்குகிறது. யோகிகளும், ஸநகர் முதலான முனிவர்களும், மற்றும் கந்தர்வர்களும் எப்போதும் அங்கு வருகை புரிகின்றனர். துவாபரயுகத்தில் அந்நாட்டில் புரவல்லம் எனும் ஊரில் கல்மாஷபாதன் என்னும் ஓர் அரசன் தர்மத்தினின்றும் வழுவாது சிறந்த முறையில் அரசாண்டு வந்தான். அவன் கல்வியிலும், வேதங்களைக் கற்றோர்களைப் பேணுவதிலும், போர் புரிவதிலும் சிறந்து விளங்கினான். நாளும் அந்தணர் களைப் பூஜித்து வணங்குவதையும், அனைவர்க்கும் அன்ன தானம் செய்வதையும் ஒரு விரதமாக மேற்கொண்டு செய்து வந்தான். அழகிற் சிறந்தவனும், சிவபெருமா னிடத்தில் எல்லையற்ற பக்தியையும் கொண்டவனான அம்மன்னனுக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாததால் தன்னுடைய அரசவைப் புரோஹிதரான சாண்டில்யர் என்னும் முனிவரை அழைத்து "என்னுடைய வமிசத்தை வளர்ப்பதற்குப் பாண்டிய அரசகுமாரியான என் பட்டத்தரசியினிடத்தில் எனக்குப் புத்திரன் வாய்க்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
வில்லை. அதற்கான காரணத்தை அறிந்து சொல்லுமாறு தங்களை வேண்டுகிறேன்" எனக் கூறவும், தன்னுடைய ஞானக் கண்ணினால் அக்காரணத்தை அறிந்த அம் முனிவர், "அரசே ! முந்தைய பிறவியில் எவ்வித குற்றமும் செய்யாத பிராமணனொருவர் தங்களால் தண்டிக்கப் பட்டார். அக்காரணம் பற்றியே தங்களுக்கு இப்பிறவியில் பிள்ளைப் பேறு வாய்க்கவில்லை. அதற்குப் பிராயச்சித் தமாகத் தாங்கள் தீர்த்தயாத்திரையை மேற்கொண்டு சிவ பெருமானை வழிபட்டுவந்தால் பிள்ளை பிறக்கும்" எனக் கூறினார். மன்னனும் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த வரான கோபலிங்கன் என்னும் தன்னுடைய மந்திரியினி டத்தில் அரசாட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தன் னுடைய தீர்த்தயாத்திரையைத் தொடங்கினான்.

பல தேசங்களுக்குச் சென்று புண்ணியநதிகளில் நீராடி, பல முனிவர்களின் ஆச்ரமங்களை எல்லாம் தரிசனம் செய்துகொண்டு வருகையில் அகஸ்தியமுனிவரின் எழில் மிகுந்ததும் அமைதியானதுமான ஆச்ரமத்தை அடைந்தான். முனிவரை வணங்கி தன்னுடைய பிறவியின் பயனை அடைந்துவிட்டதாகக் கூறி மகிழ்ந்தான். பின்பு, அகஸ்தியரிடம் தன்னுடைய மனக்குறையைப் பற்றிக் கூறவும், முனிவர் அம்மன்னனை நோக்கி, "சிவபெருமான் ஒருவரே அனைத்துலகிற்கும் ஒப்பற்ற ஒரே கடவுள்; மூவு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லகையும் படைத்து, காத்து, பின்னர் தன்னுள் அனைத்தையும் ஒடுக்கி ஆள்பவர் அவர் ஒருவரே. அனைத்து வேதங்களிலும் போற்றப்படுபவர் சிவபெருமானே; கருணைக்கடலான சிவபெருமான் ஒருவரே எல்லா ஜீவ ராசிகளாலும் போற்றி வணங்கத்தக்கவர். எனவே, நீ இலிங்கவடிவில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தினமும் வழிபட்டு வருவாயாக. காவேரி நதியின் தென் கரையில் உன்னதபுரம் என்னும் மிகச் சிறந்த சிவ க்ஷேத்திரம் உள்ளது. அங்கு சிவபெருமான் எப்போதும் பரிபூரணமாக எழுந்தருளி அனைத்து உயிரினங்களுக்கும் அருள்பாலித்து வருகிறார். நீ அங்கு சென்று சிவபெருமானைப் போற்றி வழிபடுவாயாக" என உபதேசித்தார். முனிவரின் சொற்களைக் கேட்ட மன்னனுக்கு மேலும் உற்சாகம் பொங்கியது. அப்புனித க்ஷேத்திரத்தில் சிவபெருமான் எழுந்தருளிய விதத்தையும், இன்னும் மற்றவர்கள் அப்பெருமானை அங்கு வழிபட்டுப் பயனடைந்த வரலாற்றையும் தனக்குக் கூறவேண்டும் என்று அகஸ்தியமுனிவரை வேண்டினான்.

- அத்தியாயம் 2

அகஸ்தியர் மேலும் கூறலானார்: முன்பு ஒரு சமயம் பிதாமஹரான பிரஹ்மா 'அனைத்து க்ஷேத்திரங்களிலும் சிவக்ஷேத்திரம் உயர்ந்தது; எல்லாச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவக்ஷேத்திரங்களுள்ளும் உன்னதபுரி மிகச் சிறப்பு வாய்ந்தது' என நாரதமுனிவருக்குக் கூறினார். உன்னதபுரியில் அருள்புரிந்துவரும் சிவபெருமானை வழிபடுவோர் எல்லா நன்மைகளையும் பெற்று முடிவில் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்து பேரானந்தம் எய்துவர் என்றும் கூறினார்.

மேலும் பிரஹ்மா உன்னதபுரிஸ்தலத்தின் பெருமைகளை விளக்கிக் கூறியதாவது:

முன்னொரு காலத்தில் ஸோமகன் என்னும் அரக்கன் தேவர்கள் எப்போதும் அரக்கர்களை வென்று வருவதைக் கண்டு அவர்களுடைய வலிமைக்குக் காரணம் வேதங்களே என அறிந்து அவற்றை அபகரித்துக் கடலுக்குள் புகுந்தான். இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் என்னிடம் வந்து முறையிடவும், நான் அவர்களுடன் விஷ்ணுவைச் சென்று பிரார்த்தித்தேன். விஷ்ணுவும் எங்களிடத்தில் தயை கொண்டு, மீன் வடிவம் தாங்கி, கடலுக்குள் சென்று அவ்வரக்கனுடன் போரிட்டு அவனுடைய உதிரத்தைக் குடித்தார். குடித்த வெறியில் அங்கேயே ஆடித்திரிந்து அனைத்துக் கடல்களையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒன்று சேர்த்தார்[1]. அதனால் பூவுலகில் நாடுகளும் நகரங்களும் அழிந்து பெரும் குழப்பம் ஏற்பட்டது. எல்லோரும் கைலாஸசிகரத்தில் உமையம்மையுடன் எப்போதும் ஆனந்தமாயிருந்துவரும் சிவபெருமானைச் சென்றடைந்து தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். சிவபெருமானும் தன்னுடைய சக்தியினால் ஒரு தெப்பத்தை உண்டாக்கி தேவர்களுடன் பூவுலகுக்கு வந்து எங்கும் கடல் சூழ்ந்திருப்பதைக் கண்டு மிக்க கோபம் கொண்டார். அச்சமயம் மீன் உருவம் கொண்ட விஷ்ணுவானவர் தன்னுடைய வாலால் அத்தெப்பத்தை அடித்தார். சிவபெருமான் தன்னுடைய இருகைகளாலும் அம்மீனைப் பிடித்துப் பிசையவும் விஷ்ணு தன்னுடைய சுயவடிவத்தை அடைந்து நான்கு வேதங்களையும் பிரஹ்மாவிடம் கொடுத்து சிவபெருமானைப் பணிந்து நின்றார். அத்தெப்பத்தில் செல்லும்போது சிவபெருமான் ஒரு உயர்ந்த மேடான இடத்தில் மிக அழகானதொரு சிறிய நகரத்தைத் தாமே உண்டாக்கினார். அது பலவிதமான காய்கனிகளைக் கொடுக்கும் மரங்களையும்

---

[1] पातालादुत्पतिष्णोर्मकरवसतयो यस्य पुच्छाभिघाता-
दूर्ध्वं ब्रह्माण्डखण्डव्यतिकरविहितव्यत्ययेनापतन्ति ।
विष्णोर्मत्स्यावतारे सकलवसुमतीमण्डलं व्यश्नुवाना-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நறுமணம் மிக்க மலர்ச் சோலைகளையும் மனம் கவரும் மாடமாளிகைகளையும் தன்னகத்தே உடையதாயிருந்தது. மேலும், அங்கு வாலகில்யர் முதலான சிவபக்திச் செல்வர்களான பல முனிவர்கள் வாசம் செய்து கொண்டிருந்தனர். தேவர்களனைவரும் அவ்வழகிய நகரத்தைக் கண்டு களிப்புற்று தெப்பத்தை விட்டு அந்நகரத்தில் ஏறினர். சிவபெருமானைக் காணாது வருந்திய அவர்கள் கோடிசூரியனுக்கொப்பான ஒளி பொருந்திய இலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து சிவபெருமானைத் துதித்தனர். அவர்கள்பால் மிகுந்த அன்புகொண்டு சிவபெருமானும் "எவ்வாறு கைலாஸசிகரத்தில் பார்வதிதேவியுடன் மிக்க ஆனந்தத்துடன் வசிக்கிறேனோ அதே ஆனந்தத்துடன் இப்புண்ணிய நகரத்தில் பார்வதியுடன் இருந்து அனைத்து ஜீவராசிகளுக்கும் அவர்களுடைய பாவங்களைப் போக்கி நற்கதியை அருளுகிறேன். இவ்விடத்தில் வாசம் செய்வதால் மக்கள் அனைத்துப் பாவங்களினின்றும் விடுபட்டு என்னுடைய திருவடிகளை அடைவார்கள்" என்று கூறினார். அன்றுமுதல் அந்த க்ஷேத்திரம் உன்னதபுரம் என்றும், ப்லாவனபுரம் என்றும்,

---

स्तस्यास्योदीरितानां ध्वनिरपहरतादश्रियं वः श्रुतीनाम् ।। (मत्स्यपुराण, 2)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பூலோககைலாசமென்றும் அழைக்கப்படுகிறது. கைலாஸம், காசி, கோகர்ணம், திருவையாறு, கும்ப கோணம், சிதம்பரம் முதலான மஹிமை வாய்ந்த சிவத் தலங்களுக்கு அது நிகரானது.

பிரஹ்மா மேலும் கூறியதாவது: முன்னொரு காலத்தில் விஷ்ணுவானவர் கருடவாஹனத்திலேறி அனைத்துல கையும் சஞ்சரித்து வருகையில் கைலாஸகிரியைச் சென்ற டைந்து நந்தியெம்பெருமானைச் சட்டை செய்யாமல் சிவபெருமானைத் தரிசிக்க முற்பட்டார். அங்கு அழைப்பு இல்லாமல் வந்ததால் நந்தி பகவான் அவரைத் தடுத்தபோது கோபம் கொண்டு அவரைத் தன் கதா யுதத்தால் தாக்கி மூர்ச்சையாகி விழச் செய்தார். இதனால் சிவபெருமான் விஷ்ணுவை மனிதனாகவும், கருடனை ஒரு சாதாரணப் பறவையாகவும் பூலோகத்தில் பிறக்கும்படிச் சாபம் இட்டார். பின்னர் அவ்விருவரும் மிகவும் வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டதன்மேல் அவர்கள்பால் கருணை கொண்டு விஷ்ணுவை நோக்கி " நீ பூவுலகில் அயோத் திக்கு அரசனான தசரதனுக்கு இராமன் என்னும் பெயருடைய மகனாகப் பிறந்து சீதையை மணந்து பின்னர் இராவணன் முதலான அரக்கர்களைப் போரில் வென்று பதினாயிரம் ஆண்டுகள் அரசாண்டு மிக்க புகழடைந்து மீட்டும் வைகுண்டலோகத்தை அடைவாய்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நீ இப்போது செய்த சிவாபராதத்திற்குக் கழுவாய் யாதுமில்லையாயினும் காவேரி நதியின் தென்கரையில் உள்ளதும், திருவையாறு என்னும் ஒப்பற்ற சிவக்ஷேத்திரத் திற்குத் தென்கிழக்கில் உள்ளதும், தஞ்சைக்குக் கிழக்கில் உள்ளதும், கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் உள்ளது மான மிகச் சிறப்பு வாய்ந்த உன்னதபுரம் என்னும் சிவத் தலத்தில் ஆறு மாதகாலம் நீங்கள் வசித்து வந்தால் உங்களுடைய பாவத்தினின்றும் நீங்கி மீண்டும் வைகுண்டத்தை அடைவீர்கள்” என்று கூறினார்.

- அத்தியாயம் 3

விஷ்ணுவானவர் பல உலகங்களுக்குச் சென்று முடிவில் உன்னதபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு சிவாலயத்தைக் கண்டு களிப்புற்று சிவலிங்கத்தை ஸ்ரீருத்ரம், சமகம் ஆகிய வேதமந்திரங்களால் பலவாற்றானும் அர்ச்சித்து வழிபட்டார். சிவபெருமானும் கோடிசூரியனுக்கொப்பான பிரகாசத்துடன் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு சந்நிதியின் கீழ்த்திசையில் தன்னுடைய சூலத்தினால் பூமியைப் பிளக்கவும், பாதாளத்தினின்றும் நீர் வெளிப்பட்டது. அத்துடன் தன்னுடைய சடையிலுள்ள கங்கை நீரையும் கலந்து அதைப் புனிதமாக்கி அதில் தானும் புனிதநீராடி, விஷ்ணுவையும் அவ்வாறே செய்யும்படி ஆணையிட்டார். மேலும், தினமும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்நீரினால் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்து வழிபட்டுவந்தால் விஷ்ணுவினுடைய சிவ அபராதபாவம் நீங்கும் என்றும், அந்தப் புனிதநீருக்கு நிகரான மற்றொன்று மூவுலகிலும் இல்லை என்றும் கூறினார். சிவபெருமான் கட்டளைப்படியே விஷ்ணுவும் அத் தீர்த்தத்தில் நீராடி சிவபெருமானை அபிஷேகம் முதலிய வற்றால் அர்ச்சித்து வழிபட்டு சிவபெருமானை பல தோத் திரங்களால் துதித்தார். அவருடைய பக்தியை மெச்சி சிவபெருமான் மிக்க அழகு பொருந்திய வடிவம் கொண்டு அவர்முன் தோன்றி "நீ பாவத்தினின்றும் விடுபட்டாய்" என்று கூறினார். விஷ்ணுவும் மிக மகிழ்ந்து தனக்குச் சக்ராயுதம் அருளும்படி வேண்டவும், சிவபெருமான் அச்சக்ராயுதத்தை அவருக்கு அருளினார். பின்னர், உன்னதபுரிச் சிவாலயத்தின் மேற்புறம் விஷ்ணுவை நரசிம்மராக வீற்றிருக்கும்படியும், ஊரின் எல்லையில் பத்ரகாளியைத் தாபித்து நகரத்தைப் புதுப்பிக்கும்படியும் விஷ்ணுவுக்குக் கட்டளையிட்டார். ஆலயத்தின் மேற்குப் புறத்தில் அமைந்த தீர்த்தத்தின் மஹிமைபெருமைகளை அவருக்கு எடுத்துக் கூறினார். பின்னர், விஷ்ணுவின் கட்டளைப்படி தேவசிற்பியான விச்வகர்மா பல மாளிகைகளையும் நந்தவனங்களையும் கொண்ட உன்னதபுரி நகரத்தை நிர்மாணித்தார். அப்புண்ணிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீர்த்தம் சிவகங்கை எனவும் அழைக்கப்படுகிறது. வைசாகமாதத்து சுக்லபக்ஷத்தில் வைசாகநக்ஷத்திரம் கூடிய நாளில் இத்தீர்த்தத்தில் நீராடினால் பல கொடிய பாவங்களினின்றும் நீங்குகிறான்.

- அத்தியாயம் 4

பிரஹ்மா மேலும் நாரதருக்குக் கூறியதாவது:

முன்னர் கைலாஸமலையில் சிவபெருமானால் சபிக்கப்பட்ட கருடனானது சாதாரணப் பறவை வடிவம் கொண்டு, மூன்றாண்டுகள் அங்குமிங்கும் திரிந்து, மிக்க பசியால் வாடி, உன்னதபுரியிலமைந்த இப்புண்ணிய தீர்த்தத்திலுள்ள மீன்களைப் பிடிக்க அக்குளத்தில் விழுந்தது. உடனே தன்னுடைய சுயஞானமும் உருவமும் அடைந்து சிவபெருமானால் அருளப்பட்ட புனித தீர்த்தம் இதுதான் என அறிந்து, மிக்க மன மகிழ்ச்சியுடன் சிவபெருமானை முறைப்படி வழிபட்டது. பெருமானும் அதன் முன் தோன்றி "உனது சாபம் நீங்கியது" எனக் கூறினார். மிகவும் ஆனந்தமடைந்த கருடன் ஊருக்கு வடக்கில் தன் பெயரிலேயே ஒரு அழகிய தீர்த்தத்தை உண்டுபண்ணி தானும் அதில் ஸ்நானம் செய்து சிவபெருமானை வழிபட்டுப் பலகாலம் அவ்வூரில் வசித்து வந்தது. பின்னர் வைகுண்டம் சென்றடைந்தது. அப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
புண்ணியதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோருக்கு அனைத்து நோயும் நீங்கும். அவர்கள் முடிவில் சிவபதம் அடைவர்.

- அத்தியாயம் 5

முன்னொருகாலத்தில் காஞ்சீபுரத்தில் தர்மஜ்ஞன் என்னும் பெயர் கொண்ட பிராமணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் மிகவும் அடக்கமானவர்; புலன்களை அடக்கிச் சிவபக்தியில் மனதைச் செலுத்தி வந்தார். அவருக்கு தன்னுடைய மகனான துர்ஜயன் என்பவனுக்கு உபநயனம் முதலியவற்றை முறையே செய்வித்து ஸுஹோதா என்னும் குருவினிடத்தில் அவனை ஒப்படைத்து வேதம் முதலியவற்றை அவனுக்குக் கற்பிக்குமாறு வேண்டினார். துர்ஜயனும் பல வருடங்கள் குருகுலவாசம் செய்து வித்தைகளைக் கற்றான். பின்னர் ஒரு நாள் குருவானவர் தன் வீட்டையும் மனைவியையும் துர்ஜயனிடம் ஒப்படைத்துவிட்டு ஸ்ரீரங்கம் என்னும் புண்ணியத்தலத்திற்குச் சென்றார். அவர் சென்றவுடன் துர்ஜயன் குருபத்தினியின்பால் மோகமும் காதலும் கொண்டு அவளை அழைக்கவும் அவளும் அதற்கு உடன்பட்டாள். பின்பு ஒருநாள் குரு வீடுதிரும்பியவுடன் தூங்கும் பொழுது துர்ஜயன் அவரைத் தாக்கிக் கொன்று அவருடைய மனைவியுடன் இரவில் வெளியேறினான். பசியாலும் சோர்வினாலும் மிகவும் வாடி பிரம்மஹத்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்னும் கொடிய பாவத்தினால் மிகவும் துன்புறத்தப்பட்டு, பல இடங்களுக்கு அலைந்து திரிந்து முடிவில் தன்னுடைய தவற்றை உணர்ந்து மிகவும் வருந்தினான். பிரம்மஹத்தி என்னும் அக்கொடிய பாவத்தைச் செய்ததால் தீர்த்தயாத்திரை செய்வதன் மூலமே தனக்குக் கழுவாய் ஏற்படும் என உணர்ந்து பல தலங்களுக்கும் புண்ணியதீர்த்தங்களுக்கும் சென்றுகொண்டிருக்கையில் உன்னதபுரித்தலத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுடைய துன்பத்தையறிந்த பார்வதிதேவியானவள் அவனைக் காத்து இரட்சிக்கும்படி சிவபெருமானை வேண்டினாள். சிவபெருமானும் பார்வதிதேவியாரும் வயதான தம்பதி உருவம் கொண்டு துர்ஜயன் முன் தோன்றினர். அவனுடைய துக்கத்தின் காரணத்தைச் சிவபெருமான் அறிந்து "நீ செய்த பிரம்மஹத்தி குருபத்தினியைப் புணர்தல் ஆகிய கொடிய மஹாபாவங்களுக்குக் கழுவாய் இல்லையாயினும் நான் அதற்கான பிராயச்சித்தைக் கூறுகிறேன், கேள்" எனக் கூறி, உன்னதபுரித்தலத்தின் மஹிமையை அவனுக்கு எடுத்துச் சொன்னார். மேலும், எல்லாப் பாவங்களையும் போக்கவல்ல சிவகங்கை என்னும் புண்ணியதீர்த்தத்தின் பெருமையையும், சிவப்ரியாம்பாளுடன் கூடி எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் மஹிமையையும் விரித்துக் கூறினார். துர்ஜயனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவர்களின் கட்டளைப்படி மூன்றுமாதகாலம் தினமும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, விபூதி ருத்ராக்ஷம் முதலான சிவசின்னங்களைத் தரித்து ஆயிரம் முறை ஆலயத்தை வலம் வந்து சிவபெருமானை பக்தியுடன் வழிபட்டு வந்தான். முடிவில் அக்கொடிய பாவத்தினின்றும் நீங்கி சிவபதம் அடைந்தான்.

- அத்தியாயம் 6

பிரஹ்மா மேலும் நாரதருக்குக் கூறுகிறார்:

சிவபெருமானின் ஒரு அம்சமாக விஷ்ணுவும் மற்றோரம்சமாக நான்கு முகங்களைக் கொண்ட பிரஹ்மாவாகிய நானும் தோன்றினோம். எனது நான்கு முகங்களால் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களையும் மற்ற சாத்திரங்களையும் கூறி சிவபெருமானைத் துதித்தேன். மிக்க மகிழ்ச்சியுற்ற சிவபெருமானும் "உன் முகத்திலிருந்து வெளிப்பட்ட இந்நான்குவேதங்களைக் கற்று அந்த மந்திரங்கள் வாயிலாக பிராமணர் முதலான நான்கு வருணத்தவர்களும் தங்களுடைய கருமங்களைச் செய்து கொண்டும், தேவர்களையும் அவர்களுக்கெல்லாம் ஒப்பற்ற ஒரே தலைவனான என்னையும் வேதமந்திரங்களால் ஆராதனை செய்து தங்களுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள். முடிவில் மோட்சத்தையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அடைவார்கள்" எனக் கூறினார். அதனால் வேதங்கள் கர்வமுற்றன. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் அவற்றின் கர்வத்தை அழிக்கும் பொருட்டு பிராம்மணர் முதலான நான்கு வருணத்தவர்களிடமிருந்தும் அவரவர்களின் ஞானசக்தியை நீக்கினார். அதனால் அவர்கள் வைதிககருமங்களில் நம்பிக்கை இழந்து வருணாசிரமதருமங்களைக் கைவிட்டனர். வேதத்தைக் கற்போர் யாவருமில்லாததால் வேதங்கள் பூவுலகில் வழக்கொழிந்தன. ஆதலால் அங்கு பெரும் குழப்பம் நிலவியது. யாகங்களைச் செய்வோர் இல்லாததால் இந்திரன் முதலான தேவர்கள் மிகவும் கவலையுற்று எல்லோரும் என்னிடம் முறையிடவும், நான் அனைவருடன் விஷ்ணுவைப் பிரார்த்தித்தேன். அவரும் எங்கள்பால் கருணை கொண்டு வேதங்கள் மனித உருவம் தாங்கி உன்னதபுரியில் அருள்புரிந்துவரும் சிவபெருமானை வணங்கி வழிபட்டால் அவர்களின் குறை தீரும் எனக் கூறினார். பிரஹ்மா அவ்வாறே வேதங்களுக்குக் கட்டளையிடவும், வேதங்கள் உன்னதபுரியை அடைந்து அங்கு மிகுந்த நியமங்களுடன் சிவபெருமானை வழிபட்டு வந்தன. வேதங்கள் சிவபெருமானைப் பலவாறு துதி செய்து தங்களுக்கே உரிய உயர்ந்த சக்தியை மீண்டும் அருளவேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவற்றின்பால் கருணைகொண்ட சிவபெருமான் அப்படியே ஆகட்டும் என அருள் பாலித்தார். அதனால் மீண்டும் உலகில் வேதங்கள் முதலியன கற்கப்பட்டன; வைதிக ஆசாரங்கள் மக்களால் மீண்டும் கடைப்பிடிக்கப்பட்டன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

SUMMARY OF CHAPTERS

Spirirtuality is the foundation as well as the backbone of our most ancient land, the Bhāratadeśa since time immemorial. The Veda-s, the Āgama-s and the Purāṇa-s are considered to be the fundamental scriptures that develop these spiritual ideas and propagate among the masses. Of these, the Purāṇa-s expound and elaborate those highest values and views expressed in the Veda-s in a easily comprehensible manner by all types of people. The various stories, legends, morals, etc. that are found scattered in the Purāṇa-s are the methods adopted to inculcate the higher spiritual values in minds of common people and regulate the lives of the individuals. It is well known that there are 18 mahāpurāṇa-s and according to tradition they are composed (= expounded) by the sage Vyāsa to Sūta and other sages in different times. Highest devotion to the supreme God (Bhakti) is one of the basic themes of all the purāṇa-s. Of these 18, there are nearly 12 purāṇa-s that speak the greatness of Śiva. Among these texts the spiritual greatness of many holy places connected with Śiva, where He is considered to have manifested or has graced the sages and other devotees are recounted with great veneration and detail. These types of devotional legends are called 'sthalapurāṇa' or 'sthalamāhātmya'. The Kāśīkhaṇḍa which is part of the Skandapurāṇa, the Chidambaramāhātmya, Vṛddhācalamāhātmya, Aruṇācalamāhātmya, the Hālāsyamāhātmya which elaborate the holy aspect of Madurai are some

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

such examples for this type. Not only in the Purāṇa-s but also in some of the Śaivāgama-s that have been revealed to gods and sages by Śiva Himself, we find such a list of 64 śaiva holy places that lie scattered throughout our holy Bhāratadeśa. Then we also have such type of texts forming part of the Purāṇa-s which recount the divine greatness of some of the ancient holy rivers. Under such category we may mention the *Tulākāverimāhātmya* (which describe the divine greatness of the Kāveri river), the *Tāmraparṇīmāhātmya* describing the greatness of the Tāmraparṇī river, etc.

Many of these *sthalalapurāṇa*-s have been rendered into Tamil by great śaiva poets thus enriching the Tamil devotional literature. In fact it is one of the distinguishing traits of Tamil literary scene that we have a large array of Tamil sthalapurāṇa texts beginning from the *Nampitiruviḷaiyāṭal* which seems to be the earliest Tamil sthalapurāṇa adapted from the Sanskrit original by one Perumpaṟṟappuliyūr Nampi of the 13th century which glorfies the 64 divine deeds of Śiva at Madurai. After that from the 16th century there commenced a long practice of composing *sthalalapurāṇa*-s in Tamil inaugurated by Maṟaiñāṉacampantar with his *Kamalālayacciṟappu* and *Aruṇācalapurāṇam.*

Many of these texts are still in manuscripts waiting for scholars to edit and publish them and one such text is the *Unnatapurimāhātmyam* that narrates the glory and holy deeds of Śiva at the village now called Milaṭṭūr (also

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Melaṭṭūr) on the south bank of Kaveri in the Thanjavur district. This text in 12 adhyāya-s and said to be part of the *Brahmāṇḍapurāṇa* is a very beautiful and lucid one recounting the divine greatness of this small village, the origin of the Śiva temple there and others.

- Historical importance of the place

Derivation of the name Melaṭṭūr

The village called Unnatapuri is now known as Melaṭṭūr in Tamil. Sri U. Ve. Swaminatha Iyer popularly known as U. ve. Ca and 'Tamil Tāttā' by all Tamil lovers gives an interesting derivation for this word. In one of his essays captioned "Ārāycci" that forms part of his prose writings[2] he explains that the original name of Melaṭṭūr was Mēṭṭūr which is a direct Tamil translation of Unnatapuri. According to him the derivation is mēṭṭūr -mōṭṭūr which by mistake was read moṭṭūr and which finally became melaṭṭūr. Anyway, for the name Mēṭṭūr meaning 'a town on an elevated place' we have the legend in the Unnatapurimāhātmya which we shall see in the following pages.

- Historical Importance of the place

Four inscriptions belonging to the Chola period are found in the different parts of the Unnatapurīśvara temple.

---

[2] See Dr. U. Vē. Cā avarkaḷiṉ urai naṭai nūlkaḷ. Ed. Ma. Vē. Pacupati, et al, Pub. Dr. U. Vē. Cā Nūl Nilayam, Besant Nagar, Chennai, vol.3, 2005, p. 158.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

1. The inscription found on the southern wall of the front maṇḍapa belongs to the period 1122 CE of Vikrama Chola also known as Parakesarivarma. The inscription refers to an endowment of a group of goats whose ghee were used to light a lamp in the temple.

2. The second inscription found at the southern wall of the Gaṇapati temple belongs to the Chola king Rājādhirāja II (1168 CE) referring to the goats that were endowed to light the lamp.

3. The third inscription found at the northern wall of the front maṇḍapa belongs to the period of Kulottuṅga Chola refers to an endowment of land for the temple.

4. The fourth one found at the southern wall of the mahāmaṇḍapa belongs to the period of Rājarāja Chola referring to endowments of land to Unnatapuri temple (known as Akattīccuvaramuṭaiyār) and another Śiva temple known as Vikkiramacōḻiccuvaramuṭaiyār which no longer exists there.

It becomes evident from these inscriptions that Unnatapurīśvara temple was constructed well in the peak period of Chola empire and was a well known śaiva holy place attracting royal endowments from the 11th century onwards.[3]

- Cultural Importance of Melaṭṭūr

[3] Refer to Annual Report of Epigraphy (ARE), nos. 28, 29, 30 and 31.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

In the present times Unnatapuri popularly known as Melaṭṭūr is justly famous for the great tradition of dance-drama called Bhāgavatamela. Some of the well-known episodes from the Bhāgavatapurāṇa have been composed into a dance opera by an eminent musician Venkatarama Bhagavatar of the late 18th century who lived at Melaṭṭūr. Every year during the Narasiṃha Jayanti celebrations these dance-dramas are being enacted daily for a week during the nights. Music, literary eminence, dramatic themes abound in these pieces and are a delight to one's musical talents and a feast to the eyes of a discerning sahṛdaya.

According to some authors Melaṭṭūr is also associated with the life of ŚrīNārāyaṇatīrtha one of the greatest exponents of Bhakti tradition of the 16th-17th century that saw its efflorescence during the Nayak period and flourished and nurtured by great personalities such as Nārāyaṇatīrtha, Bodhendra, ŚrīdharaVeṅkaṭeśa (popularly known as Ayyāvāḷ) who were curiously the followers of AdvaitaVedānta and who lived in the great Agraharams surrounding Kumbakonam on the bank of Kaveri. It is believed that ŚrīNārāyaṇatīrtha composed his dance-drama Pārijātāpaharaṇam mainly for enactment by the Bhāgavatas of Melaṭṭūr.[4]

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Contents of the Unnatapurimāhātmya

- **Chapter 1:**

The text begins by saying that originally this holy legend on Unnatapuri was expounded by Brahmā to sage Nārada. The great legend narrator sage Sūta visits the Naimiśa forests where many great sages such as Vasiṣṭha, Kapila, Kāśyapa who wearing the holy ash and rudrākṣa are immersed in the meditation on Śiva. After seeing Sūta these sages pray to him for narrating to them the great holy legend about the Unnatapuri. Acceding to their sincere and devoted request Sūta starts the narration: In the holy land of Bhārata there is the Chola country that is equal to heaven in prosperity which is made fertile by the perennial river Kāveri where many sages such as Sanaka and the gandharvas frequent so often. In the Dvāparayuga there lived a king by name Kalmāṣapāda in the city of Puravallam. He was a very righteous and valorous king ruling his subjects with great care. He settled in his town many Brahmins well versed in the Vedas. He was a great devotee of Śiva. Unfortunately for a long time he did not have a son who would succeed him to the throne. Being worried very much he approached his family priest and preceptor, Śāṇḍilya and requested him to find the reason for his misfortune.

[4] Ref. "Sri Narayana Tirtha" a brief but highly informative article by Sri B.M. Sundaram. Details of publication unknown

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

The sage Śāṇḍilya possessing the power to know the past, present and the future acquired through his intense penance told him "O king ! this misfortume was in fact a punishment for your criminal act that you had committed in your earlier birth where you punished a Brahmin without any valid reason. Therefore as an atonement proceed on pilgrimage visiting holy places and regularly worshipping Śiva with great devotion. Then you will beget a son". Hearing these words the king Kalmāṣapāda entrusted the kingdom to the responsibility of his trusted minister Gopaliṅga and immediately set out on pilgrimage.

After visiting many holy palces, taking bath in many holy rivers and ponds the king arrived the peaceful hermitage of the sage Agastya. Very attracted by the serene atmosphere of the hermitage the king experienced intense mental peace and approached the sage Agastya and beseeched him for a remedy for his misfortune. Agastya told him that Śiva is the supreme God who creates, maintains and reabsorbs unto Himself all the worlds and He is the highest reality expounded in all the Vedas. Therefore he advised the king to worship all-merciful Śiva with unflinching devotion who has manifested in the form of a Liṅga in the holy place called Unnatapuri situated on the south bank of the river Kāveri. Hearing about that holy place the king rejoiced very much and requested Agastya to narrate to him its greatness.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

- **Chapetr 2:**

The sage Agastya continued: Once upon a time Brahmā was telling sage Nārada that among all the śaiva holy places Unnatapuri is the best and the greatest one. Whoever worships Śiva in the temple there gets all prosperities in this life and attains the Śiva's abode at the end.

In the olden times there was a demon by name Somaka who noticed that only because of the power of the Vedas the gods always win the battles against the demons. So he seized the Vedas from them and hid himself inside the ocean along with the Vedas. Indra and other gods accompanied by Brahmā approached Viṣṇu and prayed to resurrect the Vedas from the demon. Taking pity on the gods Viṣṇu took the form of a large fish, entered inside the ocean, fought with the demon Somaka and drank his blood. Due to that he became intoxicated and started agitating the oceans. When the oceans got mixed the entire earth with people, mountains and forests got submerged causing a great deluge. Again the gods along with Brahmā prayed to Śiva for protection. Śiva created a boat by His power and came to the earth along with the gods on it. Seeing the entire world submerged in water He became angry. On seeing Śiva Viṣṇu in the form of the large fish hit Him by his long tail. When Śiva caught the fish and squeezed it lost its form, regained His original one and restored all the Vedas to the gods. Then He came before Śiva and prostrated Him. Śiva

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

going in the boat finally created a beautiful town on a high ground and entered there. The town possessed all natural beauties with many big mansions and since such sages as Vālakhilya who were great devotees of Śiva were residing there, it gave a divinely peaceful atmosphere. When the gods who came there accompanying Śiva in the boat were bewitched by the beauty and serenity of the town and Śiva disappeared in the brilliant and effulgent Liṅga there. When the gods prayed to Śiva He appeared before them and told with utmost grace that just as He resides delightfully in the Kilāsa along with Pārvatī with the same delight He resides always in the holy town of Unnatapura and assured them that whoever resides in that town will become free from all sins by His grace. From that time that holy town was known as Unnatapura (town on a high place), Plāvanapura and Bhūlokakailāsa. It is equal in greatness and holiness to such śaiva holy towns as Kailāsa, Kumbakonam, Kāśī, Gokarṇa, Tiruvaiyāṟu, Chidambaram, etc.

Brahmā continued to narrate to Nārada the greatness of Unnatapura as follows:

In the olden times once Viṣṇu mounted on His Garuḍavāhana roamed all the worlds and finally reached Kailāsa and tried to enter the abode of Śiva without getting permission from Nandī, the doorkeeper. When Nandī thwarted Him Viṣṇu hit him with His gadāyudha out of rage. When Nandī

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

fell unconscious on the ground the gaṇa-s ran inside and informed Śiva about the incident. Śiva cursed Viṣṇu to be born as a human being and Garuḍa to be born as a small ordinary bird on earth. When both of them prayed to Śiva for pardon Śiva told Viṣṇu that He would be born as Rāma to the king Daśaratha, marry Sītā, kill Rāvaṇa along with many demons, rule the kingdom of Ayodhyā for thousands of years with great fame and finally would come back to his abode Vaikuṇṭha. Śiva also told Him that though there was no atonement for the offence committed against Śiva, Viṣṇu would be free from the great offence if He resides for six months accompanied by Garuḍa at Unnatapurī which is situated on the south bank of Kāverī, lying towards south-east of Tiruvaiyāṟu, towards east of Thanjavur and towards south-west of Kumbakonam.

- **Chapter 3**

Upon the advice of Śiva Viṣṇu reached Unnatapurī after visiting many holy places. Seeing the effulgent Liṅga there He became joyful and started worshipping Śiva regularly in the Liṅga with great devotion reciting the Vedic hymns such as Śrīrudram, Camakam, etc. Pleased by the devotion of Viṣṇu Śiva appeared before Him with effulgent form and hit the earth with great force by His triśūla on the eastern side of the Liṅga. Immediately water gushed forth from there with which Śiva mixed the Gaṅgā water from His matted locks. Thus the water became very holy and Śiva Himself took bath

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta
in that holy water and commanded Viṣṇu also to take bath in that holy water. He also ordered Viṣṇu to do abhiṣeka to the Liṅga daily and worship it for six months whereby Viṣṇu would be free from the sin of offending Śiva. Śiva told Him that there is no other holy water equal to that and any sinner who has committed such great sins as killing a Brahmin would be completely free from those sins if he took bath in that holy water. Taking the advice of Śiva Viṣṇu daily worshipped Śiva in the Liṅga bathing it with that holy water for six months and recited many hymns in praise of Śiva. Appearing before Viṣṇü Śiva asked him to demand any boon which would grant immediately. Viṣṇu prayed to Śiva for the cakrāyudha which Śiva granted joyfully. Then He commanded Viṣṇu to renovate the dilapidated temple, install Bhadrakālī at the northern part of the Unnatapuri and asked Viṣṇu Himself to reside in the form of Narasiṃha as a guardian deity to the town on the western side of the temple after excavating a holy pond there. Viṣṇu asked the divine artisan Viśvakarmā to construct the temple with many enclosures and towers and to build the town consisting of large mansions and flower gardens. The holy water came to be known as Śivagaṅgā and he who takes bath in that water on the day of the viśākhā star in the month of vaiśākha becomes free from all sins.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

- **Chapter 4**

Garuḍa cursed by Śiva roamed here and there in the form of an ordinary small bird. Having forgotten its divine nature due to the curse it was tormenting other birds and was eating the fish from ponds and tanks. At the end of three years it reached Unnatapuri and while trying to catch the fish it fell in the Śivagaṅgā tank. Due to the divine nature of the waters the bird regained its Garuḍa form and its divine knowledge. Having realized that this was the holy water and the holy place Unnatapuri which Śiva mentioned before, Garuḍa started worshipping Śiva there daily taking bath in the Śivagaṅgā, besmearing his body with the holy ash and reciting Śrīrudram and other hymns. Further, Garuḍa was kind towards all animals and birds and desisted from tormenting them. Śiva, pleased by its devotion appeared before it and blessed it. On the command of Śiva Garuḍa excavated a tank in his name on the northern part of the town, bathed in it regulary and worshipped Śiva for a long time. That tank also became very holy and whoever takes bath will become free from all diseases and would not be affected by snake poison, etc. Viṣṇu sent His attendants to Unnatapuri to fetch Garuḍa back to Vaikuṇṭha and Garuḍa left the holy place of Unnatapuri with a heavy heart after saluting Unnatapurīśvara and Śivapriyāmbā. Brahmā concluded this part of the narration assuring that there was no other holy place on earth equal to Unnatapurī.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Then Nārada asked Brahmā to narrate to him the legend of the Brahmin who killed his guru, eloped with his wife and finally became free from the sins by the divine power of Unnatapuri.

- **Chapter 5**

Brahmā continued: In the ancient times there lived in Kāñcīpuram a brahmin by name Dharmajña. He was well versed in the Vedas, very humble and lived a contented life devoted to Śiva. He had a son by name Durjaya whom Dharmajña took, after upanayanam, to another great scholar Suhotā, put him under his care and requested Suhotā to teach the Vedas to his son. Durjaya residing at the residence of Sohotā and living under his care learnt the Vedas and became proficient in them. One day Suhotā left for the holy place of Śrīraṅgam on some personal affair after leaving the house and his young wife under the responsibility of Durjaya. Durjaya, overpowered by lust approached the wife of his guru, told her how her husband was so old and assured her that he would satisfy her carnal desires for which she also agreed. After they had thus spent a long time enjoying each other the guru returned home one day. Durjaya conducted himself so well in the presence of his guru as if nothing has happened during his absence. Suhotā, after performing his daily obligatory rites became fatigued by travel and so slept early in the night. With the connaivance of the wife of his guru Durjaya hit his guru on his head with an iron rod while he was fast asleep and killed

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

him. After concealing the dead body in a pit and taking the belongings from the house he eloped with the wife of his guru in the dead of night. While they came out of the town thieves robbed of his belongings, snatched the wife of his guru and ran away. While Durjaya was left alone and was running for safety the dangerous sin Brahmahatyā caused due to the killing of the Brahmin ran after him taking a huge terrible black form. Durjaya frightened by that ran hither and thither for a long time begging for food in towns and forests. When he approached a pond for water the brahmahatyā sin thwarted him and did not allow him to take water. Durjaya bemoaned his fate, realized the great sin he had committed, repented continuously and was anxious to perform any atonement for that. He decided to go on pilgrimage to wash off his sin and accordingly visited many holy places. After one year he reached a place that was situated at five *krośa* distance from Unnatapuri. At that time Śiva, the Lord of Unnatapuri taking the form of an old man and the goddess Śivapriyāmbā in the form of an old woman, were walking on the south bank of Kāveri. Seeing them from a distance Durjaya ran crying towards them. Goddess Śivapriyāmbā being the universal Mother and seeing the condition of Durjaya took pity on him and pleaded with Śiva to save him who has been tormented day and night due to the brahmahatyā sin. Durjaya came near those divine couple, fell at their feet and fervently prayed to them for a remedy for his great sin. As soon as he fell at their feet the

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

brahmahatyā sin left him and ran away from him unable to bear the divine atmosphere. Durjaya became very happy and prayed to them asking for their identity as well as a remedy for the sin he had committed. Śiva in the form of the old man told Durjaya that there is no rememdy for the type of sin he had committed. Anyway since Durjaya had fallen within His eyesight He advised to him to go immediately to Unnatapuri, worship the Liṅga there regularly after taking bath three times in the Śivagaṅgā tank with single minded devotion and circumambulate the streets surrounding the temple one thousand times daily. Śiva in the guise of the old man also explained the greatness of Unnatapuri and its efficacy in removing all the sins. Durjaya filled with joy prostrated before the old couple and ran towards Unnatapuri. There he performed all the rites including the worship of Śiva in the Liṅga three times daily regularly for three months wearing the rudrākṣa beads and the holy ash on his forehead and all over his body and begging his food. Finally he left his mortal body and reached the world of Śiva. Therefore, Brahmā again assured that there was no other holy town equal to Unnatapuri.

- **Chapter 6**

Brahmā continued his narration: In the old *kalpakāla* Śiva drew unto Himself all the worlds effortlessly and remained as the only Master of everything without any specific guṇa and transceding all the guṇa-s. When He desired

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

to be many His supreme Śakti came out of Him from which Viṣṇu came out as a small portion. Brahmā came out of Viṣṇu's navel and with his five faces he praised Śiva by reciting the four Veda-s, Ṛg, Yajus, Sāma and Atharvaṇa and all the śāstra-s with the fifth face. Śiva told Brahmā that the four Veda-s are verily His command and Brahmins should perform their duties as ordained in the Veda-s. Thus when the Brahmins were performing the rites according to the Veda-s the Veda-s thought themselves that only due to the mantra-s contained in them these Brahmins were able to accomplish their ends by performing the homa in the fire and because of the power of the Veda mantra-s that humans attain mokṣa, the highest puruṣārtha. Therefore the Veda-s considered themselves to be the highest and there was none equal to them. Due to this pride they did not worship Śiva also. In order to teach a lesson to them Śiva withdrew the Citśakti, His supreme power from the Brahmins. As they lost their power of knowledge Brahmins did not recite the Veda-s and eventually stopped the performance of yāga, etc. Because of this there was complete chaos in the world as human beings did not do their duties as ordained in the scriptures according to their varṇa and āśrama. With the stoppage of the Vedmantra-s such as Oṃkāra, vaṣaṭkāra, svāhākāra there was no performance of yāga and therefore the gods and other divine beings did not get their share of *havirbhāga* coming from the yāga-s. Indra, the Lord of gods came to Brahmā and all of them approached Viṣṇu. Having

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

thought for awhile Viṣṇu told them that due to the pride of the Veda-s such a situation had risen. To rectify the mistake the Veda-s should worship Śiva in the holy Unnatapuri taking the human forms. Only by the grace of Śiva they would become free from their pride and shine as before. Accordingly Brahmācommanded the Veda-s to go to Unnatapuri and regularly worship Śiva there with humility and devotion. They also reached Unnatapuri and started orshipping Śiva besmearing their bodies with the holy ash, wearing rudrākṣa beads and reciting the Śrīrudram, etc. They also recited hymns in praise of Śiva. In due course pleased by the devotion of the Veda-s Śiva appeared before them and they all fell at His feet and praised Him. Śiva gracefully wanted to give them a boon and the Veda-s fervently appealed to Śiva to pardon their mistake and to restore the Citśakti to the human beings as before. Śiva, the supreme Lord of the Veda-s accordingly restored the power of knowledge to human beings whereby the Veda-s started to remain in the speech of the Brahmins. Thus the Veda-s also were highly pleased by Śiva's graceful act. Brahmā concluded this chapter by assuring that any person who recites or hears this chapter of the Unnatapurimāhātmya with devotion and attention would certainly understand the inner meanings of the Veda-s and become proficient in all the śāstra-s. Such person also spreads the Vedic culture far and wide and attains fame in all the worlds by becoming proficient in all the 64 arts. He gets a long progeny of sons and grandsons and after enjoying all prosperity in this world attains the world of Śiva at the end.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥ उन्नतपुरीश्वरमाहात्म्यम् ॥

प्रथमोऽध्यायः

श्रीशिवप्रियाम्बासमेतश्रीउन्नतपुरीश्वराय नमः

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् । प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

வெள்ளை ஆடையை அணிந்தவரும், சந்திரன் போல் வெண்ணிறமாயிருப்பவரும், நான்கு கைகளுடன் விளங்குபவரும், பிரகாசமானதும், சாந்தமானதுமான முகத்தையுடையவராயும் விளங்கும் விநாயகப் பெருமானை அனைத்து இடையூறுகளும் நீங்கும் பொருட்டு மனதில் தியானம் செய்யவேண்டும்.

ऐश्वरं परमं तत्त्वमादिमध्यान्तवर्जितम् । आधारं सर्वभूतानामनाधारमविक्रियम् ॥ (1)

अनन्तानन्दबोधाम्बुनिधिमद्भुतविग्रहम् । अम्बिकापतिमीशानमनिशं प्रणमाम्यहम् ॥ (2)

அனைத்துச் சக்திகளும் பொருந்தியதும், தோற்றமும் முடிவும் அற்றதும், உலகிலுள்ள அனைத்துக்கும் ஒரே ஆதாரமாக விளங்குவதும், ஆயினும் தனக்கோர் ஆதாரம் அற்றதும், எல்லையற்ற பேரறிவு மற்றும் பேரானந்தக் கடலாய்த் திகழ்வதும், வருணிக்க இயலாத ஒப்பற்ற வடிவம் கொண்டதும், அம்பிகையின் நாயகனாய் விளங்கும் பரம் பொருளை இடையறாது வணங்குகிறேன்.

यः शिवो नामरूपाभ्यां या देवी सर्वमङ्गला । तयोः संस्मरणात् पुंसां सर्वतो जयमङ्गलम् ॥

எந்த பெருமான் பெயராலும் உருவத்தாலும் சிவமாக (மங்கலங்களையெல்லாம் அளிப்பவராக) விளங்குகின்றாரோ, எந்த தேவியானவள் மங்கலமே வடிவமாகத் திகழ்கின்றாளோ அவ்விரு கடவுளர்களையும் மனதால் நினைப்பவர்களுக்கு எல்லாவிடத்திலும் அனைத்து மங்கலங்களும் உண்டாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ऐशमाद्यन्तनिर्मुक्तमतिसुन्दरमादरात् । नमामि विग्रहं साम्बं संसारामयभेषजम् ॥ (3)

அனைத்தையும் இயக்கும் ஒப்பற்ற ஒரே ஈசுவரனும், தோற்றமும் முடிவுமில்லாதவரும், பேரழகு பொருந்தியவரும், அம்பிகையுடன் எப்போதும் கூடியிருப்பவரும், ஸம்ஸாரமென்னும் நோய்க்கு மருந்தானவருமான (சிவபெருமானை) மிக்க பக்தியுடன் வணங்குகிறேன்.

पुरा कदाचिन्मुनयः नैमिशारण्यवासिनः । सत्रावसानसमये समवेताः स्थिता बुधाः ॥ (4)

वसिष्ठो वामदेवश्च जाबालिर्गौतमो भृगुः । दधीचिरङ्गिराश्चैव विश्वामित्रोऽपि काश्यपः ॥ (5)

नारदःपर्वतश्चैव कण्वः कात्यायनो रविः । याज्ञवल्क्यो विरूपाक्षो धौम्यः संकृतिरेव च ॥ (6)

कपिलःकलाधरःकण्डुः कल्पान्तो कङ्कणःकडुः। मुद्गलो वामदेवश्च जमदग्निः प्रतापवान् ॥ (7)

முன்பு ஒரு சமயம் நைமிசாரண்யமென்னும் புண்ணிய வனத்திற்கு ஸத்ரயாகத்தின் நிறைவில் பேரறிஞர்களான முனிவர்கள் பலர் வந்து சேர்ந்தனர். அவர்களுள், வஸிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, கௌதமர், பிருகு, ததீசி, அங்கிரஸ், விசுவாமித்திரர், காசியபர், நாரதர், பர்வதர், கண்வர், காத்யாயனர், ரவி, யாஜ்ஞவல்கியர், விரூபாக்ஷர், தௌமியர், ஸங்கிருதி, கபிலர், கலாதரர், கண்டு, கல்பாந்தர், கங்கணர், கடு, முத்கலர், வாமதேவர், ஜமதக்னி ஆகியோர் அடங்குவர்.

अब्भक्षो वायुभक्षश्च जीर्णपर्णाशनो गुरुः । एते चान्ये च मुनयो ब्रह्मिष्ठा ब्रह्मवादिनः ॥ (8)

நீரை மட்டுமே அருந்தி உயிர் வாழ்பவர்களும், காற்றை மட்டுமே புசிப்பவர்களும், உதிரிந்த காய்ந்த இலைகளை மட்டுமே உட்கொண்டு பரபிரஹ்ம தியானத்திலேயே ஆழ்ந்திருப்பவர்களான முனிவர்கள் பலரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

शिष्यप्रशिष्यसहिताः सर्वशास्त्रविशारदाः । भस्मोद्धूषितसर्वाङ्गास्त्रिपुण्ड्राङ्कितमस्तकाः॥ (9)

रुद्राक्षमालाभरणाःरुद्रमन्त्रजपे स्थिताः । शिवपूजापरा नित्यं शिवध्यानपरायणाः ॥ (10)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

शिवधर्मरता नित्यं शिवयोगे समास्थिताः । शिवप्रसङ्गं बहुधा कृत्वा तत्रैव संस्थिताः ॥ (11)

சீடர்கள் மற்றும் அவர்களின் சீடர்கள் ஆகியோருடன் சேர்ந்து வந்த அம்முனிவர்கள் அனைத்து சாத்திரங்களிலும் வல்லவர்களாயும், உடல் முழுதும் வெண்ணீறு பூசியும், நெற்றி முதலிய இடங்களில் மூன்று கோடுகளாகத் திருநீற்றை அணிந்தும், ருத்திராக்ஷமாலைகளை அணிந்து கொண்டும், எப்போதும் சிவமந்திரத்தையே ஜபித்துக் கொண்டும், சிவபூஜையிலேயே திளைத்திருப்பவர்களாயும், சிவதியானத்திலேயே ஆழ்ந்திருப்பவர்களாயும், சைவநூல்களில் கூறப்பட்டுள்ள சிவதருமங்களைப் பற்றியே ஒழுகுபவர்களாயும், சிவயோகத்திலேயே ஆழ்ந்திருப்பவர்களாயும், சிவகதைகளையே ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டும் அந்த நைமிசாரண்யத்தில் வாசம் செய்து வந்தனர்.

तस्मिन्नवसरे सूत आजगाम पुराणवित् । हर्षेण महताऽऽविष्टाः श्रोतुकामाः शुभां कथाम् ॥ (12)

तमृषिं पूजयित्वा तु यथायोग्यं यथाविधि । पृष्ट्वा कुशलमव्यग्रं सोपचारपुरस्सरम् ॥ (13)

அவ்வாறிருக்கையில், எல்லா புராணங்களையும் நன்கு அறிந்த ஸூதர் என்னும் முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டவுடன் முனிவர்கள் அனைவரும் மிக்க மனமகிழ்ச்சியுடன் அவரை வரவேற்று தக்கவாறு அவருக்குப் பூஜை செய்து, பல உபசாரங்களுடன் அவருடைய நலன்களை விசாரித்து, பற்பல புண்ணிய கதைகளைக் கேட்கும் ஆவலுடன் இருந்தனர்.

तं सूतं परिवृत्यैव स्थिताः सर्वे महर्षयः । पूजितस्सोऽपि धर्मात्मा पूजार्हैर्मुनिपुङ्गवः ॥ (14)

नमस्कृत्वा मुनीन् सर्वान् यथायोग्यं यथाविधि । तैर्दत्तमासनं भेजे सुप्रीतेनान्तरात्मना ॥ (15)

நைமிசாரண்ய முனிவர்கள் அனைவரும் ஸூதமுனிவரைச் சூழ்ந்து அமர்ந்தனர். ஸூதமுனிவரும் அவர்களுடைய பூஜையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு அவர்கள் எல்லோரையும் தகுந்தவாறு வணங்கி, மிக்க அன்புடன் ஆசனத்தில் அமர்ந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ततः सर्वे मुनिश्रेष्ठाः श्रोतुकामाः शुभां कथाम् । परिवृत्य महात्मानं सूतं पौराणिकोत्तमम् ॥ (16)

பின்னர் முனிவர்கள் அனைவரும் மஹாத்மாவான ஸூதமுனிவரைச் சூழ்ந்தமர்ந்து அவரிடமிருந்து பல புராணக் கதைகளைக் கேட்கும் ஆவலுடன் இருந்தனர்.

ऊचुस्तमृषयः सर्वे पुराणार्थविशारदम् । सूत सूत महाप्राज्ञ व्यासशिष्य महामते ॥ (18)

त्वत्तः श्रुतान्यशेषाणि पुराणानि पुरा खलु । पुराणेषु च सर्वेषु मध्ये ब्रह्माण्डनामतः ॥ (19)

उक्तं पुराणमस्माकं सर्वाश्चर्यमयं शुभम् । तस्मिन् पुराणे संवादे ब्रह्मनारदयोः परम् ॥ (20)

அவர்கள் புராணக்கதைகளில் வல்லவரான ஸூதமுனிவரை நோக்கி " ஓ ஸூத முனிவரே ! அறிவிற் சிறந்தவரே ! வியாஸமுனிவரின் சீடரே ! முன்பு தங்களிடமிருந்து நிறைய ஆச்சரியமான கதைகளைக் கொண்ட பல புராணங்களை நாங்கள் கேட்டுள்ளோம். அப்புராணங்களுள் பிரஹ்மாண்டபுராணத்தின் நடுவில் பிரஹ்மாவிற்கும் நாரதமுனிவருக்கும் நிகழ்ந்த சம்பாஷணையும் தங்களால் விளக்கிக் கூறப்பட்டது."

श्रीउन्नतपुरेशस्य माहात्म्यं पुण्यगौरवम् । उक्तं त्वया पुनर्ब्रूहि श्रोतुकामा वयं हि तत् ॥ (21)

वक्तुमर्हस्यशेषान्नो श्रीउन्नतपुरेशितुः । वैभवं देव देवस्य अस्माकं कृपया वद ॥ (22)

" அச்சம்பாஷணையில் புண்ணியம் மிக்க உன்னதபுரீசுவரரின் தெய்வீக மஹிமையை விளக்கும் புராணக் கதையும் தங்களால் கூறப்பட்டது. அக்கதையை மீண்டும் கேட்பதற்கு நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம். எனவே, தயையுடன் அந்த உன்னதபுரேசுவரரின் அளவற்ற பெருமையை விளக்கும் கதையை எங்களுக்குக் கூற வேண்டுகிறோம் " என்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति पृष्टो मुनिः सूत ऋषिभिस्तत्त्वदर्शिभिः । हर्षेण महताऽऽविष्टो प्रोवाच मधुरं वचः ॥ (23)

இவ்வாறு உயர்ந்த தத்துவங்களை அறிந்த முனிவர்கள் அவரை மிகவும் வேண்டவும், ஸூதமுனிவர் பெருமகிழ்ச்சி கொண்டவராய் இவ்வாறு இனிய சொற்களுடன் கூறினார்.

साधु साधु महात्मानो युष्माभिस्सम्यगीरितः । श्रीउन्नतपुरेशस्य माहात्म्यं पापनाशनम् ॥ (24)

वक्ष्याम्यहं मुनिश्रेष्ठाः श्रृणुत मोक्षसाधनम् । श्रृणुध्वं ऋषयस्सर्वे गुह्यात् गुह्यतरं परम् ॥ (25)

इत्युक्त्वा मुनिशार्दूलो कथयामास तत्त्वतः ।

" ஓ முனிவர்களே ! நன்று கூறினீர்கள். சிறந்த முனிவர்களே ! உன்னதபுரேசுவரரின் பெருமையை விளக்கும் கதையானது அனைத்துப் பாவங்களையும் நீக்க வல்லது. மோக்ஷத்தை அடைவதற்கான ஒரு சிறந்த சாதனமானதும், மிகவும் இரகசியமானதும் அக்கதையை நான் உங்களுக்கு விரித்துக் கூறுகிறேன். மனதை ஒருமுகப்படுத்தி அக்கதையைக் கவனமாகக் கேளுங்கள் " என்று கூறி ஸூதமுனிவர் அக்கதையைச் சொல்லத் தொடங்கினார்.

श्री सूतः ॥

अस्ति कश्चिन्महीभागे स्वर्गखण्ड इवापरः । सर्वाश्चर्यमयो विप्राश्चोलदेश इतीरितः ॥

ஓ அந்தணர்களே ! இந்தப் பூவுலகில் சுவர்க்கத்திற்கு ஒப்பானதும் அதிசயிக்கத் தக்க பல சிறப்புகள் உள்ளதுமான சோழநாடு அமைந்துள்ளது.

तस्मिन् मध्ये नदी रम्या कावेरी सरितां वरा । प्रवहत्येव सततं पुण्यतोया महानदी ॥

அந்நாநாட்டில் நதிகளுள் சிறந்ததும் புண்ணிய தீர்த்தத்தைக் கொண்டதுமான காவேரி என்னும் புகழ் பெற்ற ஆறு பாய்ந்தோடுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

सर्वपापप्रशमनी ह्यप्सरोगणसेविता । सह्यकन्या महाभागा मज्जताम् मङ्गलायनी ॥

योगिभिः सनकाद्यैश्च महर्षिगणसेविता । गन्धर्वैः किन्नरैश्चैव सिद्धविद्याधरैः सदा ॥

அந்தக் காவேரி ஆறு அனைத்துப் பாவங்களையும் போக்கவல்லது. அதில் நீராடுவோர்க்கு எல்லா மங்கலங்களையும் அளிக்கவல்லது. மேற்கிலுள்ள ஸஹ்யமலையில் உற்பத்தியாகும் அந்த ஆறு தேவலோகத்திலுள்ள அப்ஸரஸ் என்னும் மங்கையர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. ஸநகர் முதலான யோகிகளாலும் மற்ற முனிகணங்களாலும், ஸித்தர்கள், வித்தியாதரர்கள், கந்தர்வர்கள் ஆகியோரால் எப்போதும் சேவிக்கப்படுவது.

सेव्यमाना सदा सद्भि ऋषिभिश्च महात्मभिः । वकुलैः पनसैर्लोध्रैश्चूतजम्बीरजम्बुकैः ॥

चिरबिल्वैर्महाबिल्वैरङ्कोलैश्च करञ्जकैः । कपित्थाश्वत्थनारङ्गैर्नालिकेरैर्महोन्नतैः ॥

नीरजैः शोभिता देवी कावेरी पुष्पितद्रुमैः । नद्यास्तस्या जलेनैव केदारास्तत्र सिञ्चिताः ॥

முனிவர்களாலும் நற்குணமுடையவர்களாலும் எப்போதும் போற்றப்படும் அப்புண்ணிய நதி பாயுமிடங்களிலெல்லாம் பலா, புன்னை, மகிழம், எலுமிச்சை, மா, நாவல், தென்னை முதலான பழம் தரும் மரங்களும், பில்வம், மஹாபில்வம், தாமரை, தாழம்பூ முதலான பூஜைக்கேற்ற பூக்களைத் தரும் மரங்களும் ஏராளமாகச் செழித்து வளர்ந்துள்ளன. அந்நதியின் நீரினால் கணக்கற்ற வயல்களுக்கு நீர் பாய்ந்து வளம் கொழிக்கிறது.

फलन्ति तत्र विप्रेन्द्रा धान्यानि विविधानि च । स तु देशो महारम्यो धनधान्यसमृद्धिमान् ॥

ஓ அந்தணர்களில் சிறந்தவர்களே ! பூக்களும் பழங்களும் பற்பல தானியங்களும் விளையும் வளம் பொருந்திய அந்த சோழநாடு மிக்க எழில் உடையது. மனதிற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிப்பது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

बहुपत्तनसंयुक्तो बहुरत्नसमन्वितः । बहूनि चाग्रहाराणि ग्रामाणि नगराणि च ॥
सन्ति तत्र सुपुण्यानि राष्ट्राणि विविधानि च । तेषु द्विजा महात्मानो ब्रह्मिष्ठा वेदपारगाः ॥

அந்நாடு செல்வச்செழிப்புடைய பல நகரங்களையும், பிராஹ்மணர்கள் அதிகம் வாழும் ஏராளமான அக்கிரஹாரங்களையும் கொண்டது. அங்கு வாழும் அந்தணர்கள் வேதங்களை நன்கு கற்று எப்போதும் ஓதுபவர்கள்.

क्षत्रियाश्च महाशूरा युद्धकर्मविशारदाः । वैश्याः स्वधर्मनिरताः कृषिगोरक्षजीविनः ॥
शूद्राश्च द्विजमुख्यानां शुश्रूषणपरायणाः । स्वधर्मनिरता नित्यं निवसन्ति समन्ततः ॥

அந்நாட்டு க்ஷத்திரியர்களும் ஒப்பற்ற வீரம் உடையவர்கள். போரில் எப்போதும் பகைவர்களை வெற்றி கொள்பவர்கள். வணிகத்தொழில் செய்யும் வைசியர்கள் விவசாயம், பசுக்களை வைத்துக் காத்தல் முதலான தொழில்களில் ஈடுபட்டவர்கள். சூத்திரர்களும் அந்தணர் முதலானோர்களுக்கு எப்போதும் தொண்டு செய்பவர்களாய் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு மக்கள் அனைவரும் காவிரி பாயும் அச்சோழநாட்டில் தத்தமது கடமைகளை வழுவாது செய்து வாழ்ந்து வந்தனர்.

स तु देशो महारम्यो कदलीषण्डमण्डितः । तस्य देशस्य मध्ये तु पुरवल्लमिति श्रुतम् ॥
तस्मिन् पुरवरे रम्ये राजा कल्माषपादकः । अवसद्द्वापरस्यान्ते राज्यधर्मेण पालयन् ॥

வாழைத் தோட்டங்கள் மிகுந்து இயற்கை எழில் கொஞ்சும் அச்சோழநாட்டிலே புரவல்லம் என்னும் அழகிய நகரம் இருந்தது. துவாபரயுகத்தின் இறுதியில் அந்நகரத்தைக் கல்மாஷபாதன் என்னும் பெயருடைய அரசன் தருமம் வழுவாது ஆண்டு வந்தான்.

स तु सर्वगुणोपेतः सूर्यान्वयविवर्धनः । वेदवेदाङ्गतत्त्वज्ञो धनुर्वेदे च निष्ठितः ॥
बुद्धिमान् मधुरभाषी सर्वेषां च हिते रतः । शूरश्च कृतविद्यश्च युद्धकर्मविशारदः ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சூரியவம்சத்தைச் சேர்ந்த் அவ்வரசன் எல்லா நற்குணங்களும் பொருந்தியவன். வேதம், வேதாங்கங்களைக் கற்று வில்வித்தையில் தேர்ச்சி பெற்றவன். அறிவுக்கூர்மையும், இனிய சொற்களையுடையவனாயும், சிறந்த வீரனாயும், கற்க வேண்டியவற்றைக் கற்றவனாயும், நாட்டு மக்களின் நலத்தில் அக்கறையுடையவனாயும் விளங்கினான்.

नित्यान्नदाननिरतः नित्यं ब्राह्मणपूजकः । दीक्षितो व्रतसम्पन्नः सम्मतः स सतां प्रियः ॥

மேலும், அவ்வரசன் பசித்தவர்களுக்கு எந்நேரமும் உணவளிப்பவனாயும், அந்தணர்களைப் போற்றி வணங்குவனாயும், சாத்திரங்களில் விதிக்கப்பட்ட விரதங்களை உரிய காலத்தில் அனுஷ்டித்தும், நல்லோர்களின் ஆசியைப் பெற்றவனாகவும் இருந்தான்.

गजैरश्ववरैरुष्ट्रै रथैश्चैव पदातिभिः । वृतः कोटिसहस्रैश्च नानारत्नविराजितैः ॥

சிறந்த பொன்னாலும் இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்ட யானைப் படையும், குதிரைப் படையும், ஒட்டகங்கள் மற்றும் காலாட்படைகளும் அவ்வரசனுக்கு இருந்தன.

किरीटकुण्डलधरो हारनूपुरशोभितः । पद्मपत्रविशालाक्षो पीनवक्षो महामनाः ॥

सर्वलक्षणसम्पन्नः शिवभक्तो महामतिः । राज्यं चकार धर्मेण चोलराजः शतं समाः ॥

கிரீடகுண்டலங்களையும், பொன்மாலைகளையும் அணிந்து, தாமரைபோன்ற அகன்ற கண்களையும், உருண்டு திரண்ட மார்புகளையும் கொண்டவனாயும், நல்லெண்ணங்களை உடையவனாகவும் அவன் விளங்கினான். அவ்வரசன் சிவபக்தி மிக்கவனாகவும் இருந்தான். இவ்வாறு அவன் நூறாண்டுகள் தருமம் வழுவாது சோழநாட்டை ஆண்டு வந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

नासीत् पुत्रो वंशकरस्तस्य राज्ञो महात्मनः । तेन दुःखेन धर्मात्मा मन्त्रयामास मन्त्रिभिः ॥

அவ்வரசனுடைய வமிசத்தை விளங்கச் செய்வதற்கு ஒரு மகன் இல்லை. அதனால் பெரிதும் மனக்கவலையுற்ற அரசன் மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தினான்.

मन्त्रयित्वाथ निश्चित्य राजा परमधर्मवित् पुरोहितं समाहूय शाण्डिल्यं मुनिपुङ्गवम् ॥

அதன்படி தருமவானாகிய அந்த அரசன் தன்னுடைய குலகுருவும் புரோஹிதருமாகிய சாண்டில்யமுனிவரை அழைத்தான்.

पूजयित्वा यथान्यायमर्घ्यपाद्यपुरस्सरम् । प्रणम्य परया भक्त्या प्राञ्जलिर्वचनमब्रवीत् ॥

முறைப்படி அம்முனிவரை வரவேற்று உபசரித்து மிக்க பக்தியுடன் அவரை வணங்கி கூப்பியகைகளுடன் கூறினான்.

॥ राजा ॥

அரசன்:

अनपत्योऽस्मि विप्रेन्द्र मम पत्न्यां सुतोत्तमः । सदृश्यां पाण्ड्यकन्यायां नासीद्वंशकरो मम ।

ஓ அந்தணர்களுள் சிறந்தவரே ! பாண்டியநாட்டு இளவரசியான எனது மனையாளிடத்தில் எனது வமிசம் விளங்குவதற்கு ஒரு சிறந்த புதல்வன் இதுவரை உண்டாகவில்லை.

प्रतिबन्धेन केनेति नाहं जाने द्विजोत्तम । तदुपायं विचिन्त्याशु वक्तुमर्हसि साम्प्रतम् ॥

அதற்கு யாது காரணம் என்றும் எங்களுக்குத் தெரியவில்லை. தாங்கள் என் மீது கருணைகொண்டு எனக்குப் புதல்வன் பிறப்பதற்கான உபாயத்தை உடனே கூறவேண்டும் எனப் பிரார்த்தித்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति श्रुत्वा राजवाक्यं शाण्डिल्यो मुनिसत्तमः । ज्ञानदृष्ट्या विचार्याशु राजानं प्रत्युवाच ह ॥

அரசனுடைய பிரார்த்தனையைக் கேட்ட சாண்டில்ய முனிவரும் தன்னுடைய ஞானதிருஷ்டியினால் அதற்கான காரணத்தை அறிந்தவராய் அரசனிடம் இவ்வாறு கூறினார்.

सम्यक् पृष्टस्त्वया राजन् अनपत्यस्य कारणम् । प्रायश्चित्तं च वक्ष्येऽहं यथाशास्त्रं शृणुष्व ह ॥

ஓ அரசனே ! உனக்குத் தக்க புத்திரன் பிறக்காததற்கான காரணத்தை நீ கேட்டாய். அப்பாவத்திற்கான பிராயச்சித்தத்தைக் கூறுகிறேன். கேள்.

पूर्वे जन्मनि राजेन्द्र ब्राह्मणो वेदपारगः । अपराधं विना कश्चित् ब्राह्मणेन त्वया नृप ॥

नाशितः क्षेत्रसंवादात् तेन पापेन साम्प्रतम् । नासीत् वंशकरः पुत्रस्तव राजन् न संशयः ॥

ஓ சிறந்த அரசனே ! நீ முந்தைய பிறவியில் வேதங்களை நன்கு கற்றுணர்ந்த அந்தணனாகப் பிறந்திருந்தாய். விளைச்சல் நிலம் தொடர்பாக காரணமின்றியே வேறொரு நல்லொழுக்கமுடைய பிராஹ்மணன் உன்னால் நாசமடைந்தான். அதனால் தான் உனக்கு இப்பிறவியில் புத்திரபாக்கியம் இல்லை.

इति श्रुत्वा वचस्तस्य शाण्डिल्यस्य महात्मनः । उत्थाय सहसा राजा प्रणम्य विनयाद्द्विजम् ॥

अब्रवीत् पृश्रितं वाक्यं प्राञ्जलिर्नृपसत्तमः ।

சாண்டில்ய முனிவரின் இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசன் உடனே ஆசனத்திலிருந்து எழுந்து பணிவுடன் முனிவரை வணங்கி, கூப்பிய கைகளுடன் இவ்வாறு கூறினான்:

समाचक्ष्व मुनिश्रेष्ठ प्रायश्चित्तं ममाधुना ॥

" ஓ முனிசிரேஷ்டரே ! நான் செய்த அப்பெரிய பாவத்திற்கு இப்பொழுதே பிராயச்சித்தம் கூறுங்கள்" .

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

त्वमेव वेत्सि सर्वं च सर्वशास्त्रविशारद । इत्युक्तः स तु विप्रेन्द्रो राज्ञा तेन महात्मना ॥
विचार्योवाच चोलेन्द्रं शाण्डिल्यः सर्वधर्मवित् । त्वमद्य सहसा राजन् तीर्थयात्रापरो भव ॥

" தாங்கள் அனைத்து சாத்திரங்களையும் கற்ற நிபுணர். நீங்கள் ஒருவரே எல்லாவற்றையும் அறிந்தவர்" . இவ்வாறு அரசன் கூறக்கேட்ட சாண்டில்ய முனிவர் எல்லா தருமங்களையும் நன்கறிந்தவராதலால் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தபின் அரசனிடம், ' நீ இன்றே தீர்த்தயாத்திரைக்குப் புறப்படு' என்று கூறினார்.

तीर्थयात्राविशुद्धात्मा ततोऽर्चय महेश्वरम् । तेन पुण्येन महता धूतपापो भविष्यसि ॥
ततः पुत्रो नृपश्रेष्ठ गणश्रेष्ठो भवेत्तव ।

' தீர்த்தயாத்திரையின் மூலமாக உனது பாவங்கள் நீங்கப் பெற்றவுடன் மஹேசுவரனாகிய சிவபெருமானை வழிபடுவாயாக. அப்புண்ணியத்தினால் சுத்தமடைவாய். பின்னர் உனக்கு நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற ஒரு மகன் பிறப்பான்' என்று மேலும் சாண்டில்ய முனிவர் கூறினார்.

तथेति सहसा राजा मन्त्रिश्रेष्ठं महामतिम् ॥
गोपलिङ्गेति विख्यातं राज्ञः प्रियहिते रतम् । स्थाप्य राज्ये स धर्मात्मा तीर्थयात्रां प्रचक्रमे ॥

அரசனும் அவ்வாறே கோபலிங்கன் எனும் பெயர் கொண்டவனும் அரசனுடைய நன்மையில் கருத்தாயிருப்பவனுமான தனது மந்திரியினிடத்தில் இராஜ்ஜியத்தை ஒப்படைத்துவிட்டு தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

स्नात्वा सर्वेषु तीर्थेषु भुवं कृत्वा प्रदक्षिणम् । दृष्ट्वा ऋषीणां सर्वेषां आश्रमाणि माहात्मनाम् ॥

नमस्कृत्वा मुनीन् सर्वान् क्रमेण मुनिपुङ्गवान् । अगस्त्यस्याश्रमं प्राप सर्वाश्चर्यसमन्वितम् ॥

பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி இந்தப் பூவுலகையே ஒருமுறை வலம் வந்து, ஏராளமான முனிவர்களின் ஆசிரமங்களையெல்லாம் தரிசித்து, அம்முனிகணங்களை வணங்கி, முடிவில் அகத்தியமுனிவருடைய ஆச்சரியமான ஆசிரமத்தை அவ்வரசன் வந்தடைந்தான்.

तत् ब्रह्मभवनप्रख्यं ब्रह्मघोषनिनादितम् । ऋषिभिर्वालखिल्याद्यैः सेवितं मुनिपुङ्गवैः ॥

देवगन्धर्वयक्षैश्च सिद्धविद्याधरैरपि । अनेकवृक्षसहितं बहुपुष्पसमावृतम् ॥

அவ்வாசிரமம் பிரஹ்மாவினுடைய திருமாளிகையை ஒத்திருந்தது. அங்கு எப்போதும் வேதகோஷம் நிறைந்திருந்தது. வாலகில்யர்கள் முதலான ரிஷிகளால் எப்போதும் சேவிக்கப்பட்டதாக இருந்தது. மற்றும் தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள் முதலிய வானவர்களாலும், பலவித மரங்களாலும், நறுமணம் பொருந்திய மலர்களாலும் நிறைந்திருந்தது.

कन्दमूलफलाद्यैश्च पद्मनिभैश्च संवृतम् । वल्कलैरजिनैश्चैव कुशकैश्चैव शोभितम् ॥

பல்வகைப்பட்ட முலிகைகளும், கிழங்குகளும், பழங்களும் நிறைந்திருந்தன. ஆங்காங்கே முனிவர்களுடைய மரவுரிகளும், தவம் செய்வதற்கேற்ற முறையில் மான் மற்றும் கரடிகளின் தோல்களினாலான ஆசனங்களும் நிறைந்து காணப்பட்டன.

वापीकूपतडाकैश्च शोभितं सुमनोहरम् । ददर्श राजा धर्मात्मा चोलदेशाधिपो महान् ॥

पर्णशालामगस्त्यस्य तस्य तेजोभिः संवृताम् । तस्या मध्ये मुनिश्रेष्ठं दृष्ट्वा तं दीप्ततेजसम् ॥

சிறிய நீரூற்றுகளும், கிணறுகளும், அழகிய குளங்களும் நிறைந்து அழகுடன் கூடிய அந்த ஆசிரமத்தையும், அங்கு அமைதியான குடிலில் அகஸ்திய முனிவர் வீற்றிருந்து தனது தவ ஒளியினால் அனைத்தையும் விளக்கமுறச் செய்வதையும் தருமவானாகிய சோழமன்னன் கண்டான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

हर्षेण महताऽऽविष्टो ननाम भुवि दण्डवत् । प्रणमन्तं मुनिर्दृष्ट्वा राजानं सूर्यवंशजम् ॥

पप्रच्छ कुशलं विप्राः समभ्यर्च्य यथाविधि । पुरे कोशे जनपदे राष्ट्रेषु नगरेषु च ॥

மனதில் பெருமகிழ்ச்சியுடன் அம்மன்னன் முனிவரின் முன் காலடியில் தண்டம் போல் வீழ்ந்தான். சூரியவமிசத்தைச் சேர்ந்த அந்த மன்னன் தன்னை வீழ்ந்து வணங்குவதைக் கண்ட அகஸ்தியமுனிவர் அவனுடைய நலத்தையும், மற்றும் சோழநாட்டிலுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும், காடுகளிலும் வாழும் மக்களின் நலத்தையும் மிகுந்த அக்கறையுடன் கேட்டறிந்தார்.

पृच्छन्तं मुनिशार्दूलमुवाच मधुराक्षरम् । कृपया तव विप्रेन्द्र सर्वं कुशलमेव हि ॥

अद्य मे सफलं पुण्यं अद्यमे सफलं तपः । अद्यमे सफलं यज्ञो अद्यमे सफलं क्रिया ॥

அரசனும் இனிய சொற்களால் முனிவர்களுள் சிறந்த அகஸ்தியருக்கு ‘ மறையவர்களில் சிறந்தவரே! தங்கள் கிருபையினால் எல்லோரும் நலமுடன் வாழ்கின்றனர். இன்று எனது பிறவிப்பயனை அடைந்தேன். எனது தவத்தின் பயனையும் அடைந்தேன். நான் செய்த யாகங்களும் விரதங்களும் பயனளித்துவிட்டன ’ என விடையளித்தான்.

इत्युक्त्वा मुनिशार्दूलं पुनः प्राह नृपोत्तमः ।

இவ்வாறு விடையளித்துவிட்டு அவன் மேலும் கூறினான்.

॥ राजा ॥

அரசன்

अम्भोद्भव मुनिश्रेष्ठ अहं पुत्रार्थकारणात् ॥

अपृच्छं स्वकुलाचार्यं शाण्डिल्यं मुनिपुङ्गवम् । केनोपायेन विप्रेन्द्र पुत्रं प्राप्स्याम्यहं शुभम् ॥

தண்ணீரில் தோன்றிய சிறந்த முனிவரே ! புத்திரபாக்கியம் வேண்டி எங்களது குலகுருவான சாண்டில்யமுனிவரிடம் ‘ எனக்கு ஒரு நல்லபுத்திரன் எவ்வாறு பிறப்பான்’ என வினவினேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति पृष्टो मया विप्रः प्राह गम्भीरया गिरा । तीर्थयात्रां कुर्वन्नृप शिवमर्चय भक्तितः ॥
इत्युक्तो गुरुणा हन्त तीर्थयात्रा मयाकृता ॥

அம்மகானும் ' நீ மிக்க பக்தியுடன் தீர்த்தயாத்திரை செல்வாயாக' என என்னைப் பணித்தார். நானும் அவ்வாறே குலகுருவின் சொற்படி தீர்த்தயாத்திரை சென்று இங்கு வந்தடைந்தேன்' .

अद्य मे शिवपूजार्थं स्थानं वक्तुं त्वमर्हसि । यस्मिन् क्षेत्रे महादेवः प्रसन्नः स्यादुमापतिः ॥
वक्तुमर्हसि विप्रेन्द्र कृपया मयि सांप्रतम् ।

' நான் சிவபூஜை செய்வதற்கு உமாபதியான பரமேசுவரன் எப்போதும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் ஒரு சிறந்த புண்ணிய க்ஷேத்திரத்தை இன்று கருணைகூர்ந்து எனக்குத் தாங்கள் கூறவேண்டும்' எனப் பிரார்த்தித்தான்.

इति कल्माषपादस्य वचः श्रुत्वा सुदुर्लभाम् ॥
वक्तुमारभतेऽगस्त्यःकथां सन्मङ्गलप्रदाम् ।

கல்மாஷபாதனென்னும் அச்சோழமன்னனின் வார்த்தைகளைக் கேட்ட அகஸ்தியமுனிவர் அனைத்து ஜீவராசிகளுக்கும் எல்லா மங்களங்களையும் நல்கும் புண்ணியகதையைக் கூறத்தொடங்கினார்.

सर्वेषामेव देवानां ईश्वरः परमो गुरुः ॥
सर्वैरपि महादेवः पूजनीयः प्रयत्नतः । स्रष्टा पालयिता चैव संहर्ता परमेश्वरः ॥

' எல்லா தேவர்களுக்கும் ஒப்பற்ற ஒரே குருவாக விளங்குபவர் பரமேசுவரனாகிய சிவபெருமானே. அதனால் அவர் எல்லோராலும் சிறந்த பக்தியுடன் பூஜிக்கத் தக்கவர். எல்லா உலகங்களையும் படைத்து, காத்து முடிவில் ஒடுக்குபவர் அவர் ஒருவரே' .

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

स एव सर्वजन्तूनामादिभूतः सनातनः ॥
एक एव सुरश्रेष्ठः सर्ववेदेषु पठ्यते ।

' அவர் ஒருவர்தான் அனைத்து உயிர்களுக்கும் முன்பாக முதலிலேயே இருப்பவர். அழிவற்றவர். தேவர்கள் அனைவர்களிலும் சிவபெருமான் ஒருவரே மேலானவரென்று வேதங்கள் உரைக்கின்றன' .

तस्मात्त्वं नृपशार्दूल लिङ्गमूर्तिधरं शिवम् ॥
पूजयस्व यथान्यायं शङ्करं लोकशङ्करम् ।

' எனவே ஒ சிறந்த அரசனே ! இலிங்கத்தில் எழுந்தருளியிருப்பவரும், எல்லா உலகிற்கும் நன்மை ஒன்றையே செய்பவருமான சிவபெருமானைப் பக்தியுடன் வழிபடுவாயாக' .

दिव्यलिङ्गेन संयुक्तं स्थलमस्ति महत्तरम् ॥
कावेर्या दक्षिणे तीरे श्रीउन्नतपुरं शुभम् । सर्वसिद्धिकरं क्षेत्रं वर्तते नृपसत्तम ॥

' அத்தகைய தெய்வீகத்தன்மை பொருந்திய இலிங்கத்தையுடையதும் எல்லா சித்திகளையும் நல்குவதுமான புண்ணியத்தலமொன்று காவேரி நதியின் தென்கரையில் அமைந்துள்ளது' .

क्षेत्रे तस्मिन् सदा राजन् प्रसन्नः पार्वतीपतिः । पूर्णांशो वर्तते तत्र परमात्मा सनातनः ॥

' அரசனே ! அப்புண்ணிய க்ஷேத்திரத்தில் பார்வதிநாயகனான பரமேசுவரன் எப்போதும் பரிபூர்ணமாக எழுந்தருளியிருக்கிறார்' .

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तत्रैव गत्वा सहसा वाञ्छितार्थफलप्रदम् । सम्पूजय यथान्यायं श्रीउन्नतपुरीश्वरम् ॥

' நீயும் அங்கு விரைவில் சென்று விரும்பியவற்றையெல்லாம் நல்கும் ஸ்ரீ உன்னதபுரீசுவரராகிய சிவபெருமானை முறைப்படி வழிபடுவாயாக' என்று கூறினார்.

अगस्त्यवचनं श्रुत्वा राजा परमहृष्टवान् । पुनः पप्रच्छ धर्मात्मा तमृषिं कुम्भसम्भवम्॥

அகஸ்தியமுனிவரின் வார்த்தைகளைக் கேட்ட அம்மன்னன் மிகவும் மகிழ்ச்சியடைந்தவனாய் தர்மாத்மாவான அந்த மஹரிஷியை மீண்டும் வினவினான்.

तस्मिन् देशे महाक्षेत्रं कावेर्या दक्षिणे तटे । हेतुना केन वा देवः पूजितश्च प्रयत्नतः ॥

' காவேரியின் தென்கரையிலிருக்கும் அந்த க்ஷேத்திரத்தில் சிவபெருமானை என்ன காரணத்தினால் சிறப்பாக வழிபடுகின்றனர் ? '

सान्निध्यमकरोत् केन पार्वत्या सहितः शिवः । कारुण्यात् मयि विप्रेन्द्र सर्वं ब्रूहि यथाक्रमम्॥

' எக்காரணத்தினால் பார்வதியுடன் கூடி சிவபெருமான் எப்போதும் எழுந்தருளியிருக்கிறார் ? ஓ முனிவரே ! என்மீது மிகுந்த தயை கொண்டு எல்லாவற்றையும் எனக்கு உரைக்க வேண்டுகிறேன் ' என்றான்.

स तस्य वाक्यं सकलं निशम्य महामुनिर्वक्तुमनाः कथाः शुभाः ।
शिवभक्तियुतस्यास्य नृपस्य वै शिवस्य नामामृत पूरिताश्च ॥

முனிவரும் அரசனின் வினாக்களைக் கேட்டு அத்தகைய பக்தியுடன் விளங்கும் அவனுக்கு சிவபெருமானுடைய திருநாமங்களடங்கியதும் புண்ணியமானதுமான சிவகதைகளைச் சொல்லத்தொடங்கினார்.

॥ इति श्री ब्रह्माण्डपुराणे श्री उन्नतपुरीश्वरमाहात्म्ये प्रथमोध्यायः ॥

இவ்வாறு பிரஹ்மாண்டபுராணத்தில் உன்னதபுரிமாஹாத்மியத்தில் முதலாம் அத்தியாயம் நிறைவுற்றது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

द्वितीयाध्यायप्रारम्भः

॥ अगस्त्यः ॥

அகஸ்தியர் கூறினார்

पुरा कदाचिद्वागीशो मुनीन् सर्वान् समाह्वयत् । तत्राहं च गतो राजन्नाज्ञया ब्रह्मणस्तदा ॥

முன்பொரு சமயம் வாகீசுவர்ரான பிரஹ்மா எல்லா முனிவர்களையும் அழைத்தார். அவருடைய ஆணையை ஏற்று நானும் அங்கு சென்றேன்.

गत्वा तं च नमस्कृत्वा सर्वे च मुनिपुङ्गवाः । तस्थौ प्राञ्जलयो राजन्नासनेषु यथोचितम् ॥

சென்றவுடன் எல்லா முனிவர்களும் அவரை வணங்கி கூப்பிய கைகளுடன் ஆசனத்தில் அமர்ந்திருந்தோம்.

तस्मिन्नवसरे राजन्नारदो मुनिसत्तमः । पितामहमुवाचेदं प्रणम्य भुवि दण्डवत् ॥

ஓ அரசனே ! முனிவர்களில் சிறந்தவரான நாரதர் பிதாமஹரான பிரஹ்மாவை நிலத்தில் தண்டம் போல் வீழ்ந்து வணங்கி பின்வருமாறு கூறினார்.

॥ नारदः ॥

நாரதர்:-

अस्यां मूर्तौ पूजनीयः प्राणिभिः परमेश्वरः ॥

स्थले चास्मिन् महादेवः पूर्णांशो वर्तते विभुः । वक्तुमर्हसि तत्सर्वं सर्वलोकहिते रतः ॥

" [மேற்கூறிய] லிங்கவடிவத்தில் பரமேசுவரனாகிய சிவபெருமான் அனைத்துப் பிராணிகளாலும் வழிபடவேண்டியவர். அப்புண்ணிய ஸ்தலத்தில் எங்கும் வியாபித்திருக்கும் சிவபெருமான் எப்போதும் எழுந்தருளியுள்ளார்" என்றெல்லாம் தாங்கள் கூறினீர்கள். எனவே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அக்கதைகளை உலகத்தவர் நன்மைக்காக விரிவாகக் கூறவேண்டுகிறேன் என்றார்.

नारदस्य वचः श्रुत्वा कथयामास विश्वसृत् । शृणु नारद वक्ष्यामि शिवक्षेत्रमनुत्तमम् ॥

உலகத்தைப் படைப்பவராகிய பிரஹ்மா நாரதரின் வேண்டுகோளுக்கிணங்கி " நாரதரே ! சிவக்ஷேத்திரங்களுள் தலைசிறந்ததான உன்னதபுரியைப் பற்றிக் கூறுகிறேன். கேள்" என்றார்.

मूर्तिर्मूर्तिषु सर्वासु शङ्करस्य प्रसादतः । विशेषेण स्थले यस्मिन् पूर्णांशो वर्तते विभुः ॥

सर्वक्षेत्रेषु मुख्येषु शिवक्षेत्रमनुत्तमम् । शिवक्षेत्रेषु सर्वेषु श्रीउन्नतपुरं वरम् ॥

" பரமசிவனுடைய வடிவங்களுள் மிகச் சிறந்தது அவருடைய கருணையினால் முழுவதுமாக எழுந்தருளியிருக்கும் உன்னதபுரியிலுள்ள இலிங்கமே. அனைத்து க்ஷேத்திரங்களும் சிவக்ஷேத்திரம் தலைசிறந்தது. சிவக்ஷேத்திரங்களிலெல்லாம் ஒப்பற்று விளங்குவது ஸ்ரீ உன்னதபுரியே.

यः पूजयते सर्वेशं श्रीउन्नतपुरेश्वरम् । स याति शाङ्करं पदं पुनरावृत्तिवर्जितम् ॥

எவனொருவன் ஸர்வேசுவரனாகிய ஸ்ரீ உன்னதபுரீசுவரரை வழிபடுகிறானோ அவன் மறுபிறப்பு அற்றதான சிவபதத்தை அடைகிறான்.

लिङ्गमूर्त्तौ महादेवं पत्रपुष्पैश्च योऽर्चयेत् । स याति शिवसायुज्यं नात्र कार्या विचारणा ॥

அங்கு எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத்தைச் சிறந்த பூக்களாலும் பத்திரங்களாலும் வழிபடுபவன் சிவபெருமானுடன் ஒன்றாகி ஐக்கியமடைகிறான். இதில் சிறிதளவும் ஐயமில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

श्रीउन्नतपुरे तस्मात् शिवक्षेत्रेऽतिपावने । पूर्णांशरूपिणं शम्भुं योऽर्चयेद्भुवि नारद ॥
स मुक्तः सर्वपापेभ्यः शिवसायुज्यमाप्नुयात् । इति श्रुत्वा ब्रह्मवाक्यं नारदः पुनरब्रवीत् ॥

எனவே நாரதரே ! ஸ்ரீ உன்னதபுரியெனும் சிவக்ஷேத்திரத்தில் பரிபூர்ணமாக எழுந்தருளியிருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மையொன்றையே நல்கும் சிவபெருமானை இந்தப் பூமியில் பிறந்த எவனொருவன் அர்ச்சிக்கிறானோ அவன் எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டு சிவபெருமானுடன் ஒன்றாகக் கலந்துவிடுகிறான் " என்றார். பிரஹ்மாவின் இவ்வார்த்தைகளைக் கேட்ட நாரதர் மீண்டும் கூறினார்.

अस्मिन् प्रदेशे भूलोके श्रीउन्नतपुरं स्थलम् ॥
कावेर्या दक्षिणे तीरे कुत्र वा वर्तते स्थलम् । कैलासे किल पूर्णांशः संस्थितः परमेश्वरः ॥

" இந்தப் பூவுலகில் காவேரிநதியின் தென்கரையில் ஸ்ரீ உன்னதபுரி என்னும் ஸ்தலம் எங்குள்ளது ? கைலாஸத்தில் அல்லவோ பூர்ணாம்சமாகப் பரமேசுவரன் விளங்குகிறார் ?

हेतुना केन देवेशः श्रीउन्नतपुरे स्थितः । आत्मपुष्करणी तीर्थं केन वा कारितं प्रभो ॥

எக்காரணத்தினால் தேவர்களின் தலைவனாகிய பெருமான் உன்னதபுரியில் எழுந்தருளியிருக்கிறார் ? ஆத்மபுஷ்கரிணீ என்னும் புண்ணியத் திருக்குளம் எக்காரணம் பற்றி அங்கு உண்டாக்கப்பட்டது?

सर्वेषां च पुरां चैव श्रीउन्नतपुरस्य च । औन्नत्यं च कथं जातं तव शिष्यस्य मे वद ॥
सर्वं विचार्य तत्त्वेन वक्तुमर्हसि साम्प्रतम् ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எல்லா ஸ்தலங்களுள்ளும் ஸ்ரீஉன்னதபுரத்திற்கு என்ன சிறப்பான மஹிமை, பெருமை ? இக்கேள்விகளுக்கான விடைகளை விரிவாகத் தங்களது சீடனான எனக்குத் கூறவேண்டுகிறேன் " என்றார்.

इति पृष्टो नारदेन ब्रह्मा लोकपितामहः ॥

कथयामास पुत्रस्य नारदस्याब्जसम्भवः ।

உலகங்களைப் படைத்தவரும் தாமரைப் பூவில் வீற்றிருப்பவருமான பிரஹ்மாவானவர் இவ்வாறு தனது புதல்வனான நாரதரின் கேள்விகளைக் கேட்டவுடன் எல்லாவற்றையும் நன்கு ஆய்ந்து கூறத்தொடங்கினார்.

॥ ब्रह्मा ॥

பிரஹ்மா

पुरा तु दानवः क्रूरः सोमकाख्योऽतिदुर्मतिः ॥

முன்னொரு காலத்தில் கெட்டபுத்தியும், கொடூர குணங்களையும் கொண்டவனுமான ஸோமகன் என்னும் தானவன் ஒருவன் இருந்தான்.

देवैश्च निर्जितान् दृष्ट्वा दानवांश्च महाबलः । वेदमूलं तु देवानां बलं मत्वा तु पापधीः ॥

மிகவும் பலம் கொண்டவனும் பாவச்செயல்களைச் செய்பவனுமான அந்த ஸோமகன் தனது கூட்டத்தாரான தானவர்கள் எப்போதும் தேவர்களால் தோற்கடிக்கப்படுவதைக் கண்டு, அனைத்து வேதங்களும் தேவர்கள் வசம் இருப்பதால் தான் அவர்களுக்கு அத்தகைய பலம் வாய்த்துள்ளது என்பதை உணர்ந்தான்.

वेदान् हृत्वैव सहसा प्रविष्टोऽब्धिं तदासुरः । वेदाभावात् तदा नष्टा यज्ञाद्यखिलाः क्रियाः ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உடனே வேதங்கள் அனைத்தையும் அபகரித்து ஆழ்கடலுக்குள் ஒளிந்து கொண்டான். எனவே பூமியில் வேதங்கள் இல்லாததால் யாகம் யஜ்ஞம் முதலான கிரியைகள் அற்றுப் போயின.

देवानां च बलं क्षीणमसुरा बलवत्तराः । इन्द्रेण सहिताः सर्वे देवा दुःखसमन्विताः ॥

தேவர்களுடைய பலமும் மிகவும் குறைந்து போயிற்று. இந்திரன் முதலான அனைத்து தேவர்களும் மிகவும் துன்பமடைந்தனர்.

मल्लोकं च समागत्य मह्यं वृत्तं न्यवेदयन् । श्रुत्वा वृत्तं तु देवानां दैवैः साकं तदा सुत ॥

वैकुण्ठमगमं देवं शङ्खचक्रगधाधरम् । श्रीवत्सवक्षसं देवं वनमालाविभूषितम् ॥

कालाम्बुदश्यामलाङ्गं महालक्ष्म्या समन्वितम् ।

புதல்வனே ! அவர்கள் எனது லோகத்திற்கு வந்து என்னிடம் எல்லாவற்றையும் கூறி முறையிட்டனர். அவர்கள் சொல்லியவற்றைக் கேட்டு அவர்களுடன் நான் வைகுண்டம் சென்றேன். அங்கு சங்கம், சக்கரம், கதை ஆகியவற்றைத் தரித்திருப்பவரும், மார்பில் ஸ்ரீவத்ஸமென்னும் மருவை உடையவரும், வனமாலையை அணிந்திருப்பவரும், கரியமேகத்தையொத்த நிறம் கொண்டவரும், மஹாலக்ஷ்மியுடன் வீற்றிருப்பவருமான திருமாலைக் கண்டு அனைவரும் வணங்கினோம்.

दृष्ट्वा नत्वा तदा सर्वे अस्तुवन् सहसा सुत ॥

கண்டு வணங்கிய பின் தோத்திரங்களால் துதித்தனர்.

देवानां च कथां विष्णुर्ज्ञात्वा प्राह दयान्वितः । हे देवाः सहसाहं च मत्स्यो भूत्वाहमोजसा ॥

वेदापहारिणं हत्वा दास्यामि विधये त्रयीम् । गम्यतां सहसा देवा मा शोकं च मनः कृथाः ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவர்கள் கூறிய நிகழ்வுகளைக் கேட்டறிந்த விஷ்ணு " ஹே தேவர்களே ! உடனேயே மீன் உருக் கொண்டு எனது முழுமையான பலத்தினால் வேதங்களைத் திருடிச் சென்ற அவ்வசுரனைக் கொன்று பிரஹ்மாவிடம் மீண்டும் வேதங்களை ஒப்படைக்கிறேன். நீங்கள் எவ்வித மனக்கவலையும் கொள்ளவேண்டாம். உங்களது இருப்பிடத்திற்குச் செல்லுங்கள் " என்று மிகுந்த தயையுடன் கூறினார்.

इत्यामन्त्र्य तथा विष्णुरनुज्ञाप्य तथा सुरान् । मत्स्यरूपं च धृत्वा तु प्रविश्याब्धिं तदा सुत ॥

இவ்வாறாக தேவர்களுக்குக் கட்டளையிட்ட பின் உடனே விஷ்ணு மீன் உருவைத் தாங்கிக் கடலுக்குள் நுழைந்தார்.

वेदापहारिणं पुत्र सोमकासुरमाहवे । भित्वातु हृदयं तस्य रुधिरं पीतवांस्तदा ॥

வேதங்களைத் திருடி ஒளித்து வைத்திருந்த ஸோமகனென்னும் அந்த அசுரனுடன் போரிட்டு அவனது இதயத்தைப் பிளந்து இரத்தத்தை அருந்தினார்.

रक्तपानात्तदा मत्त उन्मत्तश्च तदा विभुः । गच्छन् धावन् लुठन् वेगादब्धिमध्ये सनातनः ॥

இரத்தத்தைக் குடித்ததால் தேவதேவரான திருமால் மிகவும் மதி கலங்கி கடலின் மீது அங்குமிங்கும் சென்றார். ஓடினார். புரண்டார்

वेलां भित्वैव सहसा एकीकृत्यैव सागरान् । उन्मत्तश्च तदा विष्णू रक्तपानात्तदास्थितः ॥

மேலும், மதி மயங்கி செய்வதறியாமல் அலைகளைப் பிளந்து கடல்களை ஒன்றாக்கினார். இவ்வாறு விஷ்ணுவானவர் மதி மயங்கியிருந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

एकीकृतसागरेषु तदा पुत्र च सप्तसु । भूलोकं च तदा सर्वं राष्ट्राणि नगराणि च ॥
अग्रहाराणि सर्वाणि स्थलानि विविधानि च । नाशितानि तदा पुत्र चातुर्वर्ण्यं च नाशितम् ॥

ஓ புத்திரனே ! இவ்வாறு ஏழ்கடல்களும் ஒன்றாக்கப்பட்டதால் பூவுலகமும், நாடுகளும், நகரங்களும், அக்கிரஹாரங்களும் ஏனைய ஸ்தலங்களும் நாசமடைந்தன. அதனால் வர்ணாசிரம தர்மங்களும் அழிந்து போயின.

पुनश्च देवाः सर्वे तु अतिदुःखसमन्विताः । मया च सहिताः सर्वे कैलासं पर्वतं ययुः ॥

மீண்டும் தேவரள் அனைவரும் மிகவும் மனக்கவலை கொண்டு என்னுடன் கைலாய மலைக்குச் சென்றனர்.

कैलासं च तदा गत्वा देवदेवं महेश्वरम् । श्रीकण्ठाख्यं महादेवं मनोन्मन्या समन्वितम् ॥
भक्तापद्भञ्जने व्यग्रं पार्वतीरमणं प्रभुम् । दृष्ट्वा नत्वा तदा स्तुत्वा लौकिकैर्वैदिकैः स्तवैः ॥

கைலாயத்திற்குச் சென்று தேவர்களுக்கெல்லாம் தேவரானவரும், பார்வதியாகிய மனோன்மனிதேவியுடன் விளங்குபவரும், பக்தர்களின் துக்கத்தைப் போக்குவதிலேயே ஈடுபட்டிருப்பவருமான ஸதாசிவப்பெருமானைத் தரிசித்து பற்பல தோத்திரங்களாலும் வேதங்கலாலும் துதித்து வணங்கினோம்.

नमकैश्चमकैश्चैव वेदान्तैश्च स्तुतः शिवः । तदा हृष्टो महादेवः पार्वत्या सहितः प्रभुः ॥

ஸ்ரீ ருத்திராத்தியாயத்தின் நமகம், சமகம் ஆகியவற்றாலும் தேவர்கள் பெருமானைத் துதித்தவுடன் அவர் மிகவும் பிரீதி அடைந்தார்.

स्वमायया प्रकल्प्याथ उडुपं शङ्करस्तथा । दैवश्च सहितो देवस्तदा गिरिजया युतः ॥
नौस्थितश्च तदा देवैः चचार भुविमण्डलम् ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தன்னுடைய மாயையினால் ஒரு தோணியை உண்டாக்கி பார்வதியுடனும் மற்ற தேவர்களுடனும் சேர்ந்து அத்தோணியில் அமர்ந்து பூமிக்குச் சென்றார்.

जले नावं तदा दृष्ट्वा रोषेण महता युतः ॥

अतिवेगेन संयुक्तः आजगाम यदृच्छया । आगत्य वेगात् पुच्छेन जघ्ने नावं तदारुषा ॥

மீன் உருக்கொண்ட விஷ்ணு கடல் நீரில் தோணியைக் கண்டவுடன் மிகுந்த கோபம் கொண்டு அதிவேகமாக அங்கு வந்து தனது வாலினால் தோணியைத் தாக்கினார்.

न्यवेदयन् तदा देवा आगतं मत्स्यरूपिणम् । विष्णुं श्रुत्वा शङ्करोऽपि दृष्ट्वा देवस्त्र्यम्बकः ॥

தேவர்களும் விஷ்ணுவானவர் தோணியைத் தாக்குகிறார் எனச் சிவபெருமானிடம் தெரிவிக்கவும் பெருமானும் அதைக் கேள்வியுற்றார்.

हस्तेनैव गृहीत्वा तु हस्ताभ्यां च पिपेषिरे । हरेण मर्दितो विष्णुर्हित्वा मत्स्यतनुं तदा ॥

சிவபெருமான் அப்பெரிய மீனை ஒரு கையால் எடுத்து இரண்டு கைகளாலும் நன்கு பிசைந்தார். பெருமானால் பிசையப்பட்டவுடன் விஷ்ணு தனது மீன் உருவத்தை நீக்கி சுய உருவத்தைக் கொண்டார்.

आरुह्यैवातिवेगेन दत्वा तु विधये त्रयीम् । देवदेवं महादेवं शङ्करं वृषभध्वजम् ॥

दृष्ट्वा तु त्वरया स्तुत्वा विनयेन समन्वितः । दैवैश्च सहितस्तत्र स्थितवांश्च तदोडुपे ॥

உடனே ஸோமகனென்னும் அசுரனிடமிருந்து கைப்பற்றிய வேதங்களைப் பிரஹ்மாவிடம் ஒப்படைத்துவிட்டு மஹாதேவரும் இடபக்கொடியை உடையவருமாகிய சங்கரனைக் கண்டு உடனே வணங்கித் துதித்து மிகுந்த பணிவுடன் ஏனைய தேவர்களுடன் நின்றிருந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

शङ्करश्च तदा पुत्र नारायणसमन्वितः । भूलोकं च तदा सर्वं विचचारामरैर्युतः ॥

அனைத்துலகுக்கும் நன்மையைச் செய்பவராகிய சிவபெருமானும் நாராயணருடனும் மற்ற தேவர்களுடனும் கூட பூவுலகம் முழுவதும் சஞ்சரித்தார்.

जलमध्ये प्लवमिव पुरमत्यन्तशोभनम् । अत्युन्नतं शिवेनैव कल्पितं सुमनोहरम् ॥

அவ்வாறு சஞ்சாரம் செய்யும் போது பூமியில் நீரின் மேல் உயர்ந்த இடத்தில் மிக அழகானதும் சிவபெருமானால் நிர்மாணிக்கப் பட்டதுமான நகரத்தைக் கண்டார்.

कपित्थाश्चाथ नारङ्गनालिकेरैः समन्वितम् । वापीकूपतडाकैश्च आरामैरुपशोभितम् ॥

मालतीमल्लिकाभिश्च माधवीपुष्पमण्डितम् । महेन्द्रभवनप्रख्यं ब्रह्मघोषानुनादितम् ॥

விளா, நாரத்தை, தென்னை முதலான மரங்களால் அடர்ந்து சூழ்ந்திருப்பதும், சிறிய குளங்கள், கிணறுகள், ஏரிகள் ஆகியவற்றைக் கொண்டதும், சோலைகள் நிறைந்திருப்பதும், முல்லை, மல்லிகை, ஜாதி முதலான பூஞ்சோலைகளை நிறைந்ததும், மஹேந்திரனின் மாளிகையை ஒத்த பெரும் வீடுகள் உடையதும், எப்போதும் வேதங்களின் ஒலிகள் நிறைந்திருப்பதும்,

ब्राह्मणैः क्षत्रियैश्चैव वैश्यैः शूद्रैः समन्वितम् । ऋषिभिर्वालखिल्यैश्च शिवभक्तैः समावृतम् ॥

अत्युन्नतं पुरं दृष्ट्वा अत्यन्ताश्चर्यसंयुताः । शिवेन सहिताः सर्वे नावं हित्वा मुदान्विताः ॥

பிராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகியோர்களைக் கொண்டதும், வாலகில்யர்கள் முதலான முனிவர்களாலும், சிறந்த சிவபக்தர்களாலும் நிறைந்திருப்பதும், பூமியின் மேல் உயர்ந்த மேடான இடத்திலிருப்பதுமான அந்நகரத்தைக் கண்ட அனைவரும் மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். சிவபெருமானுடன் சேர்ந்து எல்லோரும் தோணியை விட்டு இறங்கி ஆனந்தமாக நின்றிருந்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

आरुरोह तदा पुत्र पुरमत्यन्तशोभनम् । आरुह्य विचरन् सर्वे पुरमध्ये तदा सुत ॥

ஓ புதல்வனே ! பின்னர் எல்லோரும் அந்த அழகான ஊருக்குள் சென்றனர். அங்கு பல இடங்களுக்குச் சென்றனர்.

प्रविष्टमात्रे तु पुरे देवदेवं महेश्वरम् । अदृष्ट्वा च तदा देवा अतिदुःखसमन्विताः ॥

நுழைந்த மாத்திரத்தில் அங்கு மஹாதேவராகிய பெருமானைக் காணவில்லை. எனவே மிகவும் துக்கமடைந்தனர்.

पुरमध्ये तदा पुत्र देवाः सर्वे 88विचन्तिरे । तदा दृष्ट्वा महादेवं लिङ्गरूपं महोन्नतम् ॥

कोटिसूर्यप्रतीकाशं चन्द्रार्द्धकृतशेखरम् । दृष्ट्वा स्तुत्वा नमस्कृत्य अस्तुवन् विविधैःस्तवैः ॥

அவ்வூரில் அங்குமிங்கும் எல்லா தேவர்களும் சென்று தேடினர். முடிவில் இலிங்கவடிவத்தில் கோடிசூரியர்களுக்கு ஒப்பான ஒளியுடன் திகழ்பவரும், பிறைச்சந்திரனைத் தலையில் சூடியவருமான மஹாதேவரைக் கண்டனர். உடனே வீழ்ந்து வணங்கி, பற்பல தோத்திரங்களால் துதித்தனர்.

नमः सोमाय शान्ताय शङ्कराय महात्मने । विश्वाधिकाय रुद्राय शिवाय परमात्मने ॥

ஸோமனான சந்திரனுடன் விளங்குபவருக்கும், உமாதேவியுடன் எப்போதும் கூடியிருப்பவரும், சாந்த வடிவினரும், எல்லா உயிர்களுக்கும் நன்மையையே செய்பவரும், எல்லையற்ற கருணைகொண்டவரும், அனைத்துலகங்களையும் கடந்து இருப்பவரும், உருத்திரனும், பரம்பொருளானவருமாகிய பெருமானுக்கு வணக்கங்கள். !

नमो नमस्ते देवाय उतोत इषवे नमः । नमो दिग्वाससे तुभ्यं गजचर्मावृताय ते ॥

தேவருக்கும், கையில் அம்பைத் தாங்கியவருக்கும் மீண்டும் மீண்டும் வணக்கங்கள் ! திசைகளையே ஆடையைக உடைய திகம்பரருக்கும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

யானையின் தோலை ஆடையாக அணிந்திருப்பவருக்கும் வணக்கங்கள் !

कामान्तकाय देवाय कामदाय नमो नमः । इत्याद्यैर्विविधैः स्तोत्रैर्लौकिकैर्वैदिकैरपि ॥

காமனாகிய மன்மதனை எரித்தவருக்கும், அதே சமயம் எல்லோருடைய விருப்பங்களையும் பூர்த்தி செய்பவருக்கும் வணக்கங்கள் ! என இவ்வாறான பல தோத்திரங்களாலும், வேதமந்திரங்களாலும் பரமனைத் துதித்தனர்.

स्तुतवांश्च तदा देवः अतिप्रीतिसमन्वितः । देवदेवोऽपि तत्काले कोटिमन्मथविग्रहः ॥

तरुणादित्यसंकाशः करुणारसमण्डितः । देवान् दृष्ट्वा तदा हृष्टः प्राह गम्भीरया गिरा ॥

தேவதேவராகிய மஹாதேவரும் அத்தோத்திரங்களால் மிகவும் மனமகிழ்ச்சி கொண்டவராய் விளங்கினார். மேலும், கோடி மன்மதர்களுக்கு ஒப்பான அழகுடனும், இளம் சூரியனை ஒத்த ஒளியையும், கருணையே வடிவாகவும் விளங்கினார். தேவர்கள் அனைவரையும் நோக்கி மிக்க ஆனந்தத்துடன் பெருமான் கூறினார்.

देवाः श्रुत्वा तु मद्वाक्यं सावधानेन चेतसा । कैलासे तु यथा वर्ते पार्वत्या सहितोऽप्यहम् ॥

अस्मिन् पुरे तथा देवा वसामि गिरिजायुतः ।

ஓ தேவர்களே ! எனது வார்த்தைகளை மிக்க கவனத்துடன் கேளுங்கள். எவ்வாறு நான் கைலாயத்தில் பார்வதியுடன் அளவற்ற ஆனந்தத்துடன் இருக்கிறேனோ அவ்வாறே இப்புண்ணிய நகரத்திலும் கிரிஜாதேவியான பார்வதியுடன் வாசம் செய்கிறேன்.

ये जन्तवश्च भूलोके सन्ति ते प्रलये सुराः ॥

नाशमायान्ति ते सर्वे मत्पुरं च विना सुराः ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓ தேவர்களே ! இப்பூவுலகிலுள்ள எனது நகரமாகிய இந்த உன்னதபுரியைத் தவிர அனைத்துப் பிராணிகளும் பிரளயகாலத்தில் அழிந்துவிடுகின்றன.

कैलासे गिरिजायुक्तो यथा वत्स्ये दिवौकसः ॥

तस्माच्छतगुणं हृष्टः वसामि गिरिकन्यया । मत्पुरे तु सदा वासं ये कुर्वन्ति दिने सुराः ॥

मत्स्थानं यान्ति ते सर्वे नात्र कार्या विचारणा ।

கைலாயத்தில் எவ்வாறு பார்வதியுடன் கூடி ஆனந்தமாக எப்போதும் வாசம் செய்கிறேனோ அதைக்காட்டிலும் நூறு மடங்கு ஆனந்தத்துடன் எனது நகரமான இவ்வூரில் எழுந்தருளியிருக்கிறேன். எனது இவ்வூரில் எப்போதும் வசிப்பவர்கள் முடிவில் எனது இருப்பிடமாகிய கைலாயத்திற்கே வந்து சேர்கின்றனர். இதில் சிறிதும் ஐயமில்லை.

भूलोकस्य तु रक्षार्थं पार्वत्या सहितो ऽप्यहम् ॥

अस्मिन् पुरवरे देवाः सार्वकालं वसाम्यहम् ।

இந்தப் பூவுலகைக் காப்பதற்காகப் பார்வதியுடன் கூடி இந்நகரத்தில் எப்போதும் வாசம் செய்கிறேன்.

ब्रह्मघ्नश्च सुरापी च ये चान्ये गुरुतल्पगाः ॥

प्रवेशमात्रान् मत्क्षेत्रे पापान्मुक्ता भवन्ति ते । पापतूलस्य दावाग्निर्नात्र कार्या विचारणा ॥

பிராஹ்மணனைக் கொன்றவனும், கள் குடிப்பவனும், குருபத்தினியை விரும்புபவனும் ஆகிய கொடிய மஹாபாதகங்களைச் செய்தவர்கள் கூட என் க்ஷேத்திரமாகிய இவ்வூரில் நுழைந்தவுடன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகின்றனர். பாவங்களென்னும் பஞ்சுமூட்டைகளை எரிப்பது இப்புண்ணிய நகரம். இக்கருத்தில் எவ்வித சந்தேகமுமில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

मत्पुरस्य प्रवेशेन पापान्मुक्तो न संशयः । दिनमात्रं च वासेन सारूप्यं लभते सुराः ॥
द्विदिनाच्च तु सालोक्यं त्रिदिनाच्च समीपताम् । चतुर्दिनेन सायुज्यं सत्यं सत्यं वदाम्यहम् ॥

எனது ஊராகிய இந்த உன்னதபுரியில் நுழைந்தவுடனேயே அவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். ஒரு நாள் முழுதும் வாசம் செய்வதால் அம்மனிதன் இறுதியில் எனக்குச் சமமான உருவத்தைப் பெறுகிறான். இரண்டு நாள் வசிப்பதால் எனது நகரமான கைலாயத்தை அடைகிறான். மூன்று நாள் இவ்வூரில் வசிப்பதால் கைலாயத்தில் எனது அருகாமையை அடைகிறான். நான்கு நாட்கள் வசிப்பதால் என்னுடன் ஐக்கியமடைகிறான். ஓ தேவர்களே ! நான் கூறுவது முற்றிலும் உண்மை, சத்தியம்.

मत्पुरस्य समं नास्ति सत्यमेव न संशयः । मत्क्षेत्रस्य समं नास्ति अन्यक्षेत्रं चिरन्तनम् ॥

எனது ஊராகிய இப்புண்ணிய நகரத்திற்குச் சமமாக மற்றோர் ஊர் இல்லை. இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு ஒப்பாக மற்றொரு க்ஷேத்திரமில்லை.

इत्युक्त्वा तु तदा देवो लिङ्गमध्ये तिरोदधे । तिरोहिते महादेवे इन्द्राद्या अखिलाः सुराः ॥
नारायणं च मां चैव अनुज्ञाप्य प्रहर्षतः । स्वं स्वं लोकं गताः सर्वे अत्यन्ताश्चर्यसंयुताः ॥

இவ்வாறு கூறியவுடன் மஹாதேவர் அக்கோயிலிலுள்ள இலிங்கத்தில் மறைந்தார். பின்னர், இந்திரன் முதலான தேவர்கள் என்னிடமும் நாராயணரிடமும் மகிழ்ச்சியுடன் அனுமதிபெற்று ஆச்சரியத்தில் மூழ்கியவர்களாய்த் தத்தம் உலகங்களுக்குச் சென்றனர்.

वेदान् लब्ध्वा त्वहं चापि देवं नत्वा महेश्वरम् । नारायणमनुज्ञाप्य आगमं सत्यलोककम् ॥
वैकुण्ठमगमद्विष्णुः देवलोकं च नारदः ।

வேதங்களைத் திரும்பப் பெற்ற நானும் மஹேசுவரரை நமஸ்கரித்து, நாராயணரிடமிருந்து விடைபெற்று எனது உலகமான ஸத்தியலோகத்திற்கு வந்து சேர்ந்தேன். விஷ்ணுவும் வைகுண்டத்திற்குச் சென்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तदा प्रभृति तत्क्षेत्रं केचित् श्रीउन्नताभिधम् ॥

प्लावनाह्वपुरं चेति केचित्तत्र वदन्ति हि । भूकैलासमिति केचित् भूलोकशिवलोककम् ॥

அப்போதிலிருந்து அப்புண்ணிய க்ஷேத்திரம் ஸ்ரீஉன்னதபுரமென்றும், பிரளயபுரமென்றும், பூகைலாஸமென்றும், பூலோகசிவலோகமென்றும் பக்தர்களால் வழங்கப்படுகிறது.

सन्ति नामान्यनेकानि तत्पुरस्य चात्यद्भुतम् । कैलासात् पर्वताच्चैव काशीक्षेत्राच्च नारद ॥

हिमाचलाच्च श्रीकण्ठात् गोकर्णादनलाचलात् । श्रीपर्वताद् वृद्धगिरेः पुण्डरीकपुराद्वरम् ॥

हालास्यान्माधवीवनात् गजारण्यात्तथैव च । मध्यार्जुनान्महाक्षेत्रात् कुम्भकोणात्तथा परम् ॥

पञ्चनद्यास्तथा श्रेष्ठं तत्क्षेत्रं भुवि नारद ।

ஓ நாரதரே ! இவ்வாறாக அவ்வூருக்குப் பற்பல அற்புதமான பெயர்கள் உள்ளன. இவ்வுலகில் அப்புண்ணிய நகரமானது கைலாயம், காசி, ஹிமாலயம், ஸ்ரீகண்டம், கோகர்ணம், திருவண்ணாமலை, ஸ்ரீசைலம், விருத்தாசலம், சிதம்பரம், ஹாலாஸ்யமெனப் புகழ்பெற்ற மதுரை, திருக்கருகாவூர், கஜாரண்யம், திருவிடைமருதூர், கும்பகோணம், திருவையாறு ஆகிய புண்ணியக்ஷேத்திரங்களைக் காட்டிலும் மிகவும் சிறப்பானது.

पुरा कदाचित् लक्ष्मीशः गरुडमधिरुह्य च ॥

भूलोके संचरित्वाथ कैलासं पर्वतं ययौ । अनामन्त्र्य तु नन्दीशं गतवांश्च तदा सुत ॥

முன்னொரு சமயம் லக்ஷ்மியின் நாயகரான விஷ்ணு கருடவாஹனத்திலேறி பூவுலகைச் சுற்றி விட்டு கைலாயமலையை வந்தடைந்தார். அங்குக் காவலாக இருக்கும் சிவகணங்களுக்குத் தலைவரான நந்தியெம்பெருமானை வணங்காமலேயே உள்ளே நுழைந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

गर्वयुक्तं महाविष्णुं नन्दीशोऽपि गणाधिपः । अनामन्त्र्य च मां विष्णो अनालोच्य तव स्थितिम् ॥
अनारुह्य च पक्षीन्द्रात् अथो गच्छसि तिष्ठ भो ।

இவ்வாறு கர்வத்துடன் செல்லும் விஷ்ணுவை நந்தி அழைத்து ஓ விஷ்ணுவே ! எனது அனுமதியின்றியும் கருடனைவிட்டிறங்காமலும் நீ செல்கிறாய். நில் எனக் கூறினார்.

नन्दिकेशस्य वचनं श्रुत्वा विष्णू रुषान्वितः ॥
गदया तु गणाध्यक्षं पातयामास भूतले । गदाप्रहाराभिहतःपपात भुवि मूर्छितः ॥

நந்திகேசுவரரின் வார்த்தைகளைக் கேட்ட விஷ்ணு மிகுந்த கோபத்துடன் சிவகணங்களுக்கு நாயகரான நந்திகேசுவரரைத் தனது கதையினால் வேகமாகத் தாக்கி கீழே வீழ்த்தினார். நந்தியெம் பெருமானும் மூர்ச்சித்துக் கீழே விழுந்தார்.

गणाः सर्वे तु नन्दीशं दृष्ट्वा दुःखसमन्विताः । देवदेवसमीपं च गत्वा वेगयुताश्च ते ॥
नन्दीशवृत्तमखिलं देवदेवं न्यवेदयन् ।

சிவகணங்கனெல்லாம் நந்திகேசுவரரை அந்நிலையில் கண்டு மனதில் துக்கம் கொண்டவர்களாய் தேவதேவரான மஹாதேவரிடம் விரைந்து சென்று நடந்தவற்றைத் தெரிவித்தனர்.

तत्काले च महाविष्णुर्गरुडेन च संयुतः ॥
शङ्करस्य समीपं च आजगाम त्वरान्वितः ।

அச்சமயம் கருடவாஹனத்திலமர்ந்து விஷ்ணு சங்கரரின் அருகில் வேகமாக வந்தார்.

तत्काले देवदेवेशो दृष्ट्वा विष्णुं रुषान्वितम् ॥
शशाप पार्वतीनाथो मनुष्यस्त्वं भविष्यसि । त्वं क्षुद्रविहगो भूत्वा पृथिव्यां विचरिष्यसि ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பார்வதிநாதராகிய மஹாதேவரும் கடும் கோபத்துடன் இருந்த விஷ்ணுவை நோக்கி நீ மனிதனாகப் பிறக்கக்கடவாய் ! என்றும், கருடனை நோக்கி நீ ஒரு மிகச் சிறிய பறவையாகப் பிறந்து பூவுலகில் திரிந்து வாழக்கடவாய் ! என்றும் சாபமிட்டார்.

शस्त्वा तु विष्णुगरुडौ स्थितवांश्च तदा शिवः । शापं श्रुत्वा तथा विष्णुरतिदुःखसमन्वितः ॥
गरुडादवरुह्यैव विनयावनतस्तदा । नत्वा देवं महादेवं स्तोत्रं कृत्वा विशेषतः ॥

இவ்வாறு விஷ்ணுவையும் கருடனையும் சபித்தவுடன் சாபத்தையறிந்த விஷ்ணு மிகவும் துக்கமடைந்தார். கருடனை விட்டிறங்கி மிகுந்த அடக்கத்துடன் தலைகுனிந்து நின்றிருந்தார். பின்னர் மஹாதேவரை வணங்கிப் பலவாறாகத் தோத்திரம் செய்தார்.

अतिभीत्या च संयुक्तो तस्थौ भूमितलेऽपि च । गरुडोऽपि तदा नत्वा स्तुत्वा स्तोत्रैरनेकशः ॥

பயத்தால் மிகவும் நடுங்கிய நிலையில் கருடனும் அங்கிருந்தார். அவரும் சிவபெருமானை வணங்கித் துதித்தார்.

शापस्यान्तं तदा देवं प्रार्थयामास वै तदा । प्रार्थितो विष्णुना देवः गरुडेन पुनः पुनः ॥
तदा देवोऽतिहृष्टश्च शापस्यान्तं प्रवोच ह ।

அப்போது விஷ்ணு மஹாதேவரிடம் அச்சாபத்தின் முடிவைக் கூறுமாறு மிகவும் வருந்திக் கேட்டார். கருடனும் அவ்வாறே பிரார்த்தித்தார். விஷ்ணுவின் பிரார்த்தனைக்கிணங்கிய தேவதேவர் மனமகிழ்ந்து தான் இட்ட சாபத்தின் முடிவைப் பற்றிக் கூறினார்.

मा शोकम् आरुह विष्णो मच्छापेन च भूतले ॥
अयोध्याधिपतेस्त्वं हि राज्ञो दशरथस्य च । पुत्रो भूत्वा चतुर्धा त्वं कृत्यं कृत्वाप्यमानुषम् ॥
रामलक्ष्मणशत्रुघ्नभरत इति विश्रुतः । मिथिलाधिपतेःपुत्रीं सीतामुद्वाह्य शास्त्रतः ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஓ விஷ்ணுவே ! சாபத்தினால் சோகம் கொள்ளாதே ! எனது சாபத்தினால் பூமியில் அயோத்தி நகரத்தின் மன்னனுக்கு இராமன், இலக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் என நான்கு மகன்களாகப் பிறந்து, மனிதர்களால் செய்ய இயலாத பல காரியங்களைச் செய்து மிதிலையின் அரசகுமாரியான ஸீதையை மணம் புரிவாய்.

रावणं ससुतामात्यं दुष्टानन्यान् निशाचरान् । लक्ष्मणेन च संयुक्तो हत्वा समरमूर्धनि ॥
मैथिलीं प्रतिलभ्यैव प्राप्य राज्यमकण्टकम् । दश वर्षसहस्राणि दश वर्षशतानि च ॥
स्वकीर्तिं स्थाप्य भूलोके पृथिवीमनुशास्य च । देवकार्यं च निर्वर्त्य पुनर्वैकुण्ठमेष्यसि ॥

இலக்ஷ்மணனுடைய உதவியுடன் இராவணனை அவனுடைய மகன்களுடனும், மந்திரிகளுடனும் சேர்த்துப் போரில் அழித்துவிட்டு, மைதிலியான ஸீதையை மீண்டும் அடைந்து, உனது இராஜ்ஜியத்தையும் திரும்பப் பெற்று பதினோராயிரம் ஆண்டுகள் இப்புவியை அரசாட்சி புரிந்து, இவ்வாறாகத் தேவர்களுடைய காரியங்களைச் செய்து விட்டு மீண்டும் வைகுண்டத்தை வந்தடைவாய்.

शिवापराधपापस्य प्रायश्चित्तं न विद्यते । कृपयाहं वदाम्यद्य श्रृणु त्वं सावधानतः ॥

சிவபெருமானுக்கு அபராதம் செய்தலாகிய கொடிய பாவத்திற்கு பிராயச்சித்தம் என்னும் கழுவாயே கிடையாது. எனினும் உன் மீது கருணைகொண்டு நான் கூறுகிறேன். கவனமாகக் கேள்.

कावेर्या दक्षिणे तीरे क्रोशमात्रस्य दक्षिणे । पञ्चनदस्य चाग्नेये क्रोशत्रयसमीपतः ॥
तञ्जपुर्याः पूर्वभागे अर्धयोजनमात्रतः । हरिद्वारस्य वायव्ये चतुःक्रोशसमीपतः ॥
एकयोजनमात्रे तु कुम्भकोणस्य नैर्ऋते । श्रीउन्नतपुरं चेति अत्याश्चर्यसमन्वितम् ॥

காவேரியின் தென்கரையிலும் ஒரு குரோசம் தெற்கிலும் பஞ்சநதக்ஷேத்திரமென்னும் திருவையாற்றுக்குத் மூன்று குரோசம் தென்கிழக்கிலும், தஞ்சைக்குக் கிழக்கில் அரை யோஜனையிலும், ஹரிதுவார[மங்கலம்] என்னும் க்ஷேத்திரத்திலிருந்து நான்கு குரோசம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடமேற்கிலும், கும்பகோணத்திற்கு ஒரு யோஜனை தென்மேற்கிலும் ஸ்ரீ உன்னதபுரமென்னும் அளவிடற்கரிய மஹிமை வாய்ந்த திருத்தலம் அமைந்துள்ளது.

किंचिदस्ति महाक्षेत्रं श्रवणात् सर्वकामदम् । गरुडेन च संयुक्तो गत्वा त्वमतिशीघ्रतः ॥

அப்படிப்பட்ட மஹிமைபொருந்திய அத்தலத்தைப் பற்றிக் கேட்டவுடனேயே எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்யவல்லது. எனவே கருடனுடன் மிக விரைவில் அத்திருத்தலத்திற்குச் செல்.

षाण्मासं तत्र वस्त्वा तु पापान्मुक्तो भविष्यतः । इत्युक्तौ देवदेवेन गत्वा क्षेत्रं महाद्भुतम् ॥

ஆறுமாத காலம் நீங்களிருவரும் அங்கு வசித்தால் அனைத்துப் பாவங்களினின்றும் விடுதலை அடைவீர்கள் என்று கூறினார். அவ்வாறே அவர்கள் இருவரும் அற்புதமான அந்த க்ஷேத்திரத்திற்குச் சென்றனர்.

शिवशापाद् विमुक्तौ तौ वैकुण्ठं पुनरापतुः । तस्मात्तत् क्षेत्रस्य समं नास्ति नास्ति च नारद ॥

அங்கு ஆறுமாதகாலம் வசித்துத் தங்களது பாவங்களிலிருந்து விடுபட்டு மீண்டும் வைகுண்டம் சென்றடைந்தனர். எனவே ஓ நாரதரே ! அந்தப் புண்ணியக்ஷேத்திரத்திற்குச் சமமாக மற்றொன்று இல்லவேயில்லை.

यः पठेदिदमध्यायं शृणुयाच्च समाहितः । इह भुक्त्वाखिलान् भोगान् अन्ते शम्भुपदं व्रजेत् ॥

எவனொருவன் ஸ்ரீ உன்னதபுரியின் மஹிமையை விளக்கும் இந்த அத்தியாயத்தைப் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ அவன் இவ்வுலகில் எல்லா இன்பங்களையும் துய்த்து முடிவில் சிவபதவியை அடைவான்.

इति श्रीमद् ब्रह्माण्डपुराणे ब्रह्मनारदसंवादे श्रीउन्नतपुरीश्वरमाहात्म्ये द्वितीयोध्यायः ॥

இவ்வாறு பிரஹ்மாண்டபுராணத்தில் பிரஹ்மாவுக்கும் நாரதருக்குமிடையே நிகழ்ந்த சம்வாத வடிவில் அமைந்த உன்னதபுரிமாஹாத்மியத்தில் இரண்டாம் அத்தியாயம் நிறைவுற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥ तृतीयाध्यायप्रारम्भः ॥

மூன்றாவது அத்தியாயம்

॥ राजा ॥

கல்மாஷபாதனாகிய அரசன் கேட்டான்.

अथ मुक्तौ विष्णुगरुडौ शिवापराधदोषतः । श्रीउन्नतपुरे ब्रह्मन् नारदाय महात्मने ॥
यथोक्तं ब्रह्मणा ब्रह्मन् तत्सर्वं वक्तुमर्हसि ।

இவ்வாறாக அகஸ்தியர் கூறக்கேட்ட அரசன், " விஷ்ணுவும் கருடனும் சிவாபராதம் என்னும் பாவத்திலிருந்து விடுபட்ட பின்னர் யாது செய்தனர் என்பதை பிரஹ்மா நாரதருக்கு விரிவாகச் விளக்கியதை ஓ பிராஹ்மணரே ! எனக்கும் விரித்துக் கூற வேண்டுகிறேன்" என்றான்.

॥ अगस्त्यः ॥

அகஸ்தியர் கூறத்தொடங்கினார்:

श्रृणु राजन् प्रवक्ष्यामि ब्रह्मणोक्तं यथा पुरा । तथैव सर्वं राजेन्द्र सावधानमनाः श्रृणु ॥
तत्सर्वमखिलेनैव वक्तुं समुपचक्रमे । पृच्छन्तं नारदं प्राह ब्रह्मा लोकपितामहः ॥

ஓ அரசனே ! முன்பு பிரஹ்மா நாரதருக்குத் தொடர்ந்து விரிவாகக் கூறியதை உனக்குச் சொல்கிறேன். கவனமாகக் கேள். நாரதர் மேற்கொண்டு கேட்கவும் பிரஹ்மா சொல்லத் தொடங்கினார்:

॥ ब्रह्मा ॥

பிரஹ்மா பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

श्रुणु नारद वक्ष्यामि नारायणकथां शुभाम् । श्रृण्वतां सर्वपापघ्नीं सर्वाश्चर्यसमन्वितां ॥

ஒ நாரதரே ! புண்ணியம் வாய்ந்ததும், கேட்போருடைய பாவங்களனைத்தையும் நீக்கவல்லதும், மிகவும் ஆச்சரியமானதுமான நாராயணருடைய கதையைச் சொல்கிறேன். கேள்.

शापस्यान्तं तदा श्रुत्वा महाविष्णुर्महेश्वरात् । नत्वा देवं महादेवमनुज्ञाप्य त्वरान्वितः ॥

இவ்வாறு சாபத்திற்கான முடிவை மஹேசுவரரிடமிருந்து தெரிந்து கொண்டவுடன் விஷ்ணு தேவதேவரை நமஸ்கரித்து அவரிடமிருந்து அனுமதி பெற்று விரைவாகச் சென்றார்.

गत्वा तु विविधान् देशान् क्रमेण मधुसूदनः । श्रीउन्नतपुरं प्राप्तो देवेदेवो जनार्दनः ॥

பல தேசங்களுக்குச் சென்ற ஜனார்தனராகிய விஷ்ணு இறுதியாக ஸ்ரீஉன்னதபுர க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தார்.

दृष्ट्वा देवं महादेवं शङ्करं लोकशङ्करम् । अतिहर्षेण संयुक्तो महाविष्णुश्चतुर्भुजः ॥

அங்கு சிவலிங்கத்தில் மஹாதேவரைக் கண்டு மனதில் மிகவும் ஆனந்தம் அடைந்தார்.

दिव्यज्योतिर्महालिङ्गमभिषेकविवर्जितम् । पूजया रहितं देवं दृष्ट्वा दुःखसमन्वितः ॥

பரஞ்சோதியாய் விளங்கும் அந்த மஹாலிங்கத்திற்கு முறையான அபிஷேகமும் பூஜையும் இல்லாதிருப்பதைக் கண்டு மிக்க வருத்தம் அடைந்தார்.

पूजितं देवदेवेशमादिमध्यान्तवर्जितम् । चिन्तयामास हे पुत्र लक्ष्मीशो लोकपूजितः ॥
अभिषेकं तीर्थवर्यं न लब्धं तत् पुरे सुत । चिन्तयित्वाथ निश्चित्य देवं नत्वा मुदान्वितः ॥

இலக்ஷ்மியின் நாதரும் உலகத்தோர் வணங்குபவருமான நாராயணர் தேவதேவரும் அனைத்துலகிற்கும் நாதரும், தோற்றமும் முடிவும்

Center for Shaiva Studies Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அற்றவருமான சிவபெருமானுடைய நித்திய அபிஷேகத்திற்காக அவ்வூரில் உயர்ந்த தீர்த்தம் இல்லாதிருப்பதை நினைந்து, சிறிது காலம் சிந்தித்து, பிறகு பரமேசுவரரை வணங்கி ஒரு நிச்சயம் செய்தார்.

नमकैश्चमकैश्चैव स्तुत्वा स्तोत्रैरनेकशः । प्राञ्जलिः सन्निधावेव तस्थिवांश्च जनार्दनः ॥

நமகம் சமகம் ஆகிய வேதமந்திரங்களால் பலவாறாகத் தோத்திரம் செய்து கூப்பிய கைகளுடன் மஹாலிங்கத்தின் சந்நிதியிலேயே நின்றிருந்தார்.

तत्काले देवदेवेशो श्रीउन्नतपुरप्रभुः । ज्योतिर्मयमहालिङ्गात् कोटिसूर्यसमप्रभः ॥

षोडशाब्दाकृतिः शम्भुः कोटिमन्मथविग्रहः । गङ्गातुङ्गजटाबद्धचन्द्रखण्डसमन्वितः ॥

गर्भगेहाद्विनिर्गत्य विष्णुमाहूय सत्वरम् ।

அப்பொழுது தேவதேவரும், உன்னதபுரியின் நாயகரும், கோடிசூரியர்களுக்கு ஒப்பான ஒளிபொருந்தியவரும், தன்னுடைய சடையில் கங்கையையும், பிறைச்சந்திரனையும் அணிந்திருப்பவருமான சிவபெருமான் பதினாறு வயதுடைய வாலிப உருவம் தாங்கி சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு அச்சந்நிதியிலிருந்து வெளியில் தோன்றினார்.

शिवालयस्य पूर्वे तु सन्निधावेव वेगतः ।

शूलेनाभिजघानाशु देवदेवस्त्रिलोचनः ॥

முக்கண்ணராகிய பெருமான் விஷ்ணுவை அழைத்து ஆலயத்தின் முன்னர் கிழக்குப் பக்கத்தில் மிக வேகமாகத் தனது சூலத்தினால் பூமியைத் ஓங்கித் தாக்கினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

आपातालं तदाभिन्नं शूलेन मम पुत्रक । अण्डभित्तेस्तदा धारा विमला च प्रसुस्रुवे ॥

ஓ புதல்வனே ! அச்சூலத்தாக்குதல் பாதாளலோகம் வரையில் சென்று அதிலிருந்து பரிசுத்தமான ஜலதாரையானது வெளிப்பட்டது.

स्वकपर्दिस्थितगङ्गातोयैः संयोज्य शङ्करः । स्वयं स्नात्वा महादेवः श्रीउन्नतपुरेश्वरः ।

பெருமானும் தனது சடையிலுள்ள கங்கை நீரை அந்த தாரையுடன் சேர்த்தார். தானும் அப்புனிததீர்த்தத்தில் நீராடினார்.

विष्णोराज्ञां तदा स्नातुं दत्तवांश्च त्रिलोचनः ॥

शिवाज्ञां शिरसा धृत्वा स्नात्वा विष्णुः सनातनः । स्थितवान् देवदेवस्य समीपे शङ्करस्य च ।

விஷ்ணுவையும் அப்புனிததீர்த்தத்தில் நீராடுமாறு முக்கண்ணன் கட்டளையிட்டார். அவ்வாறே அவரும் பெருமானுடைய கட்டளையைத் தனது தலையில் தாங்கி அதில் நீராடி, பெருமானுக்கு அருகில் நின்றிருந்தார்.

तदा विष्णुमुखा चेदं श्रीउन्नतपुरेश्वरः ॥

तीर्थेनानेन हे विष्णो मल्लिङ्गमभिषेचय । शिवापराधपापेन विमुक्तः सम्भविष्यसि ॥

அவ்வாறே விஷ்ணுவின் தலைமையில் அனைவரும் இருக்கையில் ஸ்ரீஉன்னதபுரேசுவரர் கூறினார். ஓ விஷ்ணுவே ! இப்புனித நீரினால் இங்குள்ள எனது இலிங்கத்திற்கு அபிஷேகம் செய். அதன் மூலம் சிவாபராதம் செய்த பாவத்திலிருந்து விடுபடுவாய்.

ब्रह्मघ्नस्य सुरापस्य मातृगामेश्च निष्कृतिः । सन्ति विष्णो महाभाग शिवद्रोहे न निष्कृतिः ॥

பிராஹ்மணனைக்கொல்லுதல், கள்குடித்தல், தனது தாயை விரும்புதல் முதலான கொடிய பாவங்களிலிருந்தும் விடுபடுவதற்கான

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிராயச்சித்தங்கள் உள்ளன. ஆனால் விஷ்ணுவே ! சிவதுரோகமென்னும் பாவத்திற்குக் கழுவாயே இல்லை.

एतत्तीर्थं विना विष्णो भूलोके नास्ति निष्कृतिः । ब्रह्महा मुच्यते लोकान्नात्र कार्या विचारणा ॥

இப்பூவுலகில் இந்தப் புனிதநீரைத் தவிர வேறு கழுவாய் இல்லை. பிராஹ்மணனைக்கொன்றவன் போன்றோரும் இப்புனித நீரினால் முக்தி அடைகிறார்கள். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

इत्युक्त्वा च तदा विष्णुं लिङ्गमध्ये तिरोदते । तिरोहिते महादेवे विष्णुः प्रीतमनास्तदा ॥

இவ்வாறு விஷ்ணுவை நோக்கிக் கூறியவுடன் பெருமான் அந்த இலிங்கத்தினுள் மறைந்தார். விஷ்ணுவும் மகிழ்ச்சி அடைந்தார்.

गत्वाऽऽलयं महाविष्णुः श्रीउन्नतपुरेश्वरम् । त्रिकालमर्चयामास नियमेन समन्वितः ॥

ஆலயத்தினுள் சென்று ஸ்ரீ உன்னதபுரேசுவரரை மூன்று காலமும் முறைப்படி அர்ச்சனை செய்து வழிபட்டார்.

अभिषिच्य महालिङ्गं ज्योतिर्मयमनामयम् । दिव्यपुष्पैर्दिव्यगन्धैर्दिव्यचन्दनकुङ्कुमैः ॥
धूपदीपैश्च नैवेद्यैस्ताम्बूलैः स्वर्णपङ्कजैः ॥

அந்த மஹாலிங்கத்தை நன்கு அபிஷேகம் செய்து நறுமணம் பொருந்திய தெய்வீக மலர்களாலும், பரிமளம் மிக்க சந்தனம், குங்குமம் ஆகியவற்றாலும், தூபம், தீபம் முதலியவற்றாலும், நைவேத்தியங்களாலும், பொற்றாமரை மலர்களாலும் அர்ச்சித்தார்.

एवमादिविधैश्चान्यैः सम्पूज्य परमेश्वरम् । नृत्तगीतकलापैश्च तोषयित्वा महेश्वरम् ॥
पूजान्ते शङ्करं नित्यं चकार स्तोत्रमुत्तमम् ।

இப்படிப் பலவாறாக மஹேசுவரரை அர்ச்சித்து, நடனம், சங்கீதம் ஆகியவற்றாலும் பெருமானை சந்தோஷப்படுத்தினார். பூஜை முடிவில் சங்கரரைத் தோத்திரம் செய்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥विष्णुः॥

விஷ்ணு பின்வருமாறு தோத்திரம் செய்தார்

ब्रह्मादिमृग्यपदपङ्कज सर्ववन्द्य विश्वेश्वरामर विभो त्रिपुरान्तकेश ।
कल्याणशील कलुषापह सज्जनेड्य गौरीपते मयि निधेहि कृपाकटाक्षम् ॥

பிரஹ்மா முதலான தேவர்களும் தேடியடையும் பாதகமலங்களை யுடையோனே ! எல்லோராலும் வணங்கிப் போற்றப்படும் தேவனே ! அனைத்துலகிற்கும் ஈசுவரனே !
எங்கும் நிறைந்தவனே ! திரிபுராசுரர்களை அழித்தவனே !
மங்கலச்செல்வனே ! பாவங்களை நீக்கவல்லானே ! நல்லோர் போற்றும் நாயகனே ! கௌரியின் நாயகனே ! என்மீது உனது அருட்கண் நோக்கத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

आद्यन्तहीन विबुधेड्यपदारविन्द कामान्तकान्तकरिपो करुणासमुद्र ।
उन्नताख्यपुरपते विविधागमेड्य गौरीपते मयि निधेहि कृपाकटाक्षम् ॥

தோற்றமும் முடிவும் இல்லாதவனே ! தேவர்கள் வணங்கும் திருவடித்தாமரையோனே ! காமனை எரித்தவனே! எமனுக்கு எதிரியே ! கருணைக்கடலே ! உன்னதபுரியின் நாயகனே ! பற்பல ஆகமங்கள் போற்றும் பெருமானே ! கௌரியின் நாயகனே ! என்மீது உனது அருட்கண் நோக்கத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

मृत्युञ्जयामल विभो शशिचूड शम्भो कालान्तक त्रिनयन त्रिजगन्निदान ।
शैलाधिवास शरणागतवन्द्यपाद गौरीपते मयि निधेहि कृपाकटाक्षम् ॥

மிருத்யுவை வென்றவனே ! மலங்களற்றவனே ! எங்கும் நிறைந்தவனே ! பிறைச்சந்திரனைச் சூடியவனே ! எல்லோருக்கும் நன்மையைச் செய்பவனே ! காலத்தை வென்றவனே ! முக்கண்ணனே ! முவுலகுக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இருப்பிடமே ! மலையில் வாழ்பவனே ! உன்னைச் சரணடைந்தோர் வணங்கும் திருவடியோனே ! கௌரியின் நாயகனே ! என்மீது உனது அருட்கண் நோக்கத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

क्षीराब्धिफेननिभास्य समुज्ज्वलास्य गङ्गाधराव्यय विभास्वरशूलपाणे ।
सर्वेश्वराव्यय विभो मुनिवन्द्यपाद गौरीपते मयि निधेहि कृपाकटाक्षम् ॥

பாற்கடல் நுரையைப் போன்ற வெண்மையான முகத்தோனே ! ஒளிபொருந்திய திருமுகத்தோனே ! கங்காதரனே ! அழிவற்றவனே ! ஒளிபொருந்திய திரிசூலத்தை உடையோனே ! எல்லா உயிர்களுக்கும் ஈசுவரனே ! முக்காலத்தும் உள்ளவனே ! அனைத்திலும் உள்ளவனே ! முனிவர்கள் வணங்கும் பெருமானே ! கௌரியின் நாயகனே ! என்மீது உனது அருட்கண் நோக்கத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

चन्द्रांशुगौर शरणागतसज्जनेड्य षट्शास्त्रवेद्य कविपूज्यपदारविन्द ।
वेदान्तवेद्य विविधागमपञ्जरस्थ गौरीपते मयि निधेहि कृपाकटाक्षम् ॥

சந்திரனையொத்த வெண்ணிறத்தோனே ! உன்னைச் சரணடைந்த நல்லோர் வணங்கும் தேவனே ! அறுவகைச் சாத்திரங்களாலும் அறியப்படுபவனே ! கவிகள் போற்றும் திருவடித்தாமரையோனே ! வேதாந்தத்தால் அறியப்படுவோனே ! பலவித ஆகமங்களின் உட்பொருளாகத் திகழ்பவனே ! கௌரியின் நாயகனே ! என்மீது உனது அருட்கண் நோக்கத்தைச் செலுத்த வேண்டுகிறேன்.

इति स्तुतो महादेवः श्रीउन्नतपुरीश्वरः । सुप्रीतो सुप्रसन्नोऽभूत् षाण्मासात् परमेश्वरः ॥

இந்த விதமாக ஆறுமாதகாலம் விஷ்ணுவினால் போற்றி வணங்கப்பட்ட ஸ்ரீ உன்னதபுரீசுவரர் மிகவும் மனம் மகிழ்ந்து அவருக்குமுன் தோன்றினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

लिङ्गमध्याद्विनिर्गत्य कोटिमन्मथविग्रहः । तरुणादित्यसंकाशः करुणावरुणालयः ॥
मन्दहासलसद्वक्त्रमण्डलश्रीविराजितः । शूलशक्त्यष्टिपरशुर्वह्निखड्गधनुर्धरः ॥
पाशं नागं च घण्टां च अभयप्रदहस्तवान् । श्रीउन्नतपुराधीशो विष्णुं प्राह मुदान्वितः ॥

அவர் கோடிமன்மதனுக்கு ஒப்பான அழகுடனும், உதயசூரியனைப் போன்ற ஒளியுடனும், புன்சிரிப்புத் தவழும் திருமுகவழகுடனும், சூலம், சக்தியாயுதம், கோடரி, தீ, கத்தி, வில், பாசம், நாகம், மணி ஆகிய ஆயுதங்களைத் தரித்தும், வரதம், அபயம் ஆகிய முத்திரைகளைத் தரித்துக் கொண்டும் இலிங்கத்திலிருந்து தோன்றிய ஸ்ரீஉன்னதபுரீசுவரர் விஷ்ணுவைப் பார்த்துக் கூறினார்.

वरं वरय भद्रं ते तव दास्ये चतुर्भुज । शिवापराधपापेन विमुक्तोऽसि न संशयः ॥

" நான்கு கைகளையுடையவனே ! நான் மிகவும் மகிழ்ச்சியுடன் உனக்கு மிக நல்லதான வரங்களைக் கொடுக்கத் திருவுளம் கொண்டுள்ளேன். நீ என்னிடமிருந்து வரங்களை வேண்டிப் பெற்றுக் கொள். நீ சிவாபராதம் என்னும் பாவத்திலிருந்து நீங்கினாய். அதில் ஐயமில்லை " .

इत्युक्तवन्तं तं देवमेवं वरमयाचत । चक्रायुधं महाभाग मम दातुं त्वमर्हसि ॥

இவ்வாறு பெருமான் கூறவும் விஷ்ணு தனக்கு சக்கராயுதம் வேண்டும் என்னும் வரத்தை வேண்டினார்.

विष्णुना प्रार्थितं चक्रं सहस्रारैश्च शोभितम् । कोटिसूर्यप्रतीकाशं सर्वशत्रुनिबर्हणम् ॥
विष्णवे दत्तवान् शम्भुः श्रीउन्नतपुरेश्वरः । दत्वा चक्रं महाभागःविष्णुं प्राह महेश्वरः ॥

இவ்வாறு விஷ்ணுவினால் பிரார்த்திக்கப்பட்டதும், ஆயிரம் ஆரங்களையுடையதும், கோடி சூரியர்களுக்கொப்பான ஒளிபொருந்தியதும், எல்லா எதிரிகளையும் அழிக்கவல்லதுமான

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சக்கராயுதத்தை விஷ்ணுவுக்கு அருளியபின் பெருமான் அவரை நோக்கிக் கூறினார்.

मत्पुरं बहुधा जीर्णं त्वन्नाम्ना पुरमुत्तमम् । कारयस्व महाभाग आलयं च नवीकुरु ॥

எனது ஊர் மிகவும் சீரழிந்துள்ளது. உனது பெயரில் அழகான ஊரை நிர்மாணம் செய்து எனது ஆலயத்தையும் புதுப்பிப்பாயாக.

मत्पुरस्य च रक्षार्थं नारसिंहवपुर्धरः । मदालयस्य पश्चार्धे तीर्थं कृत्वा स्वनामतः ॥

तत्तीर्थपश्चिमे कूले वस त्वं च सदानघ । मत्पुरस्योत्तरे देशे भद्रकालीं च स्थापय ॥

எனது ஊரின் காவலுக்காக நீ நரசிம்ம உருவம் தாங்கி என் ஆலயத்தின் பின்புறம் உன் பெயரில் தீர்த்தம் ஒன்றமைத்து அதன் மேற்புறம் எப்போதும் வாசம் செய்வாயாக. எனது ஊரின் வடப்புறத்தில் பத்ரகாளியை ஸ்தாபனம் செய்வாயாக.

यः स्नाति तव तीर्थे च त्वां दृष्ट्वा तु नरोत्तमः । इह भुक्त्वाऽखिलान् भोगान् अन्ते वैकुण्ठमश्नुते ॥

எவனொருவன் உனது புண்ணியதீர்த்ததில் நீராடி உன்னைத் தரிசனம் செய்கிறானோ அவன் இவ்வுலகில் எல்லா போகங்களையும் துய்த்து முடிவில் வைகுண்டத்தை அடைவான்.

त्वत्तीर्थे तु नरः स्नात्वा गुरुदाररतोऽपि सन् । तत्पापान्मुच्यते सद्यः नात्र कार्या विचारणा ॥

वन्ध्या पुत्रमवाप्नोति त्वत्तीर्थस्नानमात्रतः ।

உன்னால் உண்டாக்கப்பட்ட தீர்த்தத்தில் நீராடுபவன் தனது குருவின் மனைவியை விரும்புதல் முதலான கொடிய பாவங்களிலிருந்தும் விடுபடுவான், மலடியும் புத்திரப் பேறு பெறுவாள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

इत्युक्त्वा सहसा देवःतदा त्वन्तरधीयत ॥

இவ்வாறு கூறியவுடன் மஹாதேவர் அங்கிருந்து மறைந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अन्तर्हिते महादेवे विष्णुः प्रीतमनास्तदा ॥

विश्वकर्माणमाहूय पुरीं चक्रे स्वनामतः । नाना चत्वरसंयुक्तां विपण्याभिरलंकृताम् ॥

மஹேசுவரன் மறைந்தவுடன் விஷ்ணு மிகவும் மனமகிழ்ச்சியுடன் தேவர்களின் சிற்பியான விசுவகர்மாவை அழைத்து அவ்விடத்தில் தன் பெயரில் ஒரு அழகிய நகரத்தை உண்டாக்கச்செய்தார். அந்நகரம் பல தெருக்களையும், கடைகளையும் உடையதாயிருந்தது.

ब्राह्मणैः क्षत्रियैर्वैश्यैः शूद्रैश्चैव समायुताम् । हर्म्यप्रासादसंयुक्तामुद्यानैरुपशोभिताम् ॥

பிராஹ்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய நால்வருணத்தவர்களையும், உயர்ந்த மாளிகைகளையும், அழகிய நந்தவனங்களையும் கொண்டிருந்தது.

सप्तप्राकारसंयुक्तामालयं च महेशितुः । मण्डपैश्च सदाकीर्णं गोपुरैरुपशोभितम् ॥

विष्ण्वाज्ञां शिरसा धृत्वा विश्वकर्मा चकार ह । विश्वकर्मकृतं दृष्ट्वा पुरं विष्णुर्मुदान्वितः ॥

ஏழு பிராகாரங்களையும், மண்டபங்கள் கோபுரங்கள் முதலியவற்றையும் கொண்ட சிவாலயமும் அவ்வாறே விஷ்ணுவின் கட்டளையின் மூலம் விசுவகர்மாவினால் கட்டப்பட்டது. அந்நகரத்தைக் கண்ட விஷ்ணுவும் மிக ஆனந்தமடைந்தார்.

वैशाखे शुक्लपक्षे तु आत्मपुष्करणीजले । द्वादश्यां तु महाभागः स्नात्वा तीर्थेऽतिशोभने ॥

வைசாகமாதத்தில் சுக்லபக்ஷதுவாதசிதிதியில் ஆத்மபுஷ்கரிணி என்னும் தெய்வீகமான புண்ணியதீர்த்தத்தில் விஷ்ணு நீராடினார்.

देवदेवं महादेवं दृष्ट्वा विष्णुः सनातनः । भद्रकालीं च संस्थाप्य पुरस्योत्तरभागतः ॥

தேவர்களுக்கெல்லாம் தேவரான மஹாதேவரைத் தரிசனம் செய்தபின்னர் ஊரின் வடப்புறம் பத்ரகாளியையும் ஸ்தாபனம் செய்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

नारसिंहवपुर्धृत्वा तीर्थं कृत्वा स्वनामतः । विमाने सूर्यसंकाशे विश्वकर्मकृते शुभे ॥

एकांशेन तदा स्थित्वा रक्षणार्थं पुरस्य च । महाविष्णुर्मुदायुक्तः शङ्खचक्रगदाधरः ॥

பின்னர் நரசிம்மவடிவம் கொண்டு தன் பெயரில் ஒரு தீர்த்தத்தையும் உண்டுபண்ணி விசுவகர்மாவினால் நிறுவப்பட்ட அழகான கோயில் விமானத்தில் ஊரைக் காப்பதற்காகத் தனது ஒருபகுதியில் சங்குசக்கரங்களுடன் அங்கு எழுந்தருளினார்.

देवगन्धर्वकन्याभिः स्तूयमानपदाम्बुजः । वैकुण्ठमगमत् पुत्र लक्ष्म्यायुक्तश्चतुर्भुजः ॥

புதல்வனே ! இறுதியில் தேவகன்னிகைகளும் கந்தர்வகன்னிகைகளும் ஆடிப்பாடி வழிபட, விஷ்ணு லக்ஷ்மியுடன் கூடி வைகுண்டம் சென்றடைந்தார்.

तस्मात्तत्क्षेत्रस्य समं नास्ति नास्ति जगत्त्रये । आत्मना तु कृतत्वाच्च आत्मपुष्करणीं विदुः ॥

எனவே அந்தப்புண்ணிய க்ஷேத்திரத்திற்குச் சமமாக மற்றொன்று இல்லை. அந்தத் திருக்குளம் விஷ்ணுவினாலேயே நிறுவப்பட்டதால் அதற்கு ஆத்மபுஷ்கரிணி எனப் பெயர் விளங்குகிறது.

शिवगङ्गेति केचित् वदन्ति बहुशः सुत । वैशाखे शुक्लपक्षे तु विशाखात्त्रृक्षसंयुते ॥

आत्मपुष्करणीतीर्थे यः स्नाति मनुजोत्तमः । मातृतः पितृतश्चैव त्रिकोटिकुलसंयुतः ॥

महापापाद्विमुच्याशु यावच्चन्द्रदिवाकरौ । स्वर्गे भुक्त्वाऽखिलान् भोगान् पुनर्भूमौ महामतिः ॥

பலர் அத்திருக்குளத்தைச் சிவகங்கா என்றும் அழைக்கின்றனர். எவனொருவன் வைசாகமாதத்தில் சுக்லபக்ஷத்தில் விசாகாநக்ஷத்திரம் கூடிய தினத்தில் ஆத்மபுஷ்கரிணியில் முறைப்படி நீராடுகிறானோ அவன் தனது தாய் வழியிலும் தந்தை வழியிலும் மூவேழு குலத்தவர்களைப் பாபங்களிலிருந்து நீக்கி, தானும் சுவர்க்கத்தில் சந்திரசூரியர்கள் இருக்கும் காலம் வரையில் கணக்கற்ற போகங்களை அனுபவித்து, பின்னர் இப்பூமியில் பிறக்கிறான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

चक्रवर्तिकुले पुत्रो भूत्वा भुक्त्वाप्यनेकशः । अन्ते कैवल्यमाप्नोति सत्यमेव वदाम्यहम् ॥

அவன் நல்ல புத்தியுடையவனாகச் சக்கரவர்த்தியின் குலத்தில் மீண்டும் பிறந்து போகங்களை அனுபவித்து முடிவில் கைவல்லியம் எனும் மோக்ஷத்தை அடைகிறான். இதில் எந்த ஐயமும் இல்லை.

वैशाखे शुक्लपक्षे तु द्वादश्यां स्नानमात्रतः । वन्ध्या पुत्रमवाप्नोति स्नानमात्रेण पुत्रता ॥

வைசாகமாதம் சுக்லபக்ஷதுவாதசியில் அங்கு ஸ்நானம் செய்தமாத்திரத்திலேயே மலடி புத்திரப்பேறு அடைவாள்.

तद्दिने शिवगङ्गायां स्नात्वा दृष्ट्वा महेश्वरम् । हिरण्यकशिपुवक्षस्थलभेदे कृतत्वरम् ॥

प्रह्लादपोषणव्यग्रनरसिंहवपुर्धरम् । नारसींहमहाभागं भक्तकल्पमहीरुहम् ॥

ये पश्यन्ति मुदायुक्तास्तेषां किन्नाम दुर्लभम् ।

அதே நாளில் சிவகங்கையில் ஸ்நானம் செய்து மஹேசுவரரைத் தரிசனம் செய்து, பிறகு ஹிரண்யகசிபு என்னும் அரக்கனின் மார்பைப் பிளந்து, அவனை மாய்த்து, பிரஹ்லாதனைக் காத்தவரும், பக்தர்களின் விருப்பங்களை நிறைவு செய்யும் கல்பவிருக்ஷமமான நரசிம்மரைத் தரிசனம் செய்து ஆனந்தம் அடையும் பக்தர்களுக்கு இவ்வுலகில் செய்ய இயலாததும் ஒன்று உண்டோ ?

अयने विषुवे चैव व्यतीपाते त्वमादिने ॥

वैशाखशुक्लद्वादश्यां पूर्णिमायां विशेषतः । गङ्गास्नानायुतफलं प्राप्नोति मनुजः सुत ॥

ஓ புத்திரனே ! தக்ஷிணாயனம், உத்தராயணம், சித்திரைவிஷு, துலாவிஷு, வியதீபாதம், அமாவாசை, பௌர்ணமி, வைசாகமாததுவாதசி ஆகிய புண்ணியதினங்களில் சிவகங்கையில் ஸ்நானம் செய்வோன் இலக்ஷம் மடங்கு கங்காஸ்நானம் செய்த புண்ணியத்தை அடைகிறான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

यत्किञ्चिन्नियमेनैव स्नातव्यं मनुजैः सुत । उषःकाले समुत्थाय शिवस्मरणपूर्वकम् ॥

ஓ புத்திரனே ! யாதேனும் ஒரு நியமத்துடன் அங்கு ஸ்நானம் செய்யவேண்டும். அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்தவுடன் சிவபெருமானை மனதில் தியானிக்கவேண்டும்.

पादप्रक्षालनं कृत्वा आचम्य विधिना सुत । श्रीउन्नतपुराधीश अत्युन्नतपदप्रद ॥

स्नातुं च शिवगङ्गायामनुज्ञां देहि शङ्कर । इति प्रार्थ्य महादेवं श्रीउन्नतपुरीश्वरम् ॥

கைகால்களைக் கழுவியபின் முறைப்படி ஆசமனம் செய்து " ஸ்ரீ உன்னதபுரீசுவரரே ! சங்கரரே ! மிக உயர்ந்ததான பலன்களை அருளுபவரே ! சிவகங்கையில் ஸ்நானம் செய்வதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் " எனப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

शिवगङ्गां प्रार्थयेत अनेन विधिना सुत । शिवगङ्गे महाभागे शिवस्य शिरसि स्थिते ॥

त्वयि स्नास्ये त्वहं देवि मम पापं व्यपोहय । इत्युक्त्वा तु ततः स्नात्वा अर्घ्यं दद्यात् समाहितः ॥

महादेव दयासिन्धो महापद्भञ्जनक्षम । इदमर्घ्यं प्रदास्यामि सुप्रीतो वरदो भव ॥

அவ்வாறே சிவகங்கையையும் " ஓ சிவகங்கையே ! புண்ணியம் நிறைந்தவளே ! சிவபிரானின் தலையில் விளங்குபவளே ! உனது நீரில் ஸ்நானம் செய்ய விழைகிறேன். என்னுடைய அனைத்துப் பாவங்களையும் போக்குவாயாக " எனப் பிரார்த்தித்துக் கொண்டு ஸ்நானம் செய்த பிறகு ஓ மஹாதேவரே ! கருணைக் கடலே ! மிகக்கொடிய பாவங்களையும் போக்க வல்லவரே ! உனக்கு அந்த அர்க்கியத்தைக் கொடுக்கிறேன். மனதில் மகிழ்ச்சி கொண்டு நான் வேண்டுகின்ற வரங்களை அளிப்பீராக " என அர்க்கியம் கொடுக்க வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

आर्द्रवस्त्रं परित्यज्य धौतवस्त्रं प्रगृह्य च । सन्ध्यामुपास्य जप्त्वा तु गायत्रीं वेदमातरम् ॥

ஈர்த்துணியை நீக்கிவிட்டு தோய்த்த உலர்ந்த ஆடையை அணிந்து கொண்டு ஸந்தியாவந்தனம் செய்து வேதமாதாவான காயத்திரி மந்திரத்தை ஜபம் செய்யவேண்டும்.

वीथिप्रदक्षिणं कुर्यादश्वमेधफलप्रदम् । नमकैश्चमकैः स्तुत्वा श्रीउन्नतपुरीश्वरम् ॥

सम्पूज्य विविधैः पुष्पैः स्वशक्त्यानुगणेन च । एवं यः कुरुते भक्त्या स एव परमेश्वरः ॥

பிறகு உன்னதபுரீசுவராலயத்தைச் சுற்றி வீதியை வலம் வந்து, நமகம், சமகம் முதலான வேதமந்திரங்களைப் பாராயணம் செய்துகொண்டே பலவிதமான நறுமணமுடைய மலர்களால் தனது தகுதிக்கேற்ப ஸ்ரீஉன்னதபுரீசுரரை அர்ச்சித்து வழிபடவேண்டும். இவ்வாறு பக்தியுடன் எவன் செய்கிறானோ அவன் பரமேசுவரனே.

तस्मात् तत्क्षेत्रस्य समं नास्ति नास्ति जगत्त्रये । सत्यं सत्यं पुनस्सत्यं उद्धृत्य भुजमुच्यते ॥

எனவே அந்தப் புண்ணியக்ஷேத்திரத்திற்குச் சமமான மற்றொன்று மூவுலகத்திலும் இல்லை. இது உண்மை, உண்மை, உண்மை என நான் கைகளை உயரத்தூக்கிக் கூறுகிறேன்.

तस्मान्नारद तत्क्षेत्रं क्षेत्राणामुत्तमं शुभम् । अथ नारद वक्ष्यामि पक्षीन्द्राराधनं शुभम् ॥

எனவே நாரதரே ! உன்னதபுரியானது புண்ணியக்ஷேத்திரங்களுள் தலைசிறந்தது. அடுத்து நான் பக்ஷிகளுள் சிறந்த கருடன் உன்னதபுரீசுவரரை வழிபட்ட விதத்தைக் கூறுகிறேன். கேள் என்றார்.

इत्युक्तं ब्रह्मणा सर्वं नारदाय महात्मने । अहं समासतो वक्ष्ये तच्छृणुष्व यथाश्रुतम् ॥

यः पठेदिदमध्यायं श‍ृणुयाद्वा नरोत्तमः । सर्वपापविनिर्मुक्तो वैकुण्ठं लभते चिरम् ॥

पुत्रार्थी लभते पुत्रमर्थार्थी चार्थमाप्नुयात् । इह भुक्त्वाऽखिलान् भोगानन्ते वैकुण्ठमश्नुते ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வாறாக பிரஹ்மா மஹாத்மாவான நாரதருக்கு விரிவாகக் கூறியதை நான் உனக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன். நீ மனதை ஒருமுகமாக வைத்துக் கேள். எவன் இந்த அத்தியாயத்தைப் பக்தியுடன் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ அவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் நீங்கி வெகுகாலம் வைகுண்டத்தில் இருப்பான். புத்திரப்பேறு வேண்டுபவன் சத்புத்திரனை அயைவான், பொருள் வேண்டுபவன் மிகுந்த தனத்தை அடைவான். இவ்வுலகில் அனைத்துப் போகங்களையும் அனுபவித்து முடிவில் வைகுண்டத்தை அடைவான்.

इति श्रीमद्ब्रह्माण्डपुराणे ब्रह्मनारदसंवादे विष्णुपूजनं नाम तृतीयोऽध्यायः

இவ்வாறு பிரஹ்மாண்டபுராணத்தில் பிரஹ்மாவுக்கும் நாரதருக்குமிடையேயான சம்வாதத்தில் விஷ்ணு உன்னதபுரீசிவரரைப் பூஜித்த கதையை விளக்கும் மூன்றாவது அத்தியாயம் முற்றுப் பெற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥ चतुर्थाध्यायप्रारम्भः ॥

நான்காவது அத்தியாயம்

॥ ब्रह्मा ॥

பிரஹ்மா தொடர்ந்து கூறினார்

श्रृणु नारद वक्ष्यामि पक्षीन्द्राराधनं शुभम् । श्रृण्वतां सर्वपापघ्नं भुक्तिमुक्तेश्च साधनम् ॥

ஓ நாரதரே ! பக்ஷிகளுள் சிறந்தவனாகிய கருடன் உன்னதபுரீசுவரரை ஆராதித்த கதையைக் கூறுகிறேன். கேள். இக்கதையைக் கேட்போரிடமிருந்து அனைத்துப் பாவங்களும் விலகும். அது இவ்வுலகபோகத்தையும் முடிவில் முக்தியையும் அளிக்கவல்லது.

कैलासे तु पुरा शप्तो देवदेवेन शम्भुना । वैनतेयोऽतिदुःखात्मा देवं नत्वा महेश्वरम् ॥

(2)

முன்பு கைலாயத்தில் சம்புவான சிவபெருமானால் சபிக்கப்பட்ட வைநதேயனான கருடன் மிகுந்த துக்கத்துடன் மஹேசுவரரை வணங்கினான்.

प्रार्थयामास शापान्तं देवदेवं महेश्वरम् । ततो देवः कृपाविष्टो वैनतेयमुवाच ह ॥

(3)

வணங்கி சாபத்தின் முடிவைப் பிரார்த்தித்தான். தேவதேவரும் அவன் மீது கருணைகொண்டு பின்வருமாறு கூறினார்.

त्वं क्षुद्रविहगो भूत्वा मत्पुरे च महोन्नते । कावेर्या दक्षिणे भागे क्रोशयुक्ते महास्थले ॥

(4)

पाश्चात्ये क्रोशसंयुक्ते माधवी काननस्य च । श्रीउन्नतपुरे दिव्ये त्रिसंवत्सरमात्रतः ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(5)

ज्ञानहीनोऽतिमूढात्मा वस्त्वा त्वं च खगेश्वर ।

" பறவைகளில் சிறந்தவனே ! நீ ஒரு சிறிய பறவையாகி காவேரியின் தென்கரையில் ஒரு குரோசதூரத்திலும் மாதவீவனம் எனப்படும் திருக்கருகாவூருக்கு மேற்கில் அமைந்துள்ளதுமான ஸ்ரீ உன்னதபுரி என்னும் புண்ணியக்ஷேத்திரத்தில் மூன்று வருடகாலம் எவ்வித ஞானமும் அற்று வாசம் செய்வாயாக.

मत्स्थलस्य प्रभावेन शिवगङ्गाप्रभावतः ॥ (6)

यथार्थं रूपमागत्य पुनर्वैकुण्ठमेष्यसि ।

எனது ஸ்தலத்தின் மஹிமையாலும் சிவகங்கை எனும் புண்ணியதீர்த்தத்தின் மஹிமையாலும் உன்னுடைய உண்மையைன வடிவத்தை அடைந்து மீண்டும் வைகுண்டம் சேர்வாய் " என்றார்.

इत्युक्ते देवदेवेशे वैनतेयोऽतिदुःखितः ॥ (7)

तत्क्षणादेव तद्रूपं हित्वा क्षुद्रं बभूव ह । क्षुत्पिपासापरिश्रान्तः हिंसारतिपरायणः ॥

(8)

இவ்வாறு தேவதேவரான மஹேசுவரர் கூறியதும் மிகுந்த மனவருத்தத்திலிருந்த கருடன் தன்னுடைய உண்மையான உருவத்தை விடுத்து மிகச் சிறிய பறவையின் உருவத்தைக் கொண்டார். பசி, தாகம் ஆகியவற்றுக்கு ஆட்பட்டு, உடல் துயரமுற்று ஏனைய பக்ஷிகளைத் துன்புறுத்தி வரலானார்.

मत्स्यान् सर्पान् सदा हिंसन् हिंसाकरमतिः सदा । क्रमेण श्रीउन्नतपुरं प्राप्तवांश्च तदा सुत ॥

(9)

மீன்கள், பாம்புகள் ஆகியவற்றைத் துன்புறுத்தி வந்தார். சிறிது சிறிதாக உன்னதபுரத்தை வந்தடைந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

एवं गते तदा काले त्रिवर्षान्ते क्षुधायुतः । शिवगङ्गाजले मत्स्यान् दृष्ट्वा गृहणलोलुपः ॥

(10)

இவ்வாறிருக்கையில் மூன்றாம் ஆண்டுக் கடைசியில் ஒரு நாள் மிகுந்த பசியினால் சிவகங்கா தீர்த்தத்தில் நிறைய மீன்களைக் கண்டு அவற்றைப் பிடிக்க முயன்றார்.

पपात शिवगङ्गायां मत्स्यार्थी ऋषिसत्तम । तत्क्षणादेव स्वं रूपं हित्वा हर्षसमन्वितः ॥

(11)

முனிவர்களில் சிறந்தவனே ! அப்போது தவறி சிவகங்கா நீரில் விழுந்தார். விழுந்தவுடனேயே தன்னுடைய சிறிய உருவத்தை விட்டு உண்மையான உருவத்தைப் பெற்று மனதில் மகிழ்ச்சியடைந்தார்.

दिव्यज्ञानमवाप्यैव हर्षपर्याकुलेक्षणः । यथार्थं रूपमास्थाय शिववाक्यं तदा स्मरन् ॥

(12)

தெய்வீக ஞானம் பெற்றவுடன் அளவற்ற ஆனந்தமடைந்து தன் சுயஉருவத்தையும் அடைந்தவுடன் சிவபெருமானின் வாக்கியத்தை நினைவு கூர்ந்தார்.

इदमेव शिवेनोक्तं क्षेत्रं सर्वोत्तमोत्तमम् । इति मत्वा हर्षयुक्तः वैनतेयो महाबलः ॥

(13)

இதுதான் பெருமானால் முன்பு கூறப்பட்ட மிக உத்தமமான உன்னதபுரி க்ஷேத்திரம் என்பதை உணர்ந்த கருடன் மிக்க மகிழ்ச்சியடைந்து தன்னுடைய வலிமையை மீண்டும் அடைந்தார்.

स्नात्वा सङ्कल्पपूर्वं हि शिवगङ्गाजले शुभे । भस्मोद्धूषितसर्वाङ्गस्त्रिपुण्ड्राङ्कितमस्तकः ॥

(14)

ஸங்கல்பங்களை முறைப்படி செய்து கொண்டு அப்புண்ணிய சிவகங்கா தீர்த்தத்தில் நீராடி, உடல் முழுதும் திருநீறணிந்து கொண்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

रुद्राक्षमालाभरणो रुद्रमन्त्रजपे रतः । जितेन्द्रियो जितक्रोधो सर्वभूतहिते रतः ॥

(15)

ருத்திராக்ஷமாலைகளை அணிந்து கொண்டு ஸ்ரீருத்திரமந்திரத்தை ஜபம் செய்து கொண்டேயிருந்தார். புலன்களையும் கோபத்தையும் அடக்கி, எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்வதிலேயே நோக்கமாயிருந்தார்.

सर्वोपचारैः सम्पूज्य श्रीउन्नतपुरीश्वरम् । पूजान्ते गरुडः स्तोत्रं चकार परमेश्वरम् ॥

(16)

ஸ்ரீ உன்னதபுரீசுவரரைப் பலவித உபசாரங்களால் பூஜைசெய்தார். முடிவில் பரமேசுவரரை ஸ்தோத்திரம் செய்தார்.

नमः शिवाय सोमाय नमः साम्बाय शम्भवे । नमो नटाय रुद्राय सदसस्पतये नमः ॥

(17)

சிவபெருமானுக்கு வணக்கம். உமையுடன் கூடியிருப்பவருக்கு வணக்கம். அம்பிகையுடன் இருப்பவருக்கு வணக்கம். நடனமாடுபவருக்கு வணக்கம். கற்றோர்கள் கூடியிருக்கும் சபையின் தலைபருக்கு வணக்கம்.

पुराणपुरुषेशाय सर्वज्ञाय नमो नमः । नमो वेदान्तवेद्याय स्वयम्भवाय शम्भवे ॥

(18)

முன்னோர்களுக்கும் முன்னவராய் விளங்குபவருக்கும், முற்றும் அறிந்தவருக்கும் வணக்கம். வேதாந்தத்தின் உட்பொருளாய் இருப்பவருக்கும், தானே தோன்றியவருக்கும் வணக்கம்.

विश्वाधिकाय रुद्राय विश्वाधाराय ते नम । सत्यविज्ञानरूपाय नमः सत्यस्वरूपिणे ॥

(19)

பிரபஞ்சத்தைக் கடந்திருப்பவருக்கும், ருத்திரருக்கும், அனைத்துப் பிரபஞ்சத்திற்கும் ஆதாரமாயிருப்பவரான உங்களுக்கு வணக்கம். எப்போதும் அழியாது நிலைபெற்றிருப்பவருக்கும், ஞானமயமானவருக்கும், சத்தியவடிவாயிருப்பவருக்கும் வணக்கம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

योगिगम्याय योगाय योगानन्दस्वरूपिणे । नमो नित्याय शुद्धाय निर्मलाय चिदात्मने ॥

(20)

யோகிகளால் அனுபவித்து உணரப்படுபவருக்கும், யோக வடிவினருக்கும், யோகானந்த வடிவமானவருக்கும் வணக்கம். என்றும் உள்ளவருக்கும், மலங்களற்று சுத்தமானவருக்கும், மாசற்றவருக்கும், அறிவுப்பிழம்பானவருக்கும் வணக்கம்.

ज्ञानोत्तमाय गुरवे साक्षिणे ब्रह्मणे नमः । चन्द्रसूर्याग्निनेत्राय विरूपाक्षाय ते नमः ॥

(21)

எல்லாவற்றிற்கும் உயர்ந்த ஞானமாய் விளங்குபவருக்கும், அனைவருக்கும் ஒரே குருவாய் விளங்குபவருக்கும், எல்லா வற்றிற்கும் சாட்சியாயிருப்பவருக்கும், பிரஹ்மமாயிருப்பவருக்கும் வணக்கம்.

नमो दिग्वाससे तुभ्यमम्बिकापतये नमः । जय देव परानन्द जय चित्सत्यविग्रह ॥

(22)

திசைகளையே ஆடையாக அணிந்தவருக்கு வணக்கம். அம்பிகாபதிக்கு வணக்கம். எல்லாவற்றிற்கும் மேலான ஆனந்த வடிவினருக்கு வெற்றி ! அறிவையும் சத்தியத்தையும் உருவாயுடையவருக்கு வெற்றி !

जय संसाररोगघ्न जयाज्ञानविनाशन । जय निर्जितसंसार जय कान्दार्धविग्रह ॥

(23)

சம்சாரமென்னும் கொடிய நோயை அழிப்பவருக்கு வெற்றி ! அஞ்ஞானத்தை அழிப்பவருக்கு வெற்றி ! சம்சாரத்தைக் கடந்தவருக்கு வெற்றி ! உமையைத் தனது உடலின் ஒரு பாதியில் தாங்குபவருக்கு வெற்றி !

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

जय वेदान्तलक्ष्यार्थ जय वाचामगोचर । जयाहंकाररोगघ्न जय पातक भञ्जन ॥

(24)

வேதாந்தத்தின் உட்பொருளானவருக்கு வெற்றி ! சொல்லுக்கும் மனதிற்கும் எட்டாதவருக்கு வெற்றி ! நான் எனும் அகந்தை நோயை அழிப்பவருக்கு வெற்றி ! கொடிய பாவங்களைப் போக்குபவருக்கு வெற்றி !

जय कल्याणनिलय जय कञ्जविलोचन । जय कारुण्यहृदय जय कन्दर्पदर्पह ॥

(25)

மங்களங்களுக்கெல்லாம் உறைவிடமானவருக்கு வெற்றி ! தாமரை போன்ற கண்களுடையவருக்கு வெற்றி ! கருணையே உருவானவருக்கு வெற்றி ! மன்மதனை எரித்தவருக்கு வெற்றி !

जय कस्तूरितिलक जय कंसारिपूजित । जय कन्दर्पकोटिलावण्य दिव्यमङ्गलविग्रह ॥

(26)

கஸ்தூரி திலகமணிந்தவருக்கு வெற்றி ! கம்சனுக்கெதிரியான கண்ணபிரானால் பூஜிக்கப்பட்டவருக்கு வெற்றி ! கோடி மன்மதனுக்கொப்பான அழகுடையவருக்கு வெற்றி ! தெய்வீகமானதும் மங்களமானதுமான திருவுருவம் கொண்டவருக்கு வெற்றி !

विजयी भव नमस्तेऽस्तु विजयी भव महेश्वर ।

நீர் எப்போதும் வெற்றியுடையவராவீராக ! உமக்கு எனது வணக்கங்கள். ஓ மஹேசுவரரே ! நீர் எப்போதும் வெற்றியுடையவராவீராக !

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति स्तुतो महादेवो त्रिवर्षान्ते कृपाकरः ॥

(27)

आविर्भूतो लिङ्गमूर्तौ चन्द्रकोटिसमप्रभः । जटाकलापसंयुक्तः चन्द्रार्धकृतभूषणः ॥

(28)

रुद्राक्षमालाभरणः सर्पकङ्कणभूषितः । भूतिभूषितसर्वाङ्गस्त्रिपुण्ड्राङ्कितमस्तकः ॥

(29)

गरुडं प्राह देवेशो मन्दस्मितलसन्मुखः ।

மூன்றாமாண்டு நிறைவில் மேற்கண்டவாறு கருடனால் தோத்திரம் செய்யப்பட்ட கருணையே உருவம் கொண்ட மஹாதேவர் மிக்க மகிழ்ச்சியடைந்தவராய் அந்த இலிங்கத்தினின்றும் கோடிசந்திரர்களுக்குச் சமமான ஒளிபொருந்தியவராகவும், சடைகள் நிறைந்தும், பிறைச் சந்திரனைத் தலையில் அணிந்தும், ருத்திராக்ஷமாலைகளை ஆபரணமாக அணிந்தும், பாம்புகளைக் கங்கணங்களாக அணிந்துகொண்டும், உடல் முழுதும் திருநீறு பூசியும், நெற்றியில் வெண்ணீற்றினாலான மூன்று பட்டைகளை அணிந்தும் வெளிப்பட்டு புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் கருடனை நோக்கிக் கூறினார்.

वैनतेय महाप्राज्ञ मच्छापाच्च विमुक्तवान् ॥

(30)

महाबलेन संयुक्तो दिव्यज्ञानमवाप्स्यसि । इत्युक्त्वा देवऽदेवोपि महालिङ्गे तिरोधये ॥

(31)

வைநதேயனே ! அறிவு நிரம்பியவனே ! எனது சாபத்திலிருந்து நீ விடுதலை பெற்றாய். பேராற்றலைப் பெற்று தெய்வீக ஞானத்தையும் நீ அடைவாய் என அருளினார். பின்னர் அந்த இலிங்கத்திலேயே மறைந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तिरोहिते महादेवे वैनतेयोऽतिहृष्टवान् । पुरस्योत्तरभागे तु स्वनाम्ना तीर्थमुत्तमम् ॥ (32)

மஹாதேவர் மறைந்தவுடன் கருடன் அளவற்ற மகிழ்ச்சியுற்று அவ்வூரின் வடபுறத்தில் தன் பெயரால் வழங்கும் புண்ணிய தீர்த்தம் ஒன்றை ஏற்படுத்தினார்.

पक्षीन्द्रः कारयामास निजपूजाप्रसिद्धये । स्वयमेव महाभाग स्नात्वा तीर्थवारिणि ॥ (33)

தான் செய்த சிவபூஜை பிரசித்தி அடைவதற்காக அத்திருக்குளத்தை வெட்டி, அந்நீரில் தானும் ஸ்நானம் செய்தார்.

तत्तीर्थेन महादेवमभिषिच्य मुदान्वितः । शम्भोः प्रसादात् संप्राप्य तीर्थस्य वरमुत्तमम् ॥ (34)

அந்தப் புண்ணிய நீரினால் மனநிறைவுடன் மஹாதேவரையும் அபிஷேகம் செய்து பூஜை செய்தார். அதன் பயனாக சம்புவின் அருளையும் பெற்றார்.

तत्रैव बहुकालं हि ववास गरुडः स्वयम् । तत्क्षेत्रस्य समं नास्ति नास्ति नास्ति जगत्त्रये ॥ (35)

அவ்வூரிலேயே பல காலம் கருடன் வசித்துவந்தார். மூவுலகிலும் அந்த க்ஷேத்திரத்திற்கு ஈடான மற்றொன்று இல்லை, இல்லவேயில்லை.

यः स्नाति गारुडे तीर्थे महापापयुतोऽपि सः । सर्वपापैर्विनिर्मुक्तो भोगान् भुक्त्वा महीतले ॥ (36)

கருடனால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு, எல்லாப் போகங்களையும் அனுபவிப்பான்.

अन्ते कैलासमाप्नोति नात्र कार्या विचारणा । स्नानाच्च गारुडे तीर्थे सर्पबाधा न विद्यते ॥ (37)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இறுதியில் கைலாயத்தை அடைவான் என்பதில் சிறிதளவு கூட ஐயமில்லை. மேலும், அங்கு ஸ்நானம் செய்வதால் பாம்புகளிடமிருந்து எவ்விதத் தொல்லையும் ஏற்படாது.

सर्पदष्टो नरः स्नात्वा विषान्मुक्तो भविष्यति । कफपित्तादिभिश्चैव कुक्षिरोगप्रपीडिताः ॥

(38)

श्वासकासादिभिश्चैव महोदरयुताश्च ये । स्नानमात्राद्विमुच्यन्ते गरुडे तीर्थ उत्तमे ॥

(39)

பாம்புக்கடிபட்டவன் உடனே கருடதீர்த்தத்தில் நீராடினால் விஷம் நீங்கும். கபம், பித்தம், வயிற்று நோய்கள், சுவாசநோய்கள், எலும்புருக்கி, மஹோதரம் முதலான கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டவர்களும் கருடதீர்த்தத்தில் ஸ்நானம் செய்த மாத்திரத்தில் குணமடைவார்கள்.

शापान्मुक्तं वैनतेयं ज्ञात्वा विष्णुः सनातनः । गरुडानयनार्थं वै प्रेषयामास पार्षदान् ॥

(40)

இவ்வாறு சாபத்திலிருந்து கருடன் விடுபட்டதை அறிந்த விஷ்ணு அவரை வைகுண்டத்திற்கு அழைத்துவர தனது சேவகர்களை அனுப்பிவைத்தார்.

वेगेनागत्य तत्क्षेत्रं केशवस्याज्ञया तदा । वैनतेयाय वृत्तान्तं स्वामेराज्ञां न्यवेदयन् ॥

(41)

அவர்களும் கேசவனின் கட்டளைப்படி வேகமாக உன்னதபுரிக்கு வந்து கருடனிடம் நடந்தவற்றைக் கூறி தங்கள் ஸ்வாமியான விஷ்ணுவின் கட்டளையைத் தெரிவித்தனர்.

विष्णोराज्ञां तदा श्रुत्वा वैनतेयोऽतिदुःखितः । तत्क्षेत्रस्य वियोगेन चिन्तयन् दुःखमात्मनि ॥

(42)

விஷ்ணுவின் கட்டளையை அறிந்த கருடனும் அப்புண்ணியக்ஷேத்திரத்தை விட்டு நீங்க நேர்ந்ததை நினைத்து மனதில் வருத்தம் கொண்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

श्रीउन्नतपुराधीशं ध्यात्वा देवीं शिवप्रियाम् । पार्षदैश्च समायुक्तो वैकुण्ठं प्राप्तवांस्तदा ॥ (43)

ஸ்ரீ உன்னதபுரீசுவரரையும், சிவப்ரியாம்பாளையும் மனதில் நன்கு தியானித்தபின் அச்சேவகர்களுடன் வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்.

तस्मात् क्षेत्रसमं नास्ति सत्यं सत्यं वदाम्यहम् । बहुनात्र किमुक्तेन गुरुस्त्रीगामि मूढधीः ॥

(44)

गुरुं हत्वा महापापी प्रविष्टो ब्राह्मणाधमः । तत्क्षेत्रं च नृपश्रेष्ठ पापान्मुक्तो भवेच्च सः ॥

(45)

எனவே அந்த க்ஷேத்திரத்திற்குச் சமமாக வேறொரு க்ஷேத்திரம் இப்பூமியில் இல்லை. இது சத்தியம், சத்தியம். மேலும் அதிகமாகச் சொல்லுவதால் என்ன பயன் ? மூர்க்கன், தனது குருவின் மனைவியை விரும்புகிறவன், குருவைக் கொன்றவனாகிய பிராஹ்மணன் போன்றோர் கூட அந்த க்ஷேத்திரத்தில் நுழைந்தவுடன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் நீங்கியவனாகிறான்.

तस्मात् क्षेत्रसमं नास्ति नास्ति नास्ति जगत्त्रये । इत्युक्तो ब्रह्मणा राजन् नारदो हर्षसंयुतः ॥

(46)

எனவே மூவுலகங்களிலும் அந்த க்ஷேத்திரத்திற்குச் சமமான மற்றொன்று இல்லை, இல்லை, இல்லை. இவ்வாறு பிரஹ்மா கூறக்கேட்ட நாரதர் மிகவும் ஆனந்தமடைந்தார்.

ब्रह्माणं शरणं गत्वा आनन्दाश्रुपरिप्लुतः । गुरुस्त्रीसङ्गमं कृत्वा गुरुं हत्वा कथं द्विजः ॥

(47)

कृतकृत्यो महापापी वद मे चतुरानन ।

கண்களில் ஆனந்த வெள்ளம் பொங்க பிரஹ்மாவை வந்தனம் செய்து, " குருவின் மனைவியை விரும்பி, குருவையும் கொன்ற மகா பாவியான பிராஹ்மணன் எவ்வாறு புனிதமானான் என்பதை எனக்கு விரித்துக் கூறவேண்டுகிறேன் " என்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

यः पठेदिदमध्यायं श्रृणुयाद्वा समाहितः ॥

(48)

स्वर्गे भुक्त्वाऽखिलान् भोगानन्ते कैवल्यमश्नुते ।

இந்த அத்தியாயத்தைப் படிப்பவனோ அல்லது மனஒருமைப்பாட்டுடன் கேட்பவனோ சுவர்க்கத்தில் போகங்களையெல்லாம் அனுபவித்து முடிவில் கைவல்லியமெனும் மோக்ஷத்தை அடைவான்.

इति श्रीब्रह्माण्डपुराणे ब्रह्मनारदसंवादे श्रीउन्नतपुरीश्वरमाहात्म्ये चतुर्थोऽध्यायः

இவ்வாறு பிரஹ்மாண்டபுராணத்தில் பிரஹ்மாவுக்கும் நாரதருக்குமிடையேயான சம்வாதத்தில் நான்காவது அத்தியாயம் முற்றுப் பெற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥ पञ्चमाध्यायप्रारम्भः ॥

ஐந்தாவது அத்தியாயம்

॥ ब्रह्मा ॥

பிரஹ்மா கூறத்தொடங்கினார்.

श्रुणु नारद वक्ष्यामि तत्क्षेत्रस्य तु वैभवम् । महापापप्रशमनं गुरुहत्याविमोचनम् ॥ (1)

श्रोतृणां सर्वपापघ्नं सर्वमङ्गलदायकम् ।

நாரதரே ! அந்த க்ஷேத்திரத்தின் அருமைபெருமைகளைக் கூறுகிறேன். கேள். அது மஹாபாவங்களையும், குருவைக் கொல்லுதல் போன்றவற்றையும் நீக்க வல்லது. கேட்போருக்கு எல்லா மங்களங்களைய்யும் கொடுப்பது.

पुरा काञ्चीपुरे विप्रो धर्मज्ञ इति विश्रुतः ॥ (2)

दान्तः क्षान्तो दयायुक्तः शिवभक्तो जितेन्द्रियः। तस्य पुत्रोऽतिमूढात्मा नाम्ना दुर्जयनामकः ॥(3)

முன்னொருகாலத்தில் காஞ்சிபுரத்தில் தர்மஜ்ஞன் என்னும் பெயர் கொண்ட புகழ்பெற்ற பிராஹ்மணன் ஒருவன் இருந்தான். தனது மனதையும், புலன்களையும் அடக்கி, மற்றவர்களிடத்தில் தயையுடையவனாகவும், பொறுமையுடையவனாகவும், சிவபக்தி கொண்டவனாகவும் இருந்தான். ஆயினும் துர்ஜயன் எனும் பெயர்கொண்ட அவனுடைய மகன் ஒரு மூடனாயிருந்தான்.

मौञ्जीबन्धनकाले तु कृत्वा तस्य पिता तदा । गुरुगृहनिवासार्थं पुत्रस्य च ऋषीश्वर ॥ (4)

सुहोतृगृहमध्ये तु संस्थाप्य स्वसुतं तदा ।

ரிஷிகளின் தலைவனே ! தந்தையானவர் தனது மகனுடைய உபநயனகாலத்திலேயே அவனை குருகுலவாசம் செய்வதற்காக ஸுஹோதா என்னும் கற்றறிந்த குருவின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

सुहोतृनामकं विप्रं दान्तक्षान्तसमन्वितम् ॥ (5)

चतुःशास्त्रप्रवक्तारं वेदवेदान्तपारगम् । विप्रं दृष्ट्वा तु धर्मज्ञः पुत्रार्थमिदमब्रवीत् ॥ (6)

பொறுமையும், தன்னடக்கமும் உடையவரும், நான்கு சாத்திரங்களையும் நன்கு கற்றுத் தெளிந்தவரும், வேதவேதாந்தங்களை அறிந்தவருமான ஸுஹோதா எனும் அந்த பிராஹ்மணரைக் கண்டு தர்மஜ்ஞர் தனது மகனைக் குறித்து இவ்விதம் கூறினார்.

विप्रवर्य नमस्तेऽस्तु वेदवेदान्तपारग । दुर्जयस्य द्विजश्रेष्ठ वेदान् वक्तुं त्वमर्हसि ॥ (7)

" பிராஹ்மணர்களுள் சிறந்தவரே ! வேதவேதாந்தங்களை ஆழ்ந்து கற்றவரே ! உமக்கு வணக்கம். தாங்கள் துர்ஜயனுக்கு வேதங்களைக் கற்பிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன் " என்றார்.

तथास्त्विति सुहोता तु दुर्जयं संगृहीतवान् । साङ्गोपाङ्गान् तदा पुत्र वेदान् सर्वान् अशिक्षयत् ॥ (8)

दुर्जयोऽपि गुरोर्गेहे ववास मम पुत्रक ।

ஸுஹோதாவும் அவ்வாறே ஆகட்டும் என்று கூறி துர்ஜயனைத் தமது சீடனாக ஏற்றுக் கொண்டார். மகனே ! அவனுக்கு விரிவாக வேதங்களையும் வேதாங்கங்களையும் கற்பித்தார். துர்ஜயனும் அவ்வாறே குருகுலவாசம் செய்து வந்தான்.

एवं बहु गते काले सुहोता ब्राह्मणोत्तमः ॥ (9)

कार्यमुद्दिश्य श्रीरङ्गगमनार्थं तु दुर्जयम् । गृहसंरक्षणार्थं वै स्थाप्य दुर्जयनामकम् ॥ (10)

कुम्भस्तनीं चारुनासां बिम्बोष्ठीं यौवने स्थिताम् । भार्यां चोक्त्वा द्वितीयां तु नाम्ना कमललोचनाम् ॥ (11)

இவ்வாறு வெகுகாலம் சென்றபின் ஒரு நாள் சில முக்கிய வேலை நிமித்தம் ஸுஹோதா ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்குச் செல்ல எண்ணினார். எனவே, தனது வீட்டையும், அழகு பொருந்தியவளும், பருவ வயதுடையவளும், கமலலோசனா என்ற பெயருடையவளுமான தனது மனைவியையும் துர்ஜயனுடைய பாதுகாப்பில் இருத்தினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

श्रीरङ्गमगमत् पुत्र कार्यमुद्दिश्य सत्वरम् । निर्याते च तदा विप्रे दुर्जयः काममोहितः ॥ (12)

गुरुभार्यां तदा प्राप्य स्मरन् मूढमनास्तथा । मां भजस्वाद्य कल्याणि रतिं दास्ये तव प्रियाम् ॥ (13)

பின்னர் ஸ்ரீரங்கத்திற்குத் தனது காரியத்திற்காகச் சென்றார். அவர் சென்ற பிறகு காமமோகம் கொண்ட மூர்க்கனான துர்ஜயன் குருவின் மனையாளிடம் சென்று " மங்களம் பொருந்தியவளே ! நீ என்னிடம் வா. நான் உன் மனதிற்கு இசைந்தவாறு காம இச்சைகளைப் பூர்த்தி செய்வேன்.

किमेतद्गुरुणा कार्यं वृद्धेन तव शोभने । इत्युक्त्वा सा तदा ब्रह्मन् पूर्वजन्म विपाकतः॥ (14)

तथैवास्त्विति तं मूढं सस्वजे प्रीतमानसा । तदा तुष्टो महाभाग दुर्जयो ब्राह्मणाधमः ॥ (15)

அழகு நிறைந்தவளே! இந்த வயதுமுதிரிந்த குருவினால் உனக்கு என்ன பயன் ?" என்றான். இவ்வாறு அவன் கூறவும் பூர்வஜன்மவினைப் பயனால் அவளும் அவ்வாறே அதற்கு இசைந்து அவனை இறுகத் தழுவினாள். அதனால் பிராஹ்மணர்களுள் மிகவும் கீழ்த்தரமான அந்த துர்ஜயனும் மிகவும் மனம் மகிழ்ந்தான்.

तया साकं चिरं रेमे गुरुपत्न्याऽतिदुर्मनाः ।

கெட்ட எண்ணம் கொண்ட அவனும் அவளுடன் வெகுநேரம் காம இன்பத்தில் மூழ்கியிருந்தான்.

सुहोता तु तदा विप्रः श्रीरङ्गे त्वेकमासकम् ॥ (17)

वस्त्वा निवृत्य स्वं गेहं पुनःप्राप्तो द्विजोत्तमः ।

பிராஹ்மணர்களுள் சிறந்தவரான ஸுஹோதாவும் ஸ்ரீரங்கத்தில் ஒருமாதகாலம் இருந்தபிறகு தன் வீடு திரும்பினார்.

दुर्जयोऽपि तदा मूढः सद्विप्र इव भावयन् ॥ (18)

गुरुं नत्वा तदा पार्श्वे विनीत इव तस्थिवान् ।

மூர்க்கனாகிய துர்ஜயன் ஒரு நன்னடத்தையுள்ள அந்தணன் போல் நடித்து குருவை வணங்கி மிக்க அடக்கத்துடன் அவரருகில் நின்றிருந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

स्नात्वा भुक्त्वा सुहोता तु श्रान्त्या गेहेऽवसद् द्विजः ॥ (19)

ஸுஹோதாவும் ஸ்நானம் முதலான நித்தியகர்மானுஷ்டானங்களைச் செய்து உணவருந்திவிட்டு களைப்பினால் தனது இல்லத்திலிருந்தார்.

अस्तं प्राप्ते दिनकरे सन्ध्यामन्वास्य पश्चिमाम् । अभुक्त्वा च तदा श्रान्त्या सुष्वाप गृहमध्यके ॥(20)

சூரியாஸ்தமன வேளையில் ஸாயங்கால ஸந்தியாவந்தனத்தை முடித்துக் கொண்டு களைப்பு மிகுதியால் உணவு எதுவும் உட்கொள்ளாமலேயே ஸுஹோதா வீட்டின் நடுவில் உறங்கத் தொடங்கினார்.

दुर्जयोऽपि तदा मूढो निशि उत्थाय वेगतः । क्रीडाविघ्नकरं मत्वा सुहोतारं गुरुं स्वकम् ॥ (21)

खनित्रेण तदावेगात् शिरोदेशे जघान ह ।

கெட்ட எண்ணமுடையவனான துர்ஜயன் நடு நிசியில் எழுந்து தனது காம இன்பத்திற்குக் குருவான ஸுஹோதா ஒரு தடையாய் இருப்பதை உணர்ந்து ஒரு கோடரியால் அவரது தலையில் ஓங்கி அடித்தான்.

खनित्रप्रहराभिहतो ममार गृहमध्यके ॥ (22)

तस्य भार्याऽपि दृष्ट्वा तु भर्तारं च तदा मृतम् । अतिहर्षसमाविष्टा दुर्जयं प्राह पापधीः ॥ (23)

கோடரியால் வெட்டுண்ட ஸுஹோதா அங்கேயே உயிரிழந்தார். கொடுமையான எண்ணம் கொண்ட அவருடைய மனைவியும் தன் கணவர் இறந்ததைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்து துர்ஜயனை வந்தடைந்தாள்.

दैवात् त्वया हतो भर्ता तस्माद्दास्ये रतिं बहून् । अवटे तच्छवं क्षिप्त्वा मृदाऽऽपूर्य च शीघ्रतः ॥(24)

आगच्छस्व महाबाहो क्रीडयामो वयं मुदा ।

" விதிவசத்தால் உன்னால் என் கணவர் கொல்லப்பட்டார். இனி நான் உன்னுடன் சேர்ந்து காம இன்பத்தை அனுபவிப்பேன். நீ விரைவில் சென்று ஒரு குழியில் இச்சடலத்தை இட்டு மண்ணால் நிரப்பி மூடிவிட்டு வா. நாமிருவரும் ஆனந்தமாகக் காமக்கேளிக்கைகளில் ஈடுபடுவோம்" என்றாள்.

तथास्त्विति तदा मूढोऽवटं कृत्वाऽतिवेगतः ॥ (25)

तच्छवं च समावेश्य मृदाऽऽपूर्यातिवेगतः । गृहमागत्य वेगेन तामाहूय तदा निशि ॥ (26)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்தக் கொடூர மனமுடையவனும் அவ்வாறே விரைந்து ஒரு ஆழமான குழியில் குருவின் சடலத்தையிட்டு மண்ணினால் நிரப்பி நன்கு மூடிவிட்டு வீட்டினுள் வந்து நடு இரவில் அவளை அழைத்தான்.

गृहस्थितानर्थजातानादाय सहसा तदा । तामाहूयातिमूढात्मा ग्रामाद्बहिर्विनिर्गतः ॥

வீட்டிலுள்ள பொருட்களை மிக விரைவாக எடுத்துக் கொண்டு குருவின் மனைவியை அழைத்துக் கொண்டு அந்த மூர்க்கன் கிராமத்திற்கு வெளியே வந்தான்.

विनिर्गत्य तदा पुत्र अर्धरात्रौ तया सह । पन्थानं प्राप्तवान् मूढो दुर्जयः कामपीडितः ॥ (27)

அந்த நடுநிசி வேளையில் காமநோயினால் பீடிக்கப்பட்டவனான துர்ஜயன் அவளுடன் சாலைக்கு வந்து சேர்ந்தான்.

तत्काले तु महाकायास्तस्कराः खड्गधारिणः । आगत्य बहुवेगेन ताडयित्वा तु तं रुषा ॥ (28)

आहृत्य च बहून् द्रव्यान् तां चाहृय प्रधाविताः ।

அச்சமயம் பருத்த உடலைக் கொண்ட பயங்கரமான கொள்ளைக்காரர்கள் கையில் கத்திகளுடன் துர்ஜயனை நோக்கி ஓடிவந்து அவனை ஓங்கி அறைந்து அவனிடமிருந்த பொருள்களையும் பறித்துக் கொண்டு அந்த இளம்பெண்ணையும் அவனிடமிருந்து கவர்ந்து ஓடிவிட்டனர்.

ब्रह्महत्या महाघोरा कृष्णवर्णा भयानका ॥ (29)

आयुधं मुसलं गृह्य ताडयामास तं रुषा । ब्रह्मघ्नन् कुत्र यास्यसि गुरुं हत्वा महातपम् ॥ (30)

பிராஹ்மணனைக் கொன்றதால் விளையும் பிரஹ்மஹத்தி எனும் கொடிய பாவம் அச்சமயம் மிக பயங்கரமான கரிய உருவம் கொண்டு கையில் உலக்கையையேந்தி துர்ஜயனைக் கோபத்துடன் கடுமையாகத் தாக்கியது. " பிராஹ்மணனைக் கொன்ற பாவியே ! கடும் தவம் புரிந்த குருவைக் கொன்றுவிட்டு எங்கு ஓடுகிறாய் ?

तिष्ठ तिष्ठाद्य मूढात्मन् शक्तिर्नास्त्यद्य ते गन्तुम् ।

நில். நில். மூடனே ! இனிமேல் செல்வதற்கு உனக்கு சக்தி கிடையாது" என்று அவனை மிரட்டியது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति सन्तर्जितः पापी हत्यया दुर्जयस्तदा ॥ (31)

हाहेति प्रलपन् पुत्र धावमानो अहर्निशम् । क्वचित्तिष्ठन् क्वचित् गच्छन् भ्रमंश्च प्रलपन् मुहुः ॥ (32)

இவ்வாறு பிரஹ்மஹத்தி அந்த மஹாபாவியான துர்ஜயனை மிரட்டவும் அவன் ஹா, ஹா என்று அலறிக் கொண்டு அங்குமிங்கும் இரவும் பகலும் ஓடினான். சிலசமயம் நின்றான், வேறொரு சமயம் நடந்தான். தனது நிலையை நொந்து கொண்டான்.

क्षुत्पिपासापरिश्रान्तः प्रार्थयन् अन्नपानकः । इति भ्रमन् महापापी देशाद्देशं वनाद्वनम् ॥ (33)

பசியினாலும் தாகத்தினாலும் மிகவும் பீடிக்கப்பட்டு பலரிடம் உணவையும் நீரையும் வேண்டிப் பிச்சையெடுத்தான். இவ்வாறு அலைந்து திரிந்து நாடுகளிலும் காடுகளிலும் சென்றான்.

धावमानो अहोरात्रं हाहेति प्रलपन् मुहुः । नद्यां वाथ तटाके वा पातुं गच्छन् यथा गतः ॥ (34)

இரவும் பகலும் ஓயாமல் இந்நிலையில் ஹா ஹா என அரற்றித் திரிந்து நதியிலும் குளத்திலும் நீரருந்தச் சென்றான்.

ब्रह्महत्या तदाऽऽगत्य बहुदूरे निपात्यति । एवं बहुविधं दुःखमनुभूय स दुर्मतिः ॥ (35)

நீரருந்தச் செல்லும் போது பிரஹ்மஹத்திபாவமானது அவனைத் தடுத்தது. இவ்வாறு அந்தக் கெட்ட எண்ணமும் நடத்தையுமுடைய துர்ஜயன் துன்பமனுபவித்து வந்தான்.

अतिदुःखेन सन्तप्तो चिन्तयंश्च स्वपातकम् । अहो मया कृतं पापं घोरं गुरुवधेन च ॥ (36)

इति चिन्तासमाविष्टः पापशाशान्तिः कथं भवेत् । मया कृतस्य पापस्य प्रायश्चित्तं न विद्यते ॥ (37)

" அஹோ ! குருவைக் கொன்றதாகிய இத்தகைய மஹாபாதகத்தை நான் செய்தேனே எனத் தான் செய்த கொடிய பாவத்தை நினைத்து நினைத்து வருந்தினான். ' அத்தகைய பாவத்திற்கு ஏதேனும் சாந்தி உளதோ ? அதற்குப் பிராயச்சித்தம் இராது' எனப் பலவாறாகச் சிந்தையில் ஆழ்ந்தான்.

मत्पापशमनार्थं वै तीर्थयात्रां व्रजाम्यहम् ।

इति निश्चित्य मनसा हत्यया च प्रपीडितः । भ्रमन् वेगेन च तदा स्थलानि विविधानि च ॥ (39)

अहोरात्रं धावमानः अतिवेगेन दुर्जयः ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

' எனது கொடிய பாவத்தைப் போக்க நான் தீர்த்தயாத்திரை செல்வேன்' எனத் தீர்மானித்து பிரஹ்மஹத்தியினால் பீடிக்கப்பட்ட அவன் விரைவாகப் பல திருத்தலங்களுக்குச் சென்றான்.

एवं संवत्सरायातः .... ॥ (40)

एवं बहु गेते काले कस्मिंश्च दिवसान्तरे । पूर्वजन्मकृतात् पुण्यात् श्रीउन्नतपुरं शुभम् ॥ (41)

पञ्चक्रोशसमायुक्तं प्राप्तवान् दैवयोगतः ।

இப்படி ஒருவருடகாலம் கழிந்தது. பின்னர், பல நாட்கள் சென்ற பிறகு ஒரு நாள் பூருவஜன்ம புண்ணியத்தினால் துர்ஜயன் ஸ்ரீ உன்னதபுரத்திற்கு ஐந்து குரோசதூரத்தை வந்து சேர்ந்தான்.

तत्काले तु महादेवः श्रीउन्नतपुरीश्वरः ॥ (42)

वृद्धरूपं समास्थाय वृद्धया चोमया युतः । कावेर्या दक्षिणे तीरे लीलया विहरन् शुभः ॥ (43)

அச்சமயம் உன்னதபுரீசுவரராகிய மஹாதேவர் ஒரு வயதான கிழவனுடைய உருவத்தைத் தாங்கிக் கொண்டு கிழ உருவம் தாங்கிய உமாதேவியுடன் காவேரியின் தென்கரையில் ஓய்வாக நடந்த கொண்டிருந்தார்.

स्थितस्तत्र महादेवस्तत्काले दुर्जयः सुत । हत्यया पीडितो वेगादाजगाम रुदन् मुहुः ॥ (44)

மகனே ! அவ்வாறிருக்கையில் பிரஹ்மஹத்தியினால் மிகவும் பீடிக்கப்பட்ட துர்ஜயன் ஓவென அலறிக்கொண்டு வேகமாக வந்தான்.

दयया च समायुक्ता तद्रक्षणकृतोद्यमा । शिवप्रिया महादेवी श्रीउन्नतपुरेश्वरम्॥ (45)

दृष्ट्वोवाच मुदा युक्ता कामस्य च विचेष्टितम् । गुरुस्त्रीगमनं कृत्वा गुरुं हत्वा प्रधावति ॥ (46)

अहो कामस्य वशतां प्राप्तवान् स च मूढधीः ।

அன்னையான சிவபிரியாதேவி அவன் மீது கருணைகொண்டு அவனைக் காக்க எண்ணி உன்னதபுரீசுவரரை நோக்கிக் " அந்தோ காமத்தின் செயல்பாடு ! காமத்தினால் உந்தப்பட்டு அந்த மூர்க்கன் குருவின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மனையாளைப் புணர்ந்து குருவையும் கொன்று விட்டு இங்குமங்கும் அலைகிறான்.

तं रक्षस्व महाभाग मत्स्थलस्य प्रसिद्धये ॥ (47)

अवश्यं रक्षणीयोऽद्य तस्माद्दृष्टिपथं गतः । इत्युक्तां तां शिवां दृष्ट्वा श्रीउन्नतपुरीश्वरः ॥ (48)

ஸ்வாமி ! எனது புண்ணியஸ்தலமான உன்னதபுரியின் புகழுக்காக அவனைக் காக்கவேண்டும். அதற்காகத் தான் அவன் நம் கண்களுக்கெதிரில் வந்துள்ளான் " எனக் கூறினாள். இவ்வாறு கூறிய உமையை உன்னதபுரீசுவரரும் நோக்கினார்.

किञ्चित् विस्मयसंयुक्त उवाच मधुराक्षरम् । ब्रह्मलिप्यानुगुण्येन शुभं वा यदि वाशुभम् ॥ (50)

भोक्तव्यं मनुजैर्नित्यं कृत्यानुगुणतः शिवे । किमनेन विचारेण पुरं यामो वरं प्रिये ॥ (51)

சிறிது ஆச்சரியத்துடன் பார்வதியை நோக்கி " என் மனதிற்கு இனியவளே ! மனிதர்கள் தங்களது தலையெழுத்துப்படி சுகத்தையோ துக்கத்தையோ அவரவர்களது கருமவினைக்கேற்ப அனுபவிக்கத்தான் வேண்டும். ஆதலால் அதைப் பற்றி ஆராய்வதில் என்ன பயன் ? நாம் நமது ஊருக்குச் செல்வோம்" என்று இனிய வார்த்தைகளால் கூறினார்.

इत्युक्तवन्तं देवेशं श्रीउन्नतपुरेश्वरम् । अत्यन्तदयया युक्ता प्राह फुल्लविलोचना ॥ (52)

இவ்வாறு கூறிய தேவதேவரான உன்னதபுரீசுவரரைப் பார்த்து அகன்ற கண்களையுடைய தேவி கருணை பொங்கும் மனத்துடன் கூறினாள் :

ब्रह्मलिप्यानुगुण्येन फलं भुङ्क्ते जनो भुवि । रक्ष रक्ष कृपासिन्धो हत्ययाऽभिद्रुतं द्विजम् ॥ (53)

" உலகில் தலையெழுத்துப்படிதான் மக்கள் பலன்களை அனுபவிக்கிறார்கள் என்பது உண்மை. எனினும் கருணைக் கடலே ! பிரஹ்மஹத்தியினால் துன்பப்படும் இந்த பிராஹ்மணனைக் காக்கவேண்டுகிறேன் " .

इत्युक्तां तां तदा दृष्ट्वा प्रहस्य वाक्यमब्रवीत् । रक्षिष्येऽहं महाभागे यस्मात् त्वं वहु भाषसे ॥ (54)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவ்வாறு சொன்ன தேவியைப் பார்த்துச் சிறிது புன்சிரிப்புடன் "பெருமைவாய்ந்தவளே ! நீ அவனைக் குறித்து அதிகம் பேசுவதால் நான் அவனை ரக்ஷிக்கிறேன்.

पञ्चक्रोशे समायुक्तं यदा दैवात् समागतः । तदानीमेव पापैश्च मुक्तो नास्त्यत्र संशयः ॥ (55)

ஸ்ரீ உன்னதபுரிக்கு ஐந்து குரோசம் அருகில் விதிவசத்தால் அவன் வந்துவிட்டதாலேயே எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாகிறான். இதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

ब्रह्महत्यायुतैर्युक्तो मत्स्थलस्य प्रवेशतः । विमुक्तो भवति क्षिप्रं नरो नास्त्यत्र संशयः ॥ (56)

எண்ணற்ற பிரஹ்மஹத்திபாவங்களையுடையவன் கூட என்னுடைய ஸ்தலத்தில் நுழைந்தமாத்திரத்திலேயே அவற்றிலிருந்து விடுபடுகிறான் என்பதிலும் ஐயமில்லை" என்றார்.

इति संवदतो देवात् दुर्जयो वेगतस्तदा । समीपमुपसंगम्य शिवयोर्वृद्धरूपयोः ॥ (57)

இவ்வாறு தேவதேவியர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கையில் துர்ஜயன் வேகமாகக் கிழஉருவம் கொண்ட சிவபெருமான் மற்றும் உமாதேவியர்களுக்கு அருகில் வந்தான்.

ननाम दुर्जयो वेगात् पादयोरुभयोस्तयोः । दह्यमाना तदा हत्या रुदद्वेगात् पलायिता ॥ (58)

அவர்களுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். உடனேயே அந்தத் தெய்வீக சாந்நித்தியத்தினால் தான் எரிக்கப்படுபவள் போல் உணர்ந்த பிரஹ்மஹத்தி அழுது அரற்றிக்கொண்டு துர்ஜயனை விட்டு ஓடினாள்.

दुर्जयोऽपि तदा हत्यां दृष्ट्वा वेगेन धावतीम् । अत्यन्ताश्चर्यसंयुक्तो हर्षगद्गदया गिरा ॥ (59)

துர்ஜயனும் பிரஹ்மஹத்தி தன்னை விட்டு நீங்கி வேகமாக ஓடுவதைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தவனாய் மனதில் மகிழ்ச்சி மிகுதியினால் நாத்தழுதழுக்கக் கூறினான்.

दैवान्मद्दृष्टिपथगौ संप्राप्तौ बहुभाग्यतः । कौ युवां मम दुर्बुद्धेरागातौ दृष्टिगोचरम् ॥ (60)

साधूनां दर्शनादेव पापं विलयमेष्यति । इतिशास्त्रैः प्रगीयन्ते सत्यमेव न संशयः ॥ (61)

" தெய்வச் செயலாய் நீங்களிருவரும் என் கண்களுக்குத் தென்பட்டீர்கள். கெட்டபுத்தியுடைய எனது பார்வைக்கு அகப்பட்ட நீங்கள் யார் ?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சாதுக்களைக் கண்டதாலேயே பாவங்களெல்லாம் நீங்கிவிடும் என்று சாத்திரங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே.

साक्षात् शङ्कर एवाद्य शङ्करीच महेश्वरी । मन्येऽहं वृद्धरूपौ तौ रक्षणार्थं समागतौ ॥(62)

உங்களிருவரையும் ஸாக்ஷாத் சங்கரனும் சங்கரியான உமாதேவியும் தான் என்னைக் காப்பதற்காகக் கிழஉருவத்தில் வந்துள்ளதாக நான் எண்ணுகிறேன்.

युवयोर्दर्शनादेव ब्रह्महत्या प्रधावति । रक्ष रक्ष महाभागौ महापापिनमद्य वै ॥ (63)

உங்களிருவருடைய தரிசனத்தால் பிரஹ்மஹத்தி ஓடிவிட்டது. ஓ மஹாத்மாக்களே ! மஹாபாவியான என்னைக் காப்பாற்றுங்கள்.

बहुकालो मया नीतःहत्यया च प्रपीडितः ।

வெகுகாலம் நான் இந்த பிரஹ்மஹத்தியினல் பீடிக்கப்பட்டுப் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளேன் " .

इत्युक्त्वैव नमस्यन्तं श्रीउन्नतपुरेश्वरः ॥ (67)

प्राह गम्भीरया वाचा दुर्जयं दुःखसंयुतम् । रे रे दुरात्मन् दुर्बुद्धे पापं कृत्वाऽद्य रोदसि ॥ (68)

இவ்வாறு கூறித் தன்னை வீழ்ந்து வணங்கிய துர்ஜயனை நோக்கி உன்னதபுரீசுவரர் கம்பீரமான தொனியில் கூறினார்: " ஓ துராத்மாவே ! கெட்டபுத்தியுடையவனே ! பாவங்களைச் செய்துவிட்டு இப்போது அழுது புலம்புகிறாய்.

त्वत्कृतस्य च पापस्य प्रायश्चित्तं न विद्यते । गुरुस्त्रीसङ्गमं कृत्वा गुरुं हत्वाऽद्य दुर्मते ॥ (69)

किं प्रलापेन हे मूढ यस्मान्मद्दृष्टिगोचरः । तस्माद्वा श्रृणु मद्वाक्यं प्रायश्चित्तं वदाम्यहम् ॥ (70)

நீ செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமே இல்லை. மதிகெட்டவனே ! குருவின் மனைவியைப் புணர்ந்து குருவையும் கொன்றுவிட்டு இப்போது புலம்புவதால் என்ன பயன் ? இருந்தும் எனது பார்வையில் நீ பட்ட ஒரே காரணத்தால் பிராயச்சித்தத்தைக் கூ றுகிறேன். என் வார்த்தைகளைக் கவனமாகக் கேள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इतो दक्षिणभागे तु एकयोजनमात्रतः । विष्टपत्रयविख्यातं श्रीउन्नतपुरीति च ॥ (71)

இங்கிருந்து தெற்கில் ஒரு யோஜனை தூரத்தில் தேவலோகம் வரை புகழ்பெற்ற உன்னதபுரமென்னும் ஓர் ஊர் உள்ளது.

स्मरणात् सर्वपापघ्नं दर्शनात् सर्वकामदम् । गमनात् मोक्षदं नृणां वन्दनात् सर्वसिद्धिदम् ॥ (72)

அந்த ஊரை மனதால் நினைப்பதாலேயே அனைத்துப் பாவங்களும் நீங்கும். கண்களால் காண்பதால் எல்லா விருப்பங்களும் பூர்த்தியாகும். அங்கு செல்வதால் மக்களுக்கு மோக்ஷம் கிட்டும். வழிபாடு செய்வதால் எல்லா சித்திகளும் கைவரப்பெறும்.

सर्वपापहरं पुण्यं शिवेनैव प्रकल्पितम् ।

அனைத்துப் பாவங்களையும் போக்கும் புண்ணியம் வாய்ந்த அந்த க்ஷேத்திரம் சிவபெருமானாலேயே உண்டுபண்ணப்பட்டது.

त्वं गच्छ शीघ्रं तत्क्षेत्रं शिवगङ्गाजले शुभे ॥ (73)

त्रिकालं नियमेनैव स्नानं कुरु द्विजाधम ।

பிராஹ்மணர்களுள் கீழ்த்தரமானவனே ! நீ விரைவாக அப்புண்ணியக்ஷேத்திரத்திற்குச் சென்று மூன்று காலமும் முறைப்படி சிவகங்கா திருக்குளத்தில் நீராடு.

श्रीउन्नतपुरीनाथं महालिङ्गं महेश्वरम् ॥ (74)

शिवप्रियाम्बयायुक्तं भक्तकल्पमहीरुहम् । प्रातःकाले च मध्याह्ने सायाह्ने च विशेषतः ॥ (75)

अर्धयामे महापुण्ये देवं दर्शय भक्तितः ।

மஹாலிங்கவடிவாய் எழுந்தருளியிருப்பவரும், சிவப்ரியாம்பாளுடன் கூடியிருப்பவரும், பக்தர்கள் கேட்கும் வரங்களை அள்ளி வழங்கும் கல்பவிருக்ஷமுமான ஸ்ரீ உன்னதபுரியின் நாதரை விடியற்காலை, நண்பகல், சாயங்காலம் மற்றும் அர்த்தயாமம் ஆகிய நேரங்களில் பக்தியுடன் வழிபட்டு வா.

प्रातःकाले दर्शनात्तु गोसहस्रप्रदानतः ॥ (76)

यत्फलं लभते मर्त्यः तत्फलं सम्यगश्नुते ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதிகாலையில் பெருமானைத் தரிசிப்பதால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் கிட்டும்.

मध्याह्नकाले देवेशदर्शनं यः करोति च ॥ (77)

सहस्रकन्यकादानफलमाप्नोति मानवः ।

நண்பகலில் எவன் தரிசனம் செய்கிறானோ அவன் ஆயிரம் கன்னிகைகளைத் தானம் செய்த பலனை அடைகின்றான்.

सायंकाले माहादेवं श्रीउन्नतपुरीश्वरम् ॥ (78)

यः पश्यति मुदायुक्तः सर्वकामप्रदं शिवम् । चतुस्सागरमध्यस्थं भूमिदानफलं लभेत् ॥ (79)

சாயங்காலத்தில் அனைத்து இச்சைகளையும் பூர்த்தி செய்யும் மஹாதேவராகிய உன்னதபுரீசுவரரைத் தரிசனம் செய்வதால் நான்குகடலும் சூழ்ந்த பூமியைத் தானம் செய்த பலனை அடைகிறான்.

अर्धयामे महादेवदर्शनान्मोक्षमश्नुते । वीथिप्रदक्षिणं नित्यं नियमेन च संयुतः ॥ (80)

श्रीरुद्रं चमकं चैव जपेन्नित्यमतन्द्रितः । पदे पदेऽश्वमेधानां फलदं सर्वकामदम् ॥ (81)

அர்த்தயாமத்தில் மஹாதேவரைத் தரிசனம் செய்வதால் மோக்ஷத்தையே அடைகிறான். தினமும் திருவீதியைப் பக்தியுடன் வலம் வந்து சிரத்தையுடன் ஸ்ரீ ருத்திரத்தையும் சமகத்தையும் பாராயணம் செய்து வந்தால் கால் வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அசுவமேதயாகம் செய்த பலனை அடைகிறான். அவனது விருப்பங்கள் யாவும் பூர்த்தியடைகின்றன.

कुरु त्वं नियमेनैव प्रदक्षिणसहस्रकम् । एवं त्रिमासपर्यन्तं जितक्रोधो जितेन्द्रियः ॥ (82)

कुरु त्वं नियमेनैव अन्तःशुद्धो भविष्यसि ।

நீயும் தினமும் ஆயிரம் முறை திருவீதியைப் பிரதக்ஷிணம் செய். மூன்று மாதகாலம் கோபத்தையும் புலன்களையும் அடக்கி அவ்வாறு செய்துவந்தால் உனது மனம் சுத்தமடையும்" .

इत्येवमुक्त्वा देवेशो गच्छ गच्छेति चाब्रवीत् ॥ (83)

தேவர்களுக்குத் தலைவரான மஹாதேவர் இவ்வாறு கூறிவிட்டு விரைவாக உன்னதபுரத்திற்குச் செல் என்றும் கூறினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

दुर्जयो ऽ पि तदा नत्वा देवं देवीं च वेगतः ।

துர்ஜயனும் உடனே மஹாதேவரையும் தேவியையும் வணங்கினான்.

हर्षाश्रुपरिपूर्णाक्षो श्रीउन्नतपुरं शुभम् ॥ (84)

गत्वा नत्वा महादेवं शिवगङ्गाजले शुभे । स्नात्वा तु नियमेनैव प्रदक्षिणसहस्रकम् ॥ (85)

கண்களில் ஆனந்தக்கண்ணீர் பொங்க வேகமாக உன்னதபுரீசுவரரை வந்து வணங்கினான். புண்ணியமான சிவகங்காதீர்த்ததில் நீராடி நியமத்துடன் ஆயிரம் முறை ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்தான்.

नित्यं त्रिषवणे स्नात्वा देवं दृष्ट्वा महेश्वरम् । शिवोक्तमखिलं चैव कृतवांश्च त्रिमासकम् ॥ (86)

இவ்வாறு தினமும் மூன்று வேளையும் சிவகங்கா தீர்த்தத்தில் நீராடி மஹேசுவரரைத் தரிசனம் செய்து சிவபெருமான் கிழவேடம் பூண்டு கூறியவற்றையெல்லாம் செய்து வந்தான்.

अतःपरं मुदायुक्तो तत्क्षेत्रे च वसन् सदा । रुद्राक्षमालाभरणस्त्रिपुण्ड्राङ्कितमस्तकः ॥ (87)

भिक्षमाणो चैकवारं भुक्त्वा चैव मुदान्वितः । ब्रह्मचर्याश्रमे नित्यं वसन् दुर्जयनामकः ॥ (88)

ருத்திராக்ஷமாலைகளைத் தரித்துக் கொண்டு நெற்றியிலும் உடலிலும் திருநீறணிந்து மிக மகிழ்ச்சியுடன் அந்த க்ஷேத்திரத்திலேயே வசித்து வந்தான். ஒரு வேளை மட்டும் பிச்சையெடுத்து உணவு உண்டு மனநிறைவுடன் காலம் கழித்து வந்தான்.

देहान्ते शम्भुसायुज्यं प्राप्तवांश्च ऋषीश्वराः । तस्मात्तत्क्षेत्रस्य समं नास्ति नास्ति जगत्रये ॥ (89)

இறுதியில் பூதவுடலை நீத்துச் சிவபெருமானுடன் ஐக்கியமடைந்தான். எனவே இத்தகு பெருமை வாய்ந்த அந்த க்ஷேத்திரத்திற்குச் சமமாக வேறொன்று இல்லை. மூவுலகிலும் இல்லை.

यः पठेदिदमध्यायं श्रुणुयाद्वा समाहितः । सर्वपापविनिर्मुक्तश्चन्द्रकान्तिसमप्रभम् ॥ (90)

दिव्यं विमानमारुह्य शिवलोके सदा वसेत् ।

எவன் இந்த அத்தியாயத்தைப் படிக்கிறானோ அல்லது பக்தியுடன் கேட்கிறானோ அவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் நீங்கி சந்திரனின் பிரகாசத்தையொத்த தெய்வீக விமானத்திலேறி சிவலோகம் அடைந்து அங்கேயே எப்போதும் வசிப்பான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति श्रुत्वा नारदो ऽपि श्रीउन्नतपुरेशितुः ॥ (91)

चरित्रं सर्वपापघ्नं सर्वमङ्गलदं शुभम् । प्रणम्य भक्त्या ब्रह्माणं वेदानां च हितं पुनः ॥ (92)

पप्रच्छ नारदस्तत्र श्रीउन्नतपुरे तदा । चतुर्मुखो ऽपि तत्सर्वमवदच्च नराधिप ॥ (93)

ஓ அரசனே ! நாரதரும் இவ்வாறு பாவங்களையெல்லாம் போக்கவல்லதும் மங்கலங்களைக் கொடுப்பதும் புண்ணியமானதுமான உன்னதபுரேசுவரரின் திவ்விய மஹிமைகளைக் கேட்டு பிரஹ்மாவைப் பக்தியுடன் நமஸ்கரித்து வேதங்களின் நன்மைகளைப் பற்றி உன்னதபுரியில் கேட்டார். நான்முகனும் அவ்வாறே நாரதர் கேட்டவர்றை விளக்கினார்.

॥ इति श्रीब्रह्माण्डपुराणे ब्रह्मनारदसंवादे श्रीउन्नतपुरीश्वरमाहात्म्ये विप्रस्य ब्रह्महत्या विमोचनं नाम

पञ्चमो ऽध्यायः ॥

இவ்வாறாக பிரஹ்மாண்டபுராணத்தில் பிரஹ்மாவுக்கும் நாரதருக்குமிடையேயான சம்வாதத்தில் உன்னதபுரீசுவர மாஹாத்மியத்தில் பிராஹ்மணனுடைய பிரஹ்மஹத்தி தோஷம் நீங்கிய ஐந்தாவது அத்தியாயம் முற்றுப் பெற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥ षष्ठाध्यायप्रारम्भः ॥

ஆறாம் அத்தியாயம்

॥ ब्रह्मा ॥

பிரஹ்மா தொடர்ந்தார்

श्रृणु नारद वक्ष्यामि वेदाराधनमञ्जसा ।

ஓ நாரதரே ! வேதங்கள் சிவபெருமானை எப்படி வழிபட்டனவென்று சொல்கிறேன். கேள்.

कल्पान्ते तु महादेवो लोकान् संहृत्य लीलया ॥ (1)

निर्गुणो निरहंकारो नित्यशुद्धो निरञ्जनः । स्वप्रकाशः स्वतन्त्रश्च सोऽतिष्ठज्जगतीपतिः ।

" முந்தைய கல்பகாலத்தின் முடிவில் அனைத்து உலகங்களையும் மஹாதேவரான சிவபெருமான் எவ்வித முயற்சியுமின்றி விளையாட்டாக ஸம்ஹாரம் செய்து தன்னுள் அடக்கியிருந்தார். பெருமான் எவ்வித குணங்களுமின்றி தான் தனது என்ற எண்ணம் சிறிதுமின்றி மலங்களற்று சுத்தமாகவும், சுயம்பிரகாசமாய், சுதந்திரராய் எல்லாவற்றிற்கும் ஒப்பற்ற ஒரே தலைவராய் விளங்கியிருந்தார்.

तस्यासीत् परमेशस्य बुद्धिरत्र मुनीश्वर ॥ (2)

बहुस्यामिति देवस्य सर्वलोकहितस्य च । शक्तिः काचित्तदा तस्मिन् बभूवाद्भुतदर्शना ॥ (3)

அவருக்கு அச்சமயம் உலக நலன் கருதி நான் பலவாறாக ஆகவேண்டும் எனும் எண்ணம் உதித்தது. உடனே மிகவும் அற்புதமான உருவத்தில் அவருடைய பேராற்றலாகிய சக்தி வெளிப்பட்டது.

महाविष्णुः प्रसन्नात्मा तस्यामासीत् शिवांशतः । तस्य नाभावहं विष्णोरभवं शङ्करांशतः ॥ (4)

அச்சக்தியிலிருந்து சிவபெருமானின் ஒரு சிறிட அம்சமாக மஹாவிஷ்ணு தோன்றினார். அவருடைய தொப்புளிலிருந்து சிவபெருமானின் மற்றொரு சிறிய அம்சமாக நான் தோன்றினேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पञ्चवक्त्रो महातेजा वेदगर्भः शिवाज्ञया । ऋग्यजुर्सामाथर्वाख्यवेदैः स्तोत्रं मया कृतम् ॥ (5)

நான் ஐந்து முகங்களுடன் மிகுந்த பிரகாசம் கொண்டிருந்தேன். சிவபெருமான் ஆணைப்படி ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம் என்னும் நான்கு வேதங்களை ஓதிச் சிவபெருமானைத் தோத்திரம் செய்தேன்.

चतुर्वक्त्रैश्चतुर्वेदैरेकवक्त्रेण शास्त्रतः । स्तुतमात्रेण भगवान् सच्चिदानन्दविग्रहः ॥ (6)

सुप्रीतः सुप्रसन्नश्च ब्रह्मत्वं दत्तवान् मम ।

எஞ்சிய மற்றொரு முகத்தால் சாத்திரங்களை ஓதிப் பெருமானைத் துதித்தேன். எனது தோத்திரத்தால் ஸச்சிதானந்த வடிவினராகிய பகவான் மனம் மிகவும் மகிழ்ந்து எனக்கு பிரஹ்மா பதவியை அளித்தார்.

इदं प्राह पुनर्देवः सर्वलोकहिते रतः ॥ (7)

" பின்னர் தேவதேவரும் எல்லா உலகிற்கும் நன்மையே செய்பவருமாகிய பெருமான் கூறினார்.

त्वद्वक्त्रनिःसृता वेदा ममैवाज्ञा न संशयः । तस्माद्वेदोक्तमार्गेण वर्णाश्च ब्राह्मणादयः ॥ (8)

कुर्वन्तु सततं कर्म ममाज्ञाकारका जना । वेदमार्गविधानेन कर्म कुर्वन्ति मानवाः ॥ (9)

" உனது முகத்திலிருந்து தோன்றிய நால்வேதங்களும் எனது கட்டளைகளே என்பதைத் தெருந்து கொள். எனவே பிராஹ்மணர் முதலானோர்கள் அந்த வேதங்களில் விதிக்கப்பட்டவாறே எப்போதும் தங்களது கருமங்களை எனது ஆணைப்படி செய்யக்கடவர்கள் " .

अस्मिन् मन्त्रजपेनैव प्रसन्नाः सर्वदेवताः । तत्तदिष्टं प्रयच्छन्ति नराणां पुण्यकर्मणाम् ॥ (10)

இந்த மந்திரங்களை ஜபிப்பதால் எல்லா தேவர்களும் பிரசன்னர்களாகி அவரவர்கள் வேண்டும் வரங்களை அவரவர்களுடைய புண்ணியகருமங்களுக்கேற்றவாறு அளிக்கிறார்கள்.

वेदमन्त्रं जपित्वैव मूर्त्तिष्वावाह्य निर्जरान् । मन्मन्त्रेणैव सम्पूज्य स्वाभीष्टं प्राप्नुयुर्नराः ॥ (11)

வேதமந்திரங்களை ஜபித்து தெய்வத்திருவுருவங்களில் தேவதைகளை ஆவாஹனம் செய்து மந்திரங்களினாலேயே பூஜை செய்து தங்களது விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறார்கள் " .

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अस्मद्दत्तप्रसादेन मोक्षं विन्दन्ति मानवाः । अस्माभिरुक्तकर्माणि अस्मन्मन्त्रैर्द्विजोत्तमाः ॥ (12)

वह्नौ हुत्वा मदुक्तानि फलान्यनुभवन्तिः हि । तस्मात् सर्वेषु लोकेषु वयमेव महेश्वराः ॥ (13)

" நம்மால் அருளப்பட்டு மனிதர்கள் மோக்ஷத்தை அடைகிறார்கள். நம்மால் சொல்லப்பட்ட கருமங்களையும் நம்மிடத்திலுள்ள மந்திரங்களை ஜபித்து அக்கினியில் ஹோமம் செய்தும் நாம் கூறிய பயன்களை பிராம்ஹணர் முதலானோர்கள் அடைகின்றனர். எனவே நாம் தான் அனைத்துலகிலும் சிறந்தவர்கள் " என்று வேதங்களும் மிக கர்வம் கொண்டன.

इति कृत्वा मतिं वेदाश्चत्वारः सहदर्शनाः । गर्वेण महताविष्टा न नमन्ति पिताकिनम् ॥ (14)

" இவ்வாறு வேதங்கள் கர்வம் அடைந்ததால் அவை பிநாகம் என்னும் வில்லைக் கையிலேந்திய சிவபெருமானை வணங்காமலிருந்தன.

वेदावलेपनं ज्ञात्वा सर्वलोकेषु शङ्करः । वेदानां गर्वनाशार्थं स्वशक्तिं चित्स्वरूपिणीम् ॥ (15)

उपसंहृतवात् शम्भुर्ब्राह्मणेषु स्थितान् चिरम् ।

வேதங்கள் இவ்வாறு இறுமாப்படைந்திருப்பதை அறிந்த சிவபெருமான் பிராஹ்மணர்களிடத்தில் வியாபித்திருக்கும் தனது சித்ஸ்வரூபிணியான சக்தியைத் தன்னுள் அடக்கிக் கொண்டார்.

विद्याशक्तौ हृतायां तु शिवेन ब्राह्मणादिषु ॥ (16)

ततो विप्रादयः सर्वे निस्तेजा वेदबाह्यकाः । अभवन् सर्वलोकेषु शतवर्षं महामुने ॥ (17)

தங்களது ஞானசக்தி மிகக் குறைந்ததால் பிராஹ்மணர்கள் தங்களுடைய தெய்வீக ஒளியை இழந்தனர். வைதிககருமங்களை அனுஷ்டிக்காமல் பல காலம் இருந்தனர்.

वेदार्थज्ञानरहितैः ब्राह्मणैर्वेदवर्जितैः । कर्माणि न कृतान्येव वेदोक्तानि महान्ति च ॥ (18)

அதனால் வேதங்களை ஓதாமலிருந்தனர். பல காலங்களுக்கு வைதிக கருமங்களும் அவர்களால் செய்யப்படவில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

वेदाश्च गलिता लोके वेदमार्गश्च नारदः । आद्यन्तानि च वेदानां मन्त्राणां च न कश्चन ॥ (19)

जानन् लोके स्वरूपाणि पुत्रास्ति कुत्रचिन्न हि ।

நாரதரே ! இதனால் உலகில் வேதங்கள் வழக்கொழிந்தன. வேதமந்திரங்களின் தொடக்கம் மற்றம் இறுதி ஆகியவற்றை அறிந்தவர்கள் ஒருவரும் இல்லாமல் போயினர்.

सर्वे नराश्च नार्यश्च स्वधर्मविमुखास्तदा ॥ (20)

यथेष्टचारिणो नित्यमवसन् पापचारिणः । ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शुद्राः संकरजातयः ॥ (21)

सर्वे समत्वं लोकेषु गताः कामचाराः सदा ।

உலகில் ஆண்களும் பெண்களும் தங்களது கடமைகளைச் செய்யத் தவறினர். அதனால் மனம் போனபடி நடந்து கொண்டனர். பிராஹ்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் மற்றும் இவர்களுடைய கலப்பின் மூலம் பிறந்தவர்கள் ஆகிய எல்லோரும் எவ்விதப் பாகுபாடுமின்றி இருந்து வந்தனர்.

अग्निहोत्राणि कर्माणि सर्वाणि विविधानि च ॥ (22)

हव्यकव्ये दैवपित्र्ये न कुर्वन्ति द्विजातयः ।

அக்கினிஹோத்ரம் முதலான வைதிககருமங்களையும், தேவர்கள் மற்றும் பிதிர்களுக்கும் செய்யவேண்டிய கருமங்களையும் பிராஹ்மணர்கள் செய்யத் தவறினார்கள்.

ओंकारश्च वषट्कारः स्वाहाकाराश्च सर्वशः ॥ (23)

न प्रवर्तन्ते लोकेषु ब्राह्मणादिषु नारद ।

நாரதரே ! ஓங்காரம், வஷட்காரம், ஸ்வாஹாகாரம் முதலான வைதிகமந்திரங்கள் பிராஹ்மணர்களிடத்தும், உலகிலும் முழங்கவில்லை.

ततो देवाः सगन्धर्वाः सिद्धाश्च परमर्षयः ॥ (24)

हविर्भागेषु हीनेषु क्षुधिता भृशकातराः । किमेतदिति सर्वेऽपि भयमापुर्महौजसः ॥ (25)

அதனால் தேவர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள் மற்றும் முனிவர்கள் யாகங்களில் கொடுக்கப்படும் ஹவிர்பாகம் இல்லாததினால் மிகவும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பசியால் வாடினர். இது என்ன நிலை என்று அனைவரும் பயமடைந்தனர்.

वासवोऽपि भयाविष्टः सर्वदेवैः समावृतः । ममान्तिकं मुनिश्रेष्ठ ह्यागतः पाकशासनः ॥ (26)

முனிவர்களுள் சிறந்தவனே ! வாஸவனான இந்திரனும் மிகவும் பயமுற்று என்னிடம் வந்தான்.

तेन साकमहं गत्वा वैकुण्ठभवनं हरेः । न्यवेदयमहं तस्मै द्युसदां भयमागतम् ॥ (27)

அவர்கள் எல்லோருடன் சேர்ந்து நானும் வைகுண்டத்தில் வீற்றிருக்கும் ஹரியிடம் சென்று வானவர்களுக்குப் பயமேற்பட்ட விதத்தைக் கூறினேன்.

सोऽपि ध्यात्वा मुहूर्तं तु मामुवाच हरिस्तदा । अहंकारेण लोकानामागतं शोकविह्वलम् ॥ (28)

அவரும் ஒரு முஹூர்த்தகாலம் யோசித்துவிட்டு என்னிடம் கூறினார்:

" அகங்காரத்தினால் உலகத்திற்கு இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்துள்ளது.

सर्वेऽपि श्रुतयो गत्वा मूर्त्तिमन्तो महीतले । श्रीउन्नतपुराधीशमाराध्यन्तु सदाशिवम् ॥ (29)

எல்லா வேதங்களும் உருவம் எடுத்துக் கொண்டு பூமியில் உன்னதபுரியில் வீற்றிருக்கும் ஸதாசிவப் பெருமானை முறைப்படி ஆராதனை செய்யவேண்டும்.

शम्भोरनुग्रहात् पश्चात् ईर्ष्याहंकारवर्जिताः । वर्त्तिष्यन्ति यथा पूर्वं सर्व लोकेषु शाश्वतम् ॥ (30)

" சிவபெருமானுடைய அருளால் பிறகு அவர்கள் பொறாமை, அகங்காரம் ஆகியன நீங்கி உலகில் முன்னைப் போல் விளங்குவர்" என்றார்.

एवमुक्त्वा हृषीकेशो ह्यन्तर्धानमुपेयिवान् । ततः परमहं देवैर्मम लोकमवाप्तवान् ॥ (31)

सर्वान् वेदान् समाहूय मया चोक्तमिदं वचः ।

இவ்வாறு கூறிவிட்டு விஷ்ணு மறைந்தார். பின்னர் நானும் ஏனைய தேவர்களுடன் எனதுலகுக்கு வந்து சேர்ந்தேன். வேதங்களை அழைத்து இவ்வாறு கூறினேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

यूयं वेदा मूर्तिमन्तो नियमेन समन्विताः ॥ (32)

श्रीउन्नतपुरे वेदा गत्वा साम्बं परात्परम् । पूजयध्वं महाभक्त्या श्रीउन्नतपुरीश्वरम् ॥ (33)

" ஓ வேதங்களே ! நீங்கள் உருவமெடுத்துக் கொண்டு பூலோகத்திலுள்ள உன்னதபுரத்திற்குச் சென்று ஸாம்பபரமேசுவரரான உன்னதபுரீசுவரரை நியமத்துடனும் பக்தியுடனும் வழிபடுங்கள் " .

एवमुक्ता मया वेदा भूलोके सहसा तदा । गत्वा साम्बं महाभक्त्या अर्चयामासुरीश्वरम् ॥ (34)

இவ்வாறு நான் கூறியவுடன் வேதங்கள் பூலோகத்திற்கு விரைவில் சென்று பரமேசுவரரை மிக பக்தியுடன் வழிபடத் தொடங்கின.

निराहारा निराक्रोधा महाभक्तिसमन्विताः । भस्मोद्धूलितसर्वाङ्गास्त्रिपुण्ड्राङ्कितमस्तकाः ॥ (35)

रुद्राक्षमालाभरणा रुद्रमन्त्रेण सर्वदा । पूजयित्वा महादेवं पूजान्ते शङ्करं स्तुवन् ॥ (36)

உணவு எதுவும் உட்கொள்ளாமலும், கோபம் முதலியவற்றை நீக்கியும், ஆழ்ந்த பக்தியுடன் உடல் முழுதும் திருநீறு பூசி, நெற்றியில் திருநீற்றினால் திரிபுண்ட்ரம் தரித்தும், ருத்திராக்ஷமாலைகளை அணிந்தும், இடையறாது ஸ்ரீ ருத்திரமந்திரத்தை ஜபம் செய்தும் பெருமானை வழிபட்டு வந்தன. பூஜையின் முடிவில் மஹாதேவராகிய உன்னதபுரீசுவரரை பக்தியுடன் ஸ்தோத்திரம் செய்தன.

वेदाः ॥

வேதங்கள் கூறின :

नमः सोमाय रुद्राय शङ्कराय महात्मने । नमः कालविनाशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (37)

உமையுடன் கூடியிருப்பவனுக்கும், சந்திரனைத் தலையில் அணிந்திருப்பவனுக்கும், ருத்திரனுக்கும், எல்லாவற்றிலும் உயர்ந்தவனுக்கும், அனைவருக்கும் நன்மையையே செய்பவனுக்கும் வணக்கம். காலனை அழித்தவனுக்கும், பக்தர்களின் துயரைத் துடைப்பவனுக்கும் வணக்கம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ब्रह्मविष्णुमहेन्द्राद्यैरुपास्याय नमो नमः । नमः कल्याणनिधये नमस्ते सूक्ष्मरूपिणे ॥ (38)

பிரஹ்மா, விஷ்ணு, மஹேந்திரன் முதலனோர்களால் வழிபடப் படுபவனுக்கும் வணக்கம். மங்களங்களுக்கெல்லாம் நிதியாய் இருப்பவனுக்கும் ஸூக்ஷ்மவடிவாயிருப்பவனுக்கும் வணக்கம்.

नमस्ते देवदेवेश भक्तानुग्रहकारिणे । सर्वार्थदात्रे भक्तानां विदुषामात्मरूपिणे ॥ (39)

தேவர்களின் தலைவர்களுக்கெல்லாம் ஒரே தலைவனாக விளங்குபவனுக்கும் பக்தர்களுக்கு அருள்புரிபவனுக்கும் வணக்கம். வேண்டிய எல்லாவற்றையும் அளிப்பவனுக்கும் அறிவிற் சிறந்தவர்களின் ஆன்மாவாக விளங்குபவனுக்கும் வணக்கம்.

यस्मान्नास्ति परं किञ्चिदपरं नैव विद्यते । न ज्यायो नत्वणीयान्श्च यस्मान्नास्ति महेश्वरात् ॥ (40)

स्तब्धो वृक्षो यथाकाशे तिष्ठत्येवं महेश्वरः । येन पूर्णमिदं सर्वं पुरुषेण महात्मना ॥ (41)

எந்த மஹேசுவரனுக்கு மேலானதாக வேறொன்றும் இல்லையோ, எவனை விட உயர்ந்ததோ அல்லது ஸூக்ஷ்மமானதோ இல்லையோ, எவன் எப்போதும் தன் நிலையிலிருந்து சிறிதும் மாறாமல் ஒரு மர்தைப் போல் விளங்குகிறானோ, சருவவியாபியான எந்த புருஷனால் இவ்வுலகங்களனைத்தும் வியாபிக்கப்பட்டுருக்கின்றதோ அவனுக்கு வணக்கம்.

संसारस्य परित्यागादेके मोक्षं प्रपेदिरे । न कर्मणा न प्रजया धनेन च तथा पुनः ॥ (42)

किन्तु यस्य परिज्ञानादमृतत्वं प्रपेदिरे । नाकं गुहायां निहितं यं विशन्ति यतीश्वराः ॥ (43)

वेदान्तज्ञाननिष्णाताः संन्यासाः शुद्धमानसाः । परान्तकाले संप्राप्ते ब्रह्मलोके परावृतात् ॥ (44)

परिमुच्यन्ति सर्वे यं विदित्वा महेश्वरम् ।

ஸம்ஸாரபந்தங்களை உதறிவிட்டு சிலர் மோக்ஷத்தை அடைகின்றனர். கருமங்களை மட்டுமே செய்வதாலோ, தங்களது வமிசத்தைப் பெருக்குவதாலோ, அளவற்ற பொருள்களைலோ மோக்ஷத்தை ஒருவன் அடைய இயலாது. ஆனால், எந்த பரம்பொருளை அறிவதால் மட்டுமே அமிர்தத்துவமென்னும் அழியாத நிலையை அடைய இயலுமோ அந்த பரம்பொருள் அனைத்து ஜீவராசிகளினுடைய இதயகுகையில் நீங்காது நிறைந்திருக்கின்றான். அந்த மஹேசுவரனை அறிந்த துறவிகள் வேதாந்த ஞானத்தினால் மனத்திலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கப் பெற்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உலகத்தின் இறுதியில் மாயையினின்றும் விடுபட்டு பிரஹ்மலோகம் எனப்படும் மோக்ஷத்தை அடைகிறார்கள்.

हृदयं पापरहितं परवेश्म च यत्तथा ॥ (45)

शरीरमध्यगं यच्च पुण्डरीकसमप्रभम् । तत्रापि हृदयं यच्च गगनं शोकवर्जितम् ॥ (46)

तदन्तर्यन्निविष्टं च सच्चिदानन्दविग्रहम् । अखण्डपरिपूर्णं च तदुपास्यं मनीषिभिः ॥ (47)

பாவங்களும் குற்றங்களுமற்ற இதயமானது மிக உயர்ந்த இருப்பிடம். மனித சரீரத்தின் மத்தியிலுள்ளதும், துன்பமே இல்லாததுமான அந்த இதய கமலத்தில் விளங்கும் ஸூக்ஷ்மமான ஆகாசத்தில் ஒளிவீசித் திகழும் ஸச்சிதானந்த வடிவான பரந்து விரிந்த பரம்பொருள் ஒன்றே ஞானிகளால் உபாசனை செய்யப்படுவது.

वेदादौ यः स्वरः प्रोक्तो वेदान्ते च प्रतिष्ठितः । तस्मात् प्रकृतिलीनाच्च यः परः स महेश्वरः ॥

(49)

வேதங்களில் ஸ்வரமாக எது போற்றப்படுகிறதோ, எது வேதங்களின் முடிவாகிய உபநிஷதங்களில் பரபிரஹ்மமாகத் தோத்திரம் செய்யப்படுகிறதோ, பிரகிருதியெனப்படும் சக்திக்கும் மேலானதாக விளங்கும் அவனே மஹேசுவரன்.

ऋतं सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम् । ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वै नमः ॥

नमामि शिरसा भक्त्या श्रीउन्नतपुरीश्वरम् ।

ரிதம் எனப்படும் உலகநியதியாகவும், ஸத்தியம் எனப்படும் உண்மையாகவும், பரபிரஹ்மமாககவும், எங்கும் வியாபித்திருக்கும் புருஷனாகவும், கரியநிறமும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகவும் விளங்குபவனாகவும், தனது வீரியத்தை எப்போதும் மேல்நோக்கியே உடையவனாகவும், இயற்கைக்கு மாறாக முக்கண்களையுடையவ னாகவும், விரிந்த பிரபஞ்ச வடிவாகத் திகழ்பவனாகவுமான பரமேசுவரனுக்கு வணக்கம். அப்படிப்பட்ட உன்னதபுரீசுவரனை மிகுந்த பக்தியுடன் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

महादेवाय रुद्राय ब्रह्मणे शङ्कराय ते । नमोन्नतपुरीशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (50)

மஹாதேவனுக்கும், ருத்திரனுக்கும், பரபிரஹ்மத்திற்கும், எல்லோருக்கும் மங்களத்தையே செய்பவனுக்கும், பக்தர்களின் துயரத்தை நீக்குபவனுமாகிய உன்னதபுரீசுவரனுக்கு வணக்கம்.

शर्वाय शूलिने तुभ्यमीशानाय कपर्दिने । नमोन्नतपुरीशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (51)

அம்புகளை எய்து பகைவர்களை வீழ்த்தும் சர்வனாகவும், சூலப்படையை ஏந்தியவனாகவும், விரிந்த சடைகளை உடையவனாகவும் விளங்கும் பக்தர்களின் துயரத்தை நீக்குபவனுமாகிய உன்னதபுரீசுவரனாகிய உனக்கு வணக்கம்.

भूतेशाय त्रिणेत्राय कामसंहारकारिणे । नमोन्नतपुरीशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (52)

பூதங்களுக்குத் தலைவனும், முக்கண்ணனும், காமனை எரித்தவனும், பக்தர்களின் துயரத்தை நீக்குபவனுமாகிய உன்னதபுரீசுவரனுக்கு வணக்கம்.

दक्षयज्ञविनाशाय त्रिपुरघ्नाय ते नमः । नमोन्नतपुरीशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (53)

தக்ஷனின் யாகத்தை அழித்தவனும், முப்புரங்களையும் எரித்தவனும், பக்தர்களின் துயரத்தை நீக்குபவனுமாகிய உன்னதபுரீசுவரனுக்கு வணக்கம்.

मृत्युञ्जयाय संहर्त्रे वामदेवाय ते नमः । नमोन्नतपुरीशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (54)

யமனை வென்றவனும், அனைத்துலகங்களையும் அழித்துத் தன்னுள் அடக்குபவனும், பக்தர்களின் துயரத்தை நீக்குபவனுமாகிய உன்னதபுரீசுவரனுக்கு வணக்கம்.

सर्वेशाय नमस्तुभ्यं सर्वलोकैकसाक्षिणे । नमोन्नतपुरीशाय भक्तानामार्त्तिहारिणे ॥ (55)

எல்லாவற்றுக்கும் ஒரே தலைவனும், அனைத்துலகங்களுக்கும் ஒரே சாக்ஷியானவனுக்கும் வணக்கம். பக்தர்களின் துயரத்தை நீக்குபவனாகிய உன்னதபுரீசுவரனுக்கு வணக்கம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

इति स्तुतो महादेवः शतरुद्रस्तवेन च । चतुर्वेदैर्महादेवः सुप्रीतः परमेश्वरः ॥ (56)

இவ்வாறு சதருத்திரம் முதலிய மந்திரங்களை ஓதி நான்கு வேதங்களாலும் தோத்திரம் செய்யப்பட்ட பரமேசுவரனாகிய மஹாதேவன் மிகவும் மனமகிழ்ந்தார்.

श्रुतीनां सहसा साक्षात् प्रादुर्भूतः स्वयं हरः । प्रादुर्भूतं हरं वेदा दृष्ट्वा तूर्णं पुनः स्तुवन् ॥ (57)

प्रणम्य परया भक्त्या विनयेन समन्विताः । स्वशिरोभिः सदा स्तुत्वा संस्थिताः शम्भुसन्निधौ ॥

(58)

உடனே அந்நால்வேதங்களின் முன்னிலையில் ஸாக்ஷாத் ஹரன் தோன்றினார். தோன்றிய ஹரனைக் கண்டவுடன் வேதங்கள் மனமகிழ்ந்து மீண்டும் பெருமானைத் தோத்திரம் செய்தன. மிகுந்த பக்தியுடனும், அடக்கத்துடனும் சிரம் தாழ்த்திப் பலவாறு வணங்கி பெருமான் சந்நிதியில் நின்றிருந்தன.

ततः प्रसन्नो भगवान् श्रीउन्नतपुरीश्वरः । उवाच वेदानखिलान् भक्ताभीष्टप्रदायकः ॥ (59)

பின்னர் மிக்க மகிழ்ச்சியுடன் பகவானும், பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவருமான உன்னதபுரீசுவரர் அவ்வேதங்ரளை நோக்கிக் கூறினார் :

युष्माकं पूजया वेदाः स्तोत्रेण च विशेषतः । प्रीतोऽस्मि वरमद्यैव वृणीध्वं प्रददाम्यहम् ॥ (60)

" வேதங்களே ! நீங்கள் செய்த பூஜையினாலும், சிறந்த தோத்திரங்களாலும் மனம் மகிழ்ச்சியடைந்தேன். நீங்கள் வரங்களை வேண்டுங்கள். நான் அளிக்கிறேன் " என்றார்.

श्रुतयो देवदेवस्य श्रुत्वा वाक्यमनुत्तमम् । उपमा रहिताः सर्वे श्रीउन्नतपुरीश्वरम् ॥ (62)

वयं हताश्च महता गर्वेण परमेश्वर । क्षन्तुमर्हसि विश्वेश अस्माभिः कृतमागसम् ॥ (63)

தேவதேவரின் ஒப்பற்ற வாக்கியங்களைக் கேட்ட உயர்ந்த வேதங்கள் ஸ்ரீ உன்னதபுரீசுவரரை வணங்கிக் கூறினர் : " பரமேசுவரரே ! நாங்கள் மிகவும் கருவமடைந்து செய்யக் கூடாத பாவங்களைச் செய்தோம். அகில உலகங்களுக்கும் நாயகனே ! எங்களின் பாவங்களைப் பொறுத்தருள வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पाहि पाहि जगन्नाथ कृपयास्मान् दयानिधे ।

கருணைக் கடலே ! உலகநாயகனே ! எங்களை தயைகூர்ந்து காப்பாற்றுங்கள்.

भवतापहृता शक्तिश्चिद्रूपा तव देहिनाम् ॥(64)

पतिताः स्म वयं तेन सर्वलोकैर्निराकृताः । चिच्छक्तिं दययास्मासु लोके विसृज पूर्ववत् ॥(65)

इदमेव वरं स्वामिन् अस्माकं देहि शङ्कर ।

மனிதர்களிடத்திலிருந்து தங்களால் எடுத்துக் கொள்ளப்பட்ட சித்சக்தியை எங்கள் மீதுள்ள கருணையினால் மீண்டும் மனிதரிகளிடம் முன்போல் திரும்ப அளிக்கவேண்டுகிறோம். மனிதர்கள் அச்சக்தியை இழந்ததால் நாங்கள் அவர்களால் நிராகரிக்கப்பட்டு இழிந்த நிலையை அடைந்துவிட்டோம். இந்த வரம் ஒன்றை மட்டும் அளிக்க வேண்டுகிறோம் " .

तच्छ्रुत्वा वचस्तेषां वेदनाथो जगत्पतिः ॥(66)

तथास्त्विति महादेवस्तां शक्तिं पूर्ववत् पुनः । सर्वेषामपि लोकानामदाद्दिव्यां महेश्वरः ॥(67)

வேதநாயகனும், எல்லா உலகங்களுக்கும் நாயகனாகிய மஹாதேவன் வேதங்களின் வேண்டுகோளைக் கேட்டு அவ்வாறே ஆகட்டும் எனத் திருவுளம் கொண்டு மீண்டும் அனைத்து மக்களிடமும் தனது தெய்வீக சக்தியை அளித்தார்.

श्रीउन्नतपुराधीशं नत्वा स्तुत्वा च सादरम् । ब्रह्मणानां च वेदानां मुखे स्थित्वा यथा पुरा ॥(68)

संस्थिता निगमाः सर्वे सर्वशास्त्रैः समन्विताः ।

மிகவும் மனமகிழ்ந்த வேதங்கள் உன்னதபுரீசுவரரை வணங்கி தோத்திரம் செய்து முன்போலவே எல்லா சாத்திரங்களுடன் கூடி பிராஹ்மணர்களின் திருவாக்கில் நிலைத்து நின்றன.

ब्रह्मा ॥

பிரஹ்மா தொடர்ந்தார் :

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

एवमाराधितः शम्भुर्वेदै स्तोत्रैश्च नारद ॥ (69)

उक्तमद्य त्वया पृष्टं वेदानां चरितं महत् ।

" நாரதரே ! இந்த வகையில் வேதங்களால் மிக்க பக்தியுடன் தோத்திரம் முதலியவைகளால் சம்புவானவர் ஆராதிக்கப்பட்டதும் பெருமை பொருந்தியதுமான கதையை நீ கேட்க நான் கூறினேன்.

अतःपरं कण्वयोगिचरितं च महाद्भुतम् ॥ (70)

तद्वक्ष्ये नारदाद्यैव सावधानमनाः शृणु ।

அடுத்ததாகக் கண்வயோகியின் அற்புதமான கதையைக் கூறுகிறேன். நாரதரே ! மிகக் கவனத்துடன் கேள்.

यः पठेदिदमध्यायं शृणुयाद्वा समाहितः ॥ (71)

वेदवेदाङ्गतत्वज्ञः सर्वशास्त्रविशारदः । व्याख्यातं सर्वशास्त्राणां वेदमार्गप्रवर्तकः ॥ (72)

எவனொருவன் இந்த அத்தியாயத்தைப் படிக்கிறானோ அல்லது மன ஒருமைப்பாட்டுடன் கேட்கிறானோ அவன் வேதங்கள், வேதாங்கங்கள் ஆகியவற்றின் உட்பொருளை அறிந்தவனாகிறான். அனைத்து சாத்திரங்களிலும் தேர்ச்சி பெறுகிறான். அவனால் எல்லா சாத்திரங்களும் விளக்கம் செய்யப்பட்டனவாகின்றன. வேதநெறியை அவன் பரப்புகிறான்.

सर्वलोकेषु विख्यातश्चतुष्षष्टिकलान्वितः । वेदान्तज्ञाननिरतः सर्वलोकगुरुर्भवेत् ॥ (73)

எல்லா உலகங்களிலும் அவன் பெரும் புகழ் அடைகிறான். அறுபத்துநான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்று, வேதாந்த ஞானத்தைப் பெற்று அனைத்துலகங்களுக்கும் புருவாகத் திகழ்கிறான்.

पुत्रैः पौत्रैः प्रपौत्रैश्च दारैश्च सहितस्तदा । इहलोके महाभोगान् भुक्त्वा चान्ते शिवं व्रजेत् ॥

புத்திரன், பேரன், கொள்ளுப்பேரன் ஆகிய சந்ததிகளை அடைந்து மனைவி மக்களுடன் இவ்வுலகில் எல்லா போகங்களையும் அனுபவித்து பிறகு முடிவில் சிவத்தை அடைகிறான்.

॥ इति ब्रह्माण्डपुराणे ब्रह्मनारदसंवादे श्रीउन्नतपुरीश्वरमाहात्म्ये वेदपूजाविधानं नाम षष्ठोऽध्यायः ॥

இவ்வாறு பிரஹ்மாண்டபுராணத்தில் பிரஹ்மாவுக்கும் நாரதருக்குமிடையேயான சம்வாதத்தில் உன்னதபுரிமாஹாத்மியத்தில் வேதங்கள் சிவபெருமானைப் பூஜை செய்த ஆறாவது அத்தியாயம் முற்றுப் பெற்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாப்புலர் ஆப்செட், திருவையாறு செல் : 94439 41886

Center for Shaiva Studies, Pondicherry Collection